# எதிரொலி

ஆஸ்திரேலியா

ETHIROLI

குரல் 03 அதிர்வு 28 ஒக்ரோபர் 2019 ethirolimelbourne@gmail.com தொ.பே:1800 960 162



Transco CARGO

CHRISTMAS SHIPPING SCHEDULE

| CUT OFF | SL ARRIVAL |
|---|---|
| OCT 05 | NOV 13 |
| OCT 12 | NOV 19* |
| OCT 19 | NOV 26 |
| OCT 26 | DEC 03* |
| NOV 02 | DEC 10 |
| NOV 09 | DEC 17* |

CAMPBELLFIELD - DANDENONG -

1300 187 267 | TRANSCOCARGO.COM.AU






# மீண்டும் திரும்பும் கோட்டாபய(ம்)?


UNBEATABLE RATES

FIRST HOME BUYER & REFINANCE SPECIALS

$ 2,000 Special refinance rebate to cover your switching costs #

Lowest Rates From

2.94% # p.a.

"Limited time offer"

OPULENT FINANCE | GEARING YOUR FUTURE

M: 0423 272 600 T: (03) 8838 8726

# Subject to Lender Credit Policy, LVR, LMI and other special conditions related to individual Banks' offers.

Australian Credit Licence Number 389087



Waverley Toyota - You'll LOVE us!

TOYOTA

Pre Owned + New Vehicles



Buy with Confidence

Proud to be Melbourne's longest serving automotive group

Finance Available!

- Self Employed & ABN Holders
- Student Visa's
- Overseas Licence
- Low Deposit
- New Employment
- New Arrivals

SPRINGVALE ROAD WAVERLEY ROAD NEW & USED

DL11333



All enquires contact Jason Wijeratne on (03) 8544 2288 or 0422 974 499

We speak your language

Oh what a feeling!


ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்

OPULENT ACCOUNTANTS
GEARING YOUR FUTURE



# Why Do You Need a good Tax Agent?

TAX TIME 2019

As an individual tax payer or a sole trader, you'll need professional advice to get your tax affairs right from the start and build up a long lasting relationship which will give you benefits not only when you are in the Uni, but when you are out and working in the industry too. Our Finance team can help you with your FIRST HOME when you are ready to buy.

## We can ;

- Help you to claim maximum expenses you are eligible
- Advice and help getting your NEW ABN to start your own business
- Help you to apply for a Tax file number if you still haven't got one
- Help you with log books and information on vehicle expenses
- Help you if you started UBER as part time and,
- Help you with any other taxation or accounting advice you need on going.

Please call Dayan for friendly service
**0423 272 600**
**03 88388726**

**Dayan Kasturiratna**
**CTA FIPA FFA AMC**

Principal Accountant & Chartered Tax Adviser
BSc MCom MIntBus DipApp Tax DipFinSer(F/MBM)

Suite 4, 251, Blackburn Road, (Ent. via Doynton Parade)
Mount Waverley VIC 3149
PO Box 3090 Syndal VIC 3149

E dayan@opulentaccountants.com.au
W www.opulentaccountants.com.au

Visit Us Online

THE TAX INSTITUTE
CHARTERED TAX ADVISER

TAX PRACTITIONERS BOARD REGISTERED
Tax agent 76824015

xero CERTIFIED ADVISOR

# OPULENT FINANCE

GEARING YOUR FUTURE



Lowest Rates From

## 2.94%# p.a.

"Limited time offer"

# UNBEATABLE RATES

## FIRST HOME BUYER & REFINANCE SPECIALS

**FIRST HOME BUYERS**
Buy your dream home with just 5% deposit.#

- **INVESTMENTS PROPERTY LOANS**
  Free TAX advice to maximise your TAX REFUNDS
- **DOCTORS, DENTISTS, VETS, ACCOUNTANTS, LAWYERS**
  Don't pay mortgage insurance up to 90% LVR #
- **AUSTRALIA WIDE SERVICE**
  VIC, NSW, QLD, WA, SA, NT, ACT, TAS

**$ 2,000** Special refinance rebate to cover your switching costs #

- Take CASH OUT to pay the deposit on your next house.
- No Savings? No worries, buy with family guarantee.
- Consolidate your personal loans & credit cards.

**Please call Dayan for friendly service**



**Dayan Kasturiratna**
Charted Tax Advisor (CTA), FIPA, FFA, AMC
B.Sc.M.Com M.IntBus DipFinServ
Owner / Senior Mortgage Consultant

Suite 4, 251 Blackburn Road
Mount Waverley VIC 3149
(Near the Syndal Station)

Email: dayan@opulentfinance.com.au | Web: www.opulentfinance.com.au

Visit Us Online

M: 0423 272 600 | T: (03) 8838 8726

# Subject to Lender Credit Policy, LVR, LMI and other special conditions related to individual Banks' offers.

Australian Credit Licence Number 389087

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI

ஒக்ரோபர் 2019



# ஆரோகணிக்கும் தேர்தல் ராகங்கள் ‘அரோகரா’ போடும் அரசியல் பூதங்கள்

● லயத்துப்பொடியன்

அடுத்த தேர்தல் திருவிழா ஆரம்பமாகிவிட்டது.

ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்புமனுக்களை ஒக்டோபர் 7 ஆம் திகதி தாக்கல் செய்த கையோடு தேர்தல் பரப்புரைகளை பெருமெடுப்பில் முன்னெடுப்பதற்கு பிரதான அரசியல் கட்சிகள் வியூகம் வகுத்துள்ளன.

மறுபுறத்தில் கட்சித்தாவல்கள், காட்டிக் கொடுப்புகள்எனபச்சோந்தி அரசியலுக்கே உரித்தான சம்பவங்களும் தலைவிரித்தாட தொடங்கியிருக்கின்றன.

இதனால், இனிவரும் காலப்பகுதியில் கொழும்பு அரசியல் கொதிநிலையிலேயே காணப்படும் என்பதுடன், பரபரப்புக்கும், விறுவிறுப்புக்கும் பஞ்சமில்லாதவகையில் உச்சம் தொடும் என ஊகிக்கப்பட்டுள்ளது.

**வரலாற்றில் திருப்பம்**

இலங்கையில் 1978 ஆம் ஆண்டில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை அறிமுகப்படுத்தப்பட்டிருந்தாலும் 1982 ஆம் ஆண்டிலேயே முதலாவது ஜனாதிபதி தேர்தல் நடைபெற்றது.

அதன்பின்னர் 1988, 1994, 1999, 2005. 2010, 2015 ஆகிய ஆண்டுகளில் ஜனாதிபதி தேர்தல்கள் இடம்பெற்றிருந்தாலும் - இம்முறை நடைபெறும் தேர்தலே இலங்கை அரசியல் வரலாற்றில் புதிய சில சம்பவங்களுக்கு களம் அமைத்துள்ளது.

ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகிய பதவிகளை நடைமுறையில் வகிப்பவர்கள் போட்டியிடாத முதலாவது ஜனாதிபதி தேர்தலாகவும் அதிகளவு வேட்பாளர்கள் போட்டியிடுகின்ற தேர்தலாகவும் இது பார்க்கப்படுகின்றது.

இதன்படி 41 வேட்பாளர்கள்வேட்புமனுக்களை தாக்கல் செய்வதற்கான கட்டுப்பணத்தை தேர்தல் ஆணைக்குழுவில் செலுத்தியிருந்தார்கள். எனினும், இவர்களில் 35 பேர் மாத்திரமே வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

இம்முறை தேர்தலில், 20 வருடங்களுக்கு பிறகு பெண் வேட்பாளர் ஒருவர் களமிறங்கியுள்ளார்.

வழக்கமாக காணப்படுகின்ற இரு கட்சிப்போட்டி எனப்படுகின்ற “சிறிலங்கா சுதந்திரக்கட்சி - ஐக்கிய தேசியக் கட்சி” என்ற நிலை மாறி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி, சிறிலங்கா பொதுஜன பெரமுன” என்ற போட்டி நிலை உருவெடுத்துள்ளது.

**கோட்டாவுக்கு பொறி**

பெரும் எதிர்பார்ப்புடன் களமிறங்கியுள்ள கோட்டாபய ராஜபக்சவின் குடியுரிமைக்கு இடைக்கால தடை உத்தரவைப் பிறப்பிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டதையடுத்து, அவர் ஜனாதிபதி தேர்தலிலேயே வெற்றிபெற்று அரியணையேறிவிட்டார் என்பதுபோல அவரது ஆதரவாளர்கள் பட்டாசு கொளுத்தி பெரும் ஆரவாரத்தில் ஈடுபட்டனர்.

“கோட்டாபய நிரபராதி, அவர் எவ்வித குற்றமும் இழைக்கவில்லை” - என்றதொரு விம்பத்தை மக்கள் மத்தியில் உருவாக்கி, வெள்ளைவேன் கடத்தல், ஊடகவியலாளர்கள்படுகொலை, வலிந்துகாணாமலாக்கப்பட்ட சம்பவங்கள்உட்பட மேலும் பல விடயங்களுக்க வெள்ளையடிப்புச் செய்து - அவற்றிலிருந்தும் கோட்டாவுக்கு விடுதலையளித்து - அவரை மீட்பராக காட்டுவது மஹிந்த அணியின் பிரச்சார யுக்திகளுள் ஒன்றாக இருக்கின்றது.

சிங்கள மக்கள் மத்தியில் கோட்டா ஆதரவு அலை வீசினாலும் கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் அவருக்கான ஈர்ப்பு கணிசமான வீழ்ச்சியையும் கண்டிருக்கிறது என்பதை பகுத்தறிய முடிகின்றது.

2005 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் மஹிந்த ராஜபக்ச 50.29 வீத வாக்குகளையே பெற்றிருந்தார்.

2010 இல்நடைபெற்றதேர்தலின்போது போர் வெற்றி, இனவாதம் என்றெல்லாம் சிங்கள, பௌத்த மக்களின் வாக்குகளை முழுமையாக வேட்டையாடுவதற்கான அத்தனை அஸ்திரங்களையும் மஹிந்தவும் அவரது சகாக்களும் ஏவினர். இருந்தும் 57.66 வீதவாக்குகளையே மஹிந்தவால்பெறமுடிந்தது. பொன்சேக்காவை களமிறக்கியதாலேயே மஹிந்தவால் வரலாற்று வெற்றியை பதிவு செய்யமுடியாமல்போனது.

இந்நிலையில், ஈஸ்டர் தாக்குதலுக்கு பின்னர் நாட்டின் தேசிய பாதுகாப்பை முன்னிலைப்படுத்தியே கோட்டாபய ராஜபக்சவை சிறிலங்கா பொதுஜன பெரமுன களமிறக்கியுள்ளது.

இதுவரையில் தான் உரையாற்றிய அத்தனை கூட்டங்களிலும் தேசிய பாதுகாப்பு பற்றியே கோட்டாபய அதிகம் கொக்கரித்தவண்ணமுள்ளார். 100 வசனங்கள் பேசினால் அதில் குறைந்தபட்சம் 3 தடவைகளேனும் தேசிய பாதுகாப்பை உச்சரிக்கும்வகையிலேயே அவரின்உரைகள் அமைந்துள்ளன.

இதனால் நடுநிலைப்போக்கை கடைப்பிடித்துவரும் சிங்கள, பௌத்த மக்கள்கூட தற்போது மாற்றுவழி குறித்து சிந்திக்க தொடங்கியுள்ளனர்.

அதுமட்டுமல்ல முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் மகேஸ் சேனாநாயக்க தேர்தலில் களமிறங்கியிருப்பதால் கோட்டாவுக்கான இராணுவ குடும்பத்தின் வாக்கு வங்கியில் அது எப்படியும் தாக்கத்தை செலுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மறுபுறத்தில், தீவிர சிங்கள, பௌத்த செயற்பாட்டாளர்களை கவர்ந்திழுக்கும் வல்லமை சம்பிக்கவுக்கு இருக்கின்றது.

கிராம மட்டத்திலுள்ள சிங்கள, பௌத்த மக்கள் சஜித்தின் மனித நேயத்துக்கு முக்கியத்துவம் வழங்குவதை காண - கேட்கக் கூடியதாக இருக்கின்றது.

ஆகமொத்தத்தில், கோட்டாவுக்கு எதிராக புலிகளின் பாணியில் ‘பொக்ஸ்’ அடிக்கப்பட்டுள்ளது என்றே கூறவேண்டும்.

இதன்பின்புலத்தில்வெளிநாட்டுசக்திகளும் செயற்படுகின்றன என்ற பரவலான கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த சவால்களையெல்லாம் தாண்டி 50 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகளை கோட்டாபய ராஜபக்சராஜபக்சஇலகுவில் பெற்றுவிடுவாரா என்ற வினாவுக்கு விடையறிய நவம்பர் 17 ஆம் திகதிவரை காத்திருக்கவேண்டும்.

**சஜித் முன்னாலுள்ள சவால்!**

ஐக்கிய தேசியக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவிடம் பல ஜனநாயகப் பண்புகள் காணப்பட்டாலும் தமிழர்களுக்கான அரசியல் தீர்வுத்திட்ட விடயத்தில் அவரும், கோட்டாவும் இப்போதைக்குஒருமித்தநிலைப்பாட்டிலேயே காணப்படுகின்றனர்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தை மையப்படுத்தியே தீர்வு என கோட்டா அறிவித்துள்ளநிலையில், பிளவுபடாத - அதேபோல் பிரிக்கமுடியாத - நாட்டுக்குள் அதிகாரப்பகிர்வுக்கு தயார் எனசஜித்தும்குறிப்பிட்டுள்ளார். அதாவது, சஜித்தின் மனதிலும் ‘13’ தான் உள்ளது. இருவரும் தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்ட பின்னரே தமிழர் விடயத்தில் உண்மை நிலைப்பாட்டை அறியலாம்.

ரணசிங்க பிரேமதாசவுக்கு பின்னர் ஐக்கியதேசியக்கட்சியிலிருந்து இன்னும்ஜனாதிபதியொருவர்தெரிவாகவில்லை. 2010, 15 களில் பொதுவேட்பாளர்களே களமிறக்கப்பட்டனர். ஆனால், இம்முறையே ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் ஒருவர் போட்டியிடுகின்றார்.

அக்கட்சியின் அடிமட்ட அரசியல் தொண்டர்களுக்குஇது புத்துணர்ச்சியை வழங்கியுள்ளதுடன், கட்சியைவிட்டு வெளியேறிய பலர் தாய்வீடு திரும்புவதற்கும் காரணமாக அமைந்துள்ளது.

பெரும் இழுத்தடிப்புகளுக்கு மத்தியிலேயே சஜித்துக்கான வாய்ப்பை வழங்குவதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பச்சைக்கொடி காட்டினார். இது தந்திரோபாய விட்டுக்கொடுப்பாகவும் கருதப்படுகின்றது. ஆனால், கட்சியின் தலைமைத்துவம் ரணில் வசமே தொடர்ந்து இருக்கின்றது.

எனவே, இத்தேர்தலில்கட்டாயம்வெற்றிபெற்றால்தான் சஜித்தின் வருங்கால அரசியல் சுபீட்சமாக அமையும். இல்லாவிட்டால் ரணில் வேறுசில அதிரடி நடவடிக்கைகளை எடுக்ககூடும்.

இவ்வாறு சஜித்தின் முன்னிலையில் பல சவால்கள் இருக்கின்றன. அவற்றையெல்லாம்அவர்எவ்வாறுசமாளிப்பார்என்பதை காத்திருந்துதான் பார்க்கவேண்டியுள்ளது.

**அநுரவும் ஏனைய கட்சிகளும்**

இம்முறை ஜனாதிபதி தேர்தலில் பல கட்சிகள் அதிலும் குறிப்பாக பிரபலமான நபர்கள் போட்டியிடுவதால் பிரதான கட்சிகளின் வேட்பாளர்களுக்கு 50 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகளை பெறமுடியுமா என்ற கேள்வியும் எழுகின்றது.

அவ்வாறு நடைபெறும்பட்சத்தில் இரண்டாவது விருப்பு வாக்கே வெற்றியை தீர்மானிக்கும். உள்ளாட்சி, மாகாண மற்றும் பொதுத்தேர்தல்களின்போது மூன்று விருப்பு வாக்குகளைப் பயன்படுத்துவதுபோல் ஜனாதிபதி தேர்தலிலும் பயன்படுத்த முடியும்.

சின்னங்களுக்கு முன்னால் 1, 2, 3 என குறிப்பிடுவதன்மூலம் மூன்று வாக்குகளையும் பதிவுசெய்யலாம். (A 1. B2. C3)

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்கவுக்கு தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் மத்தியில் செல்வாக்கு இருப்பதால் வடக்கு, கிழக்கு, மலையகம் உள்ளிட்ட பகுதிகளிலும் வாக்குகள் விழக்கூடும். வெற்றியை நோக்கி பயணிக்க முடியாவிட்டாலும், இதுவரை காலமும் இல்லாத வகையில்மூன்றாம் வேட்பாளருக்கான அதிக வாக்குகளை அவர் பெறுவார் என கருத்து கணிப்புகள் கூறுகின்றன.

இதற்கிடையில் தமிழ் வேட்பாளர்கள் என்று சிலர் குதிக்க, தேர்தல் புறக்கணிப்பு என்று சிலர் சலசலக்க தமிழர் தரப்பில் வேறுவகையான பரபரப்புக்கள் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மணித்தாயலமும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அவை தொடர்பில் எதையும் இந்தப்பத்தி எழுதி முடியும்வரை ஊகிக்கமுடியாமலே உள்ளது.


MKS
MKS Spices'n Things
Finest Quality Guaranteed
We bring the authentic taste of spices and cooking ingredients to you, find out more...
GROCERIES
BOLLYWOOD ENTERTAINMENT
DINE IN
ASHWOOD
382 Warrigal Road
9885 9932
DANDENONG
23 Pultney Street
9701 3165
EPPING
1/88 Cooper St
9424 9162
PRESTON
258 High Street
9416 9011
St ALBANS
276 Main Road East
9366 4141
www.mks.net.au

எதிரொலி
மெல்பேர்ண் ETHIROLI
குரல்:03 அதிர்வு: 28 ஒக்ரோபர் 2019 தொ.பே:1800960162

# மர்மான மாபியா குழுக்கள்

இலங்கையில் போர் முடிந்த பிறகு புலம்பெயர்ந்த மண்ணில் அதிகம் தோற்றம்பெற்ற விடயங்களில் ஒன்று – அளவுக்கதிகமான செய்தி இணையத்தளங்கள். மற்றையது – ஏகப்பட்ட பழைய மாணவர் சங்கங்களும் அவற்றின் நிகழ்வுகளும். இந்த இரண்டு விடயங்களுமே சமூகத்துக்கு நன்மை கொடுக்கக்கூடியவைதான்.

ஆனால், உண்மையில் இவை நல்லதை செய்கின்றனவா என்பது இன்று அச்சம் தரும் கேள்வியாக இருக்கிறது.

புலம்பெயர்ந்த மண்ணில் கடந்த பத்து வருடங்களில் முளைத்த பல பழைய மாணவர் சங்கங்கள் பல தரப்பினருக்கும் மிகப் பாதுகாப்பானதொரு அமைப்பாக மாறியிக்கிறது.

அதாவது, தாயகத்தோடு தொடர்புகளை பேணுவதற்கும் அங்கு நலத்திட்டங்களை முன்னெடுப்பதற்கும் வெளிப்படையாக தங்கள் அரசியல் முகத்தை காண்பித்து தம்மை பிரச்சினையின் பிரதிநிதிகளாக முன்னிறுத்திக்கொள்ளாமல் தாயகத்தோடு ஊடாடுவதற்கும் பழைய மாணவர் சங்கங்கள் புனிதம் நிறைந்த அமைப்புக்களாக உள்ளன.

இப்படியான பழைய மாணவர் சங்கங்கள் அனைத்தினதும் நோக்கம் தமது பாடசாலைகளுக்கு உதவி செய்வது என்ற ஒற்றைக்கருப்பொருளை கொண்டிருந்தாலும் எல்லா அமைப்புக்களும் தங்களது நோக்கத்துக்கு நேர்மையாக செயற்படுகின்றனவா?

இன்னொரு புறத்தில், அளவுக்கதிகமாக தாங்கள் செயல்திறனோடு இயங்குபவையாக காண்பித்துக்கொள்ளும் பழைய மாணவர் சங்கங்கள் தாயகத்திலுள்ள பாடசாலைகளின் நிர்வாகத்தில் பாரதூரமாக செல்வாக்கு செலுத்துபவையாக சதிராடவும் செய்கின்றன.

ஆக, இரண்டு அந்தங்களின் வழியாகவும் தாயகத்திலுள்ள பாடசாலைகளை புலம்பெயர்ந்த பழைய மாணவர் சங்கங்கள் பந்தாடப்பார்க்கின்றன. அல்லது, கேட்டுக்கேள்வியற்ற செல்வாக்கினால் வளைத்து வைக்கப் பார்க்கின்றன.

இது எவ்வளவு தூரம், ஒரு கல்விச்செயற்பாட்டை மேற்கொள்ளும் நிறுவனங்களின் இயங்குநிலைக்கு ஆரோக்கியமானதாக அமையும் என்பது ஆழ நோக்கப்படவேண்டியது.

பழைய மாணவர் சங்கங்கள் எனப்படுபவை, பாடசாலையின் நிர்வாகத்துக்கும் அதன் செயற்பாட்டுக்கும் பங்கம் விளைவிக்காத – செல்வாக்கு செலுத்தாத – மூக்கை நுழைக்காத – அமைப்பாக செயற்படவேண்டியதே தவிர –

நிழல் அரசாங்கத்தை நடத்துகின்ற ஒரு மாபியா குழு போல செயற்படலாகாது.

ஒரு பாடசாலையின் நிர்வாகம் எனப்படுவது அந்தந்த இடங்கள் சார்ந்து குறித்த நிர்வாக ஒழுங்குமுறையின் கீழ் இயங்குபவை. அதற்கான செயற்பாட்டுக்கோவையின் ஊடாக அந்த நிர்வாக அலகுகள் இயங்கும்வகையில்தான் அமைக்கப்பட்டிருக்கின்றன.

ஆனால், பாடசாலைகளுக்கான அபிவிருத்தி நிதிகளை கொடுக்கிறோம் – அங்குள்ள மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவுகிறோம் என்பதற்காக அந்த பாடசாலைகளின் நிர்வாகத்தை ஒட்டுமொத்தமாக குத்தகைக்கு எடுத்துவைத்துக் கொள்வதற்கு எண்ணுவதும் –

அதன் சகல நடவடிக்கைகளையும் வெளிநாடுகளிலிருந்து 'ரிமோர்ட் கொன்ரோல்' மூலம் கட்டுப்படுத்திவிடமுடியும் என்று எண்ணுவதும் –

அந்த பாடசாலையின் பெயரால் எந்தக்கோமளித்தனங்களை வெளிநாடுகளில் செய்தாலும் கல்வியின் பெயரால் மக்கள் மத்தியில் அவை செல்லுபடியாகிவிடும் என்று எண்ணுவதும் –


பெருங்கேவலமும் இனிவரும் காலங்களில் தடைபோடப்படவேண்டியதும் ஆகும்.

இதற்கு முற்றுப்புள்ளியிடவேண்டிய காலத்துக்கு வந்துவிட்டதாகவோ உணரவேண்டியுள்ளது.

# அகதிகளின் வலி சுமந்த வாழ்க்கை

இலங்கையில் இராணுவ அடக்குமுறைகளிலிருந்து தப்பிக்க ஆஸ்திரேலியாவுக்கு படகு மூலம் வந்து அகதி அந்தஸ்து கோரிய பலர் பல வருடங்களாக நிரந்தர வாழ்க்கையை தொடர்வதற்காக போராடிக்கொண்டிருக்கின்றனர். இவ்வாறு தஞ்சம் கோரி வந்து தமது இருப்புக்காக போராடிக் கொண்டிருப்பவர்களின் கதைகளை "அகதிகளின் வலி சுமந்த வாழ்க்கை" - என்ற பகுதி ஊடாக இங்கு கொண்டுவரவிருக்கிறோம்.

இம்முறை பலரட் பகுதியில் வசிக்கும் அகதி கோரிக்கையாளரின் வாக்குமூலம் பிரசுரமாகிறது.



எனது பெயர் கண்ணன். 2008 ஆம் எனக்கு முதலாவது மகள் பிறப்பதற்கு சரியாக இரண்டு வாரங்களே இருந்தன. அந்த குழந்தையின் வரவுக்காக எண்ணி மிகவும் சந்தோசமாக இருந்தேன். ஆனாலும் அந்த சந்தோசத்தை அனுபவிக்க நாட்டின் சூழ்நிலை விடவில்லை. நாட்டைவிட்டு வெளியேறி உயிர் வாழ்வதற்காக மலேசியாவுக்கு சென்றேன்.

மலேசியாவில் எனது வாழ்க்கை நாட்களாக மாதங்களாக ஆண்டுகளாக உருண்டோடின. நிச்சயமற்ற வாழ்வை வாழ்ந்துகொண்டிருந்த போது, 2012 ஆம் ஆண்டு கிடைத்த சந்தர்ப்பத்தில் பல கனவுகளுடன் "வாழ் அல்லது கடலிலே சா" என்ற திடத்துடன் ஆஸ்திரேலியாவுக்கு படகேறி வந்தேன்.

ஆஸ்திரேலியாவுக்கு படகு மூலம் வந்து சேர்ந்து ஏழு வருடங்கள் முடிவுற்றுவிட்டன. ஆனாலும், இங்கு நிரந்தரமான வாழ்வை தொடர முடியவில்லை. எமது வாழ்க்கை எங்கே செல்கிறது. எமது பிள்ளைகளின் எதிர்காலம் எவ்வாறு அமையப் போகிறது என்ற கேள்விகளே என்னை தினம் தினம் வதைத்துக்கொண்டிருக்கின்றன.

2014 ஆம் ஆண்டு எனக்கு வேலை செய்யும் அனுமதி மறுக்கப்பட்டு, மத்திய இணைப்புச் செயலக சலுகைகளும் நிறுத்தப்பட்டுவிட்டது. எதிர்கால கனவுகள் அனைத்தும் அழிந்து மதில்மேற் பூனையாக திரும்பிச் செல்லமுடியாலும் இங்கு நிரந்தரமான வாழ்கையை தொடர முடியாமலும் இன்றுவரை இரண்டுங் கெட்ட நிலையில் தவித்துவருகிறேன்.

இந்த நாட்டுக்கு படகில் வராத ஒருசிலர் எங்களை "படகில் வந்தவர்கள்" என்று ஏளனமாக பார்க்கின்றனர். அத்துடன் அவர்களில் சிலர் "தம்பி நாங்கள் வரேக்க நாட்டுல சண்ட. இப்ப இல்லத் தானே, நீங்கள் அங்க இருக்கலாம்தானே" - என்கிறார்கள். அப்படியென்றால், "நீங்கள் போய் இருங்கள்" - என்று நான் பதிலளிப்பது வழக்கமாகப் போய்விட்டது.

இவ்வாறான சொல்லெணாத் துயர்களுடன் வாழும் எங்களை இங்குள்ள ஒருசில தமிழர்கள் மனதளவில் காயப்படுத்தும் நிலையில் ஆஸ்திரேலியாவும் எங்களை வதைத்துக் கொண்டிருக்கிறது.

இதேவேளை 2016 ஆம் ஆண்டு குடிவரவுத் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய 8 ஆயிரத்து 400 டொலர்களை தந்துதவிய இலங்கைத் தமிழ் நண்பர்களுக்கும் அவர்களின் நண்பர்களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றிகளை தெரிவிக்கின்றேன். நான் அவர்களுக்கு கடமைப்பட்டவன். அவர்களை நான் ஆயுள்வரை மறக்கமாட்டேன். அத்துடன் ஒரு சிலரே எங்களை வரவேற்று, ஆங்கிலம் கற்பித்து இங்கு வாழ வழிகாட்டுகிறார்கள்.

இந்த நாட்டுக்கு உலகின் பல பாகங்களிலும் இருந்து அகதிகள் வந்திருக்கிறார்கள். தமிழ் புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு நடக்கும் நிகழ்வுகள் போன்ற நிகழ்வுகளை நீங்கள் மற்றச் சமூகத்தவர்களுக்கு நடைபெறுவதாக கேள்விப்படுகிறீர்களா? படகில் வந்த அகதிகடளிடன் பல்வேறுபட்ட திறமைகள் காணப்படுகின்றன. ஆனாலும் அவற்றை அவர்கள் வெளிக்கொண்டுவரமுடியாமல் தவிக்கின்றனர்.

எனினும், நான் வாழும் சமுதாயத்தில் எனது குடும்பம் பலவிதமான தன்னார்வச் செயல்களில் ஈடுபடுகிறது. மரங்கள் நடுகிறோம், "Clean up Australia" வயோதிபர் இல்லங்களிலும் காப்பகங்களிலும் சென்று உரையாடுதல், அவர்களை பாட்டுப்பாடி மகிழ்வித்தல் போன்றன இவற்றில் குறிப்பிடத்தக்கன.

என் மனைவி வயோதிபர் காப்பகத்தில் தன்னார்வ சேவையும் வீடில்லாதவர்களுக்காக Quilt தயாரித்தும் வழங்குகிறார். நான் Victoria State Emergency Services (VICSES) அமைப்பில் பலவிதமான பயிற்சிகளை முடித்து தன்னார்வ சேவையை செய்கிறேன்.

எண்ணால் Committee for Ballarat North என்ற குழு ஒன்று ஆரம்பிக்கப்பட்டு அதன் உபதலைவராக இருக்கிறேன். இந்த அமைப்பில், என்னைத் தவிர ஏனையவர்கள் அனைவரும் அவுஸ்திரேலியர்களே.

**இந்த நாட்டுக்கு உலகின் பல பாகங்களிலும் இருந்து அகதிகள் வந்திருக்கிறார்கள். தமிழ் புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு நடக்கும் நிகழ்வுகள் போன்ற நிகழ்வுகளை நீங்கள் மற்றச் சமூகத்தவர்களுக்கு நடைபெறுவதாக கேள்விப்படுகிறீர்களா?**

இந்நாட்டில் நம் தமிழ் அகதிகளை அவுஸ்திரேலியர்கள் அன்பாகப் பார்த்துக்கொண்டாலும் எமது சமுதாயம் காட்டும் அன்பே எமக்குப் புத்துணர்ச்சி தரும். எமது உணர்வுகளை மதித்து உங்களில் ஒருவனாக எம்மையும் ஏற்றுக்கொள்ளுங்கள். படகில் வந்தவர்கள் என்ற பார்வையில் பார்க்காதீர்கள்.

எனக்கு ஒரு களம் ஒதுக்கி சந்தர்ப்பம் தந்த எதிரொலி பத்திரிகைக்கு நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். ■

# உயிர்களை உருட்டி விளையாடும் அரசு

# அதிகரிக்கும் அகதிகள் தற்கொலைகள்!

●ஜே.ஜே.

தாயகத்தின் யுத்தத்தின் பிடிக்குள் சிக்கி - இராணுவ சித்திர வதைகளில்இருந்து தப்பித்து - படகேறி ஆஸ்திரேலியாவில் தஞ்சமடைந்தவர்களில் பலர் தடுப்பு முகாம்களுக்குள்ளும் பலர்விடுக்கப்பட்டு சமூகத்துக்குள இணைக்கப்பட்ட பின்னரும் தற்கொலை செய்து கொள்ளும் துயரம் இன்னும் தொடர்ந்து கொண்டேதான் இருக்கின்றது.







கடந்த ஒருவருட காலப்பகுதியில்மட்டும் மூன்று அகதிகள் தற்கொலை செய்து கொண்ட சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

தற்கொலைகள் இடம் பெறும்போது அதற்கான காரணங்கள் பல்வேறு வகையானவையாகக் கூறப்படுகின்றன அவை பல வதந்திகளாகவும்பரவுகின்றன ஆனால், தற்கொலைக்கான காரணம் உண்மையில் இறந்தவனுக்கு மாத்திரமே இரகசியமாகத் தெரிந்த ஒன்றாக அவனுடன் சேர்ந்து மரணித்து விடுகிறது.

ஆஸ்திரேலியாவில் ஆண்டு ஒன்றுக்கு சுமார் மூவாயிரம் பேர் தற்கொலை செய்து கொள்கின்றனர். அதாவது நாள் ஒன்றுக்கு எட்டுப் பேர் வீதம் தற்கொலை செய்துகொள்கின்றனர்.

ஆக, தற்கொலைகளைஎவ்வாறு தவிர்ப்பது என்பதும் அதனை நோக்கிச் செல்பவர்களை முன்கூட்டியே இனங்காண்பது என்பதும் மிகக்கடினமானதொன்றாக காணப்படுகிறது.

அகதிகள் மத்தியிலான தற்கொலைக்கு பல்வேறு காரணங்கள் பல திசைகளிலிருந்து வந்து சேர்ந்துவிடுகின்றன.

ஆஸ்திரேலியாவில் அகதிகள் மீதான சமூகப்பார்வை எனப்படுவது எப்போதும் வித்தியாசமானது என்பது அனைவரும் அறிந்த ஒன்று. முக்கியமாக தனியாக வந்த அகதிகள் - தனியாக வசிக்கும் அகதிகள் மீது சமூகம் ஒரு விசித்திரமான பார்வையைக் கொண்டிருக்கிறது. இருந்தபோதிலும் அதிலிருந்து அவர்கள் மிக வேகமாகவும் - ஒர்மத்துடனும் - வெளிவந்து காண்பிக்கிறார்கள். அழுத்தப்பட்டுள்ளதங்களின் மீதான வாழ்க்கை சுமைகளிலிருந்து வேகமாக வெளிவருபவர்கள் அகதிகளே. ஒருஅகதியின்போராட்டம்மிகுந்தகூர்மையானதாகவும் நேர்மையானதாகவும் காணப்படுவதே வரலாறு.

இருந்தபோதிலும் இந்தப்போராட்ட குணத்திற்கு முரணாக சிலர் மிக இலகுவாக மனதளவில் உடைந்து போவது ஏன்? தற்கொலை வரைக்கும் அவர்கள் தூண்டப்படுவது ஏன்?

அண்மையில் இடம்பெற்ற சம்பவங்களை எடுத்து நோக்கினால், தற்கொலை செய்து கொண்டவர்கள் அனைவரும் சமூகத்துடன் இணைக்கப்பட்டிருக்கின்றனர். ஆனாலும் அவர்களுடைய குடும்பங்களைவிட்டு தனியாகவே வாழ்ந்து வந்திருக்கின்றனர். நண்பர்களுடன் வாழ்ந்து வந்தாலும் அவர்கள் மத்தியில் தனிமை என்பதே நிரந்தமாக இருந்திருக்கிறது.

ஆஸ்திரேலிய அரசு இந்த தஞ்சக்கோரிக்கையாளர்களை அகதிகளாக ஏற்றுக்கொண்டாலும் அவர்கள் தமது குடும்பங்களுடன் இணைமுடியாதவாறு தனது சட்டங்களால் இறுக்கியே வந்திருக்கிறது. இது வெளிப்பார்வைக்கு பலருக்கு தெரியாத - ஆனால் அவர்கள் மாத்திரமே அனுபவிக்கின்ற கொடுமையானதொரு - விடயம்.

மெல்பேர்ணில் அண்மையில் இருபத்தியேழு வயதுடைய அகதி இளைஞன் ஒருவர் சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

யாழ்ப்பாணம், வடமாரட்சி பருத்தித்துறையில் சொந்தமாக வியாபார நிலையத்தை நடத்தி வந்தவர்தான் பகிரதன். ஆனாலும் 2013 ஆம் ஆண்டு இராணுவ நெருக்கடியில் இருந்து தப்பி, படகேறி ஆஸ்திரேலியாவில் தஞ்சமடைந்தார். அவரது அகதிக்கோரிக்கை அண்மையில் குடிவரவு திணைக்களத்தால்நிரகரிக்கப்பட்டது. அகதிக் கோரிக்கை ஏற்கொள்ளப்படும் பட்சத்தில் தனது எதிர்கால மனைவியை இந்தியா சென்று திருமணம் முடிக்க எண்ணியிருந்தார் என்று கூறப்படுகிறது. எனினும் அகதிக்கோரிக்கை நிராகரிப்பின் பின்னர் மிகவும்மனமுடைந்து காணப்பட்டார்என அவரது நண்பர்கள் ஊடாக் தெரியவருகின்றது. ஏற்கனவே 5 வருடங்களுக்கு மேலாக அகதி அந்தஸ்துக்கான கோரிக்கை முடிவுக்காக காத்திருந்துவிட்டார். அவ்வாறு காந்திருந்தும் நிரகரிக்கப்பட்டது என்ற பதில் அவரை மிகவும் பாதித்தாதக தெரியவருகின்றது.

இதேவேளை தாங்களும் நிச்சயமற்ற வாழ்வைத்தான் எதிர்கொண்டிருப்பதா அவரது நண்பர்கள் தெரிவிக்கிறார்கள்.

பகிரதனின் சாவு மட்டும் அகதிகளின் அழுத்தம் மிகுந்த வாழ்வை சொல்லிப் போகவில்லை.

கடந்த ஜூலை மாதம் சிட்னியில் குடும்பஸ்தர் ஒருவரும் இதேபோல தன்னைத்தானே மாய்த்துக்கொண்டார். தனது எட்டு மாதங்களேயான குழந்தை மற்றும் 4 வயது மகன் ஆகியோரை பிரிந்து 2013 ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவில் தஞ்சம் புகுந்தவர் நேசராஜன் பிரதீபன்.

யாழ்ப்பாணம் மானிப்பாயை சேர்ந்தவரன இவர் சிட்னியில் ஒப்பந்த தொழில் மூலம் வேலை செய்துகொண்டிருந்தவர். பிள்ளைகளுடன் அதிகநேரம் தொலைபேசியில் பேசி இயன்றளவு குடும்பப்பிரிவினால் ஏற்பட்ட தனிமையை போக்குவதற்கு முயற்சி செய்துவந்தவர். குடும்பத்துடன் இணையவேண்டும் என்ற தவிப்போடிருந்தவர் இறுதியில் அந்தப்பிரிவுத் துயர் தாளாது சாவோடு இணைந்து விட்டார்.

குடுபத்தை பிரிந்திருந்த மன உளைச்சலே அவரின் இவ்வாறான முடிவுக்கு காரணமாக அமைந்துள்ளது என அவரின் நண்பர்கள் கூறுகிறார்கள்.

“என் அண்ணன் என்னை ஆஸ்திரேலியாவில் கல்விகற்க வைப்பதற்காக இலங்கையிலேயே ஆங்கில வழி கல்வியை கற்பித்தார். நான் ஆஸ்திரேலியாவில் படிக்க வேண்டும் என்பதற்காக அண்ணா இறுதிவரை முயற்சித்தபடியே இருந்தார். இன்று எங்களை எல்லாம் யோசிக்காமல் விட்டு சென்றுவிட்டார். தன் பிள்ளைகளை நேசித்தது போலவே என்னையும் நேசித்தார். அவர் இல்லாததை என்னால் பொறுத்துக்கொள்ளவே முடியவில்லை. என் அண்ணா ஆசைப்பட்டதை நான் நிச்சயமாக செய்வேன். என் அண்ணாவை கடசியாக நான் எனது 13 ஆவது வயதில்தான் பார்த்தேன். அண்ணாவை கட்டியணைக்க ஆசைப்பட்டேன். கடசியில் அண்ணாவின்முகத்ததைக் கூட பார்க்க முடியாமல் போய்விட்டது” - என்று இலங்கையில் உள்ள பிரதீபனின் தங்கை கண்ணீர் சிந்தியபடி தொலைபேசியில் கூறினார்.

வவுனியா கோவில்குளத்தை சேர்ந்த வாகனத்திருத்துனரான நான்கு பிள்ளைகளின் தந்தையான வசந்தகுமார் நாட்டில் ஏற்பட்ட இராணுவ வன்முறைகளுக்குள் சிக்குண்டு தப்பித்து தமிழகம் சென்று தஞ்சமடைந்திருந்தார். பின்னர் நாடு திரும்பி வாழலாம் என்று எண்ணியபோது, அவரை மீண்டும் பிரச்சினைகள் துரத்த ஆஸ்திரேலியாவில் வந்து தஞ்சமடைந்தார்.

ஆஸ்திரேலியாவும் அவரை சும்மா விடவில்லை. குடிவரவு திணைக்களம் அவரை நவ்று தீவில் சுமார் ஒரு வருடகாலம் தடுத்து வைத்திருந்தது. தடுப்புகள் அவருக்கு புதிதில்லையென்றாலும் தொடர்ச்சியான தடுப்பு அவரின் மனதில் ஆழமான வடுக்களை ஏற்படுத்தியது. அவர் கொஞ்சமாக கொஞ்சமாக தன்னிலையை மறந்தார். இவ்வாறான நிலையில் தடுப்பு முகாமிலிருந்து விடுவிக்கப்பட்டு அவர் சமூகத்துடன் இணைக்கப்பட்டார். அதன் பின்னர், அவரது அகதி கோரிக்கைகள் நிராகரிக்கபட்டு நீதிமன்றில் தன்னை அகதியென நிருபிக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டார். அணு அணுவாக மனமுடைந்த அவர் நோய்வாய்பட்ட நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அங்கு வழங்கப்பட்ட மாத்திரைகளை தவிர்த்தே வந்தார்.

கடந்த வருடம் செப்ரம்பர் மாதம் வைத்தியசாலையில் அவர் கட்டியிருந்த வேட்டியை கட்டில் கால்களுடன் இணைத்து தனது கழுத்தையும் சேர்த்து இறுக்கியுள்ளார் என்றும் இதனால் மூளைக்கு செல்லும் இரத்த குழாய்கள் சிதைவடைந்து மூளை இறந்தாக வைத்தியர்கள் அறிவித்திருந்தனர். பின்னர், செயற்கை சுவாசமளித்தும் வசந்தகுமார் பிழைக்கமாட்டார் என்று வைத்தியர்கள் தெரிவித்தனர். அதன் பின்னர், இலங்கையில் உள்ள அவரது மனைவியின் ஒப்புதலுடன் அவருக்கு வழங்கபட்ட செயற்கை சுவாசம் நிறுத்தப்பட்டது. வசந்தகுமார் என்ற அகதியின் இறுதி மூச்சுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. யதார்த்தநிலை புரிந்தும்கூட கடைசிநேரத்தில் “அப்பாவின் செயற்கை சுவாசத்தை கழற்றாதீர்கள்” - என்ற அழுகுரலுடன் அவரது மகள்கள் அனுப்பிய வீடியோ பதிவு இன்னும் காதுகளில் கேட்டுக் கொண்டேதான இருக்கின்றன என்கிறார்கள் வசந்தகுமாரின் நண்பர்கள்.

கடந்த செப்ரெம்பர் 10 ஆம் திகதி தற்கொலை தடுப்பு தினமாகும்.

இந்த தற்கொலை தடுப்பு தினத்தில் தற்கொலைகளை தடுக்கவேண்டும் என்றும் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் நீலிக்கண்ணீர் வடிக்கும் ஆஸ்திரேலிய அரசு, தற்கொலைகளுக்கான காரணங்களை கண்முன்னே கண்டும் காணாதது போலிருப்பது வேடிக்கைக்குரியது.

அகதிகள் மன உளைச்சல்களுக்கும் அவர்களது ஓயாத வாழ்க்கை போராட்டங்களுக்கும் ஏக காரணமாக இருந்துகொண்டு அவர்களை தொடர்ந்தும் தனது அரசியல் பகடைக்காய்களாக உருட்டி விளையாடிக் கொண்டு - உயிர்களை பந்தாடிக்கொண்டு - தற்கொலை தடுப்பு பற்றி பேசுவதில் என்ன நியாயமிருக்கிறது?

# ஈரான் பொறியில் மாட்டியுள்ள (அப்பாவி) ஆஸ்திரேலிய எலிகள்

சுற்றுலா பயணிகளாக வெளிநாடுகளுக்கு உல்லாசமாக போய் வருவதெல்லாம் இப்போது உயிரை வாடகைக்கு விடுகின்ற பயணங்களாக மாறிவிட்டன. சமகாலத்தில் சில நாடுகள் தங்கள்பாதுகாப்புதொடர்பில்மேற்கொள்கின்ற நடவடிக்கைகளும் தங்கள் நாட்டுக்குள் வருகின்றவர்களை கைது செய்கின்ற முறைகளையும் பார்க்கின்றபோது கால்கள் மாத்திரமல்ல கடவுச்சீட்டும் சேர்ந்து நடுங்குகின்றன.

அப்படியாக நடுங்கவைக்கும் நாடாக ஈரான் மாறிவருகிறதா என்று கேட்குமளவுக்கு அங்கு இடம்பெறும் பல கைதுகளும் சிறைவைப்புக்களும் பகீர் செய்திகளை தந்து கொண்டிருக்கின்றன.

உலகம் சுற்றும் இளம் தம்பதியினர் ஜோலி கிங் மற்றும் அவர் துணைவர் மார்க் பர்க்கின் ஆகியோர் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக தாம் பயணிக்கும் இடங்களில் எடுக்கும் படங்களை சமூக வலைத்தளத்தில் பகிர்ந்து வந்திருக்கிறார்கள். இவர்கள் ஆஸ்திரேலியாவிலிருந்து தரைமார்க்கமாக இங்கிலாந்து வரை செல்ல



சஞ்சயன்



திட்டமிட்டிருந்தார்கள். ஆக, தாங்கள் பயணம் செல்லும் வழியெல்லாம் படங்கள் எடுத்து அவற்றை பகிர்ந்து வந்திருக்கிறார்கள்.

இவ்வாறு ஈரான் நாட்டில் இவர்கள் 'ட்றோன்' மூலம் படமெடுத்தபோது அந்நாட்டின்இராணுவதளம்ஒன்றையும்படம் எடுத்தார்கள் என்ற குற்றச்சாட்டில் மூன்று மாதங்களுக்கு முன் இவர்கள் இருவரும் அந்நாட்டு பாதுகாப்பு தரப்பினரால் கைது செய்யப்பட்டார்கள்.

ஈரானின் தெஹ்ரான் மாநிலத்திலுள்ள 'ஜஜ்ரூட்' என்ற இராணுவ தளத்திற்கு அருகில் இவர்கள் படங்கள் எடுத்ததை, உளவு பார்ப்பதற்கு மேற்கொண்ட முயற்சி என்று ஈரானிய அரசு கருதியது. இவர்கள் இருவரும் பிரித்தானிய மற்றும் ஆஸ்திரேலிய இரட்டைக் குடியுரிமை கொண்டவர்கள்.

இவர்கள் இருவரும் தெஹ்ரான் நகரிலுள்ள எவின் என்ற சிறைச்சாலையில் தற்போது அடைத்து வைக்கப்பட்டார்கள். பல்வேறு அரசியல் கைதிகள் இந்த சிறைச்சாலையில்தான் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த சிறையில்தான் கடந்த காலங்களில் சில கைதிகள் சட்டத்தை மீறிய வகையில் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்கள்இருவரும்ஆஸ்திரேலிய-ஈரான் நாடுகளுக்கிடையில் மேற்கொள்ளப்பட்ட பேச்சுகளின் பின்னர் கடந்த வாரம் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இவர்கள்கைதுசெய்யப்பட்டதுசெய்தியாக வெளிவந்த பின்னர்தான், அங்கு இன்னொரு ஆஸ்திரேலியர் கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டிருப்பது செய்தியாக வெளியிடப்பட்டுள்ளது.

கைலீ மோர் - கில்பேர்ட் என்பவரே கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் கைது செய்யப்பட்டு அதே எவின் சிறைச்சாலையில் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்.

இந்த செய்தி வெளியானபோது ஆஸ்திரேலியா முழுவதுமே ஒரு தடவை அதிர்ந்து போனது.

ஏனெனில், கைலீ மோர்- கில்பேர்ட் ஒரு தொழில்சார் கல்வியாளர் மற்றும் இஸ்லாமிய கல்வி விரிவுரையாளர் என்று மெல்பேர்ண் பல்கலைக்கழகத்தின் இணையத்தளம் இன்றும் சொல்கிறது. அவர் அந்தப் பல்கலைக்கழகத்தின் Asia Institute என்ற - ஆசியா குறித்த ஆய்வு - நிறுவனத்தில் கடந்த இரண்டு வருடங்களுக்கும் மேலாகப் பணியாற்றி வருகிறார். மத்திய கிழக்கு அரசியலில் நிபுணத்துவம் பெற்றவர். குறிப்பாக அரபு வளைகுடா நாடுகளில் அவரது கவனம் இருக்கிறது. 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற அரபு எழுச்சி, சர்வாதிகார ஆட்சி மற்றும் அரசியல் செயல்பாட்டில்புதியசமூகஊடகதொழில்நுட்பங்களின்பங்குஉள்ளிட்டபலவிடயங்களில் அவர் ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளார் என்றும் அந்த இணையத்தளம் மேலும் குறிப்பிடுகிறது.

கைலீ மோர் - கில்பேர்ட்டிற்கு ஈரானிய நீதி மன்றம் பத்து வருட சிறைத்தண்டனை விதித்துள்ளது. இவர் ஈரானிய பல்கலைக்கழகத்தில் பணியாற்றியிருக்கிறார் என்றும் இவரது பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள விளம்பரம் ஒன்றில் இவரது படம் பிரசுரமாகியுள்ளது என்றும் ஊடகம் ஒன்று தரவு வெளியிட்டுள்ளது.

2011 ஏப்ரல் மாதம் கைலீ மோர் - கில்பேர்ட் வெளியிட்ட ஒரு கட்டுரையில், விக்கிலீக்ஸ்சின்ஜூலியன்அஸான்ஜை சந்தித்தது குறித்தும் அவரை இங்கிலாந்தின் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் உரையாற்ற அழைத்தது குறித்தும் ஜூலியன் அஸான்ஜூடனான உரையாடல் குறித்தும் எழுதியிருந்தார். அந்தக் கால கட்டத்தில் ஜூலியன் அஸான்ஜ் மீது வழக்குப் பதிவாகி இருந்தமையால் அவரால் அது குறித்துப் பேச முடியவில்லை என்றும் தன்னுடனான சந்திப்பில் அரபு நாடுகளின் அரசியல் நிலமை குறித்து அஸான்ஜ் பேசியதாகவும் கைலீ மோர் - கில்பேர்ட் தனது கட்டுரையில் எழுதியிருந்தார். சிறையிலிருந்து பிணையில்வந்திருந்த அஸான்ஜ் பற்றி அனுதாபத்துடன் எழுதியிருந்த கைலீ மோர் - கில்பேர்ட, தானும் ஒருநாள் சிறைப்படுத்தப்படலாம்என்பதைஅப்போதுஉணர்ந்திருந்தாரா தெரியவில்லை.

ஆனால், அதன்பின்னர் அவரது கைது சொல்லிவைத்தாற்போல இடம்பெற்றிருக்கிறது.

கைலீ மோர் - கில்பேர்ட் கைது செய்யப்பட்டிருப்பதை ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சு தற்போது உறுதிசெய்துள்ளது. கைலீ மோர் - கில்பேர்ட் கைது குறித்து, இவரது குடும்பம் கடந்த மாதம் வரை மௌனமாக இருந்தாலும் பின்னர் வெளிவிவகார அமைச்சுடன் தொடர்பு கொண்டு அவருக்குத் தூதரக உதவிகளை வழங்க கோரிக்கை வைத்ததாக தெரியவந்துள்ளது.

இவரது விடுதலை குறித்து ஈரானிய வெளிவிவகார அமைச்சருடன் ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர்மாரீஸ்பெய்ன் பேச்சுக்களைநடத்தியுள்ளார். ஆனால், அதனால் இதுவரை எந்த முன்னேற்றமும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

ஈரானுக்குப் பயணம் செய்பவர்களுக்கு வெளிவிவகார அமைச்சு, அதன் இணையத் தளமூடாக எச்சரிக்கிறது. "எழுந்தமானமாக நீங்கள் தடுத்து வைக்கப்படலாம் அல்லது கைது செய்யப்படலாம்"-எனும்பொருள்பட, "could be arbitrarily detained or arrested" என்று அறிவித்துள்ளது.

இவர் மட்டுமல்ல!

கைலீ மோர் - கில்பேர்ட் மட்டுமல்ல, இவரைப்போலஇரட்டைக்குடியுரிமையுடைய பலர் ஈரானில் சிறைவைக்கப்பட்டுள்ளார்கள்.

2015 ஆம் ஆண்டு ஒக்டோபர் முதல் ஈரானியஅமெரிக்கஇரட்டைக்குடியுரிமை கொண்ட இளைஞர் ஸியாமக் நஸாஸி -

2016 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஆஸ்திரிய ஈரானிய இரட்டைக் குடியுரிமை கொண்ட தொழிலதிபர் கம்ரன் கடேரி -


2016 ஆம் ஆண்டு பெப்ரவரி முதல் சுவீடன் ஈரானிய இரட்டைக் குடியுரிமை கொண்ட மருத்துவர் அஹ்மடஸ்ரெஸா ட்ஜாலலி, அமெரிக்க சீன இரட்டைக் குடியுரிமை கொண்ட ஆராய்ச்சி மாணவன் ஸியூ வாங் -


2016 ஆகஸ்ட் முதல் பிரித்தானிய ஈரானிய இரட்டைக் குடியுரிமை கொண்ட நஸநின் ஸஃகாரி - ரட்க்ளிஃப் -


2016 செப்டம்பர் முதல் ஈரானிய கனேடிய இரட்டைக்குடியுரிமை கொண்ட அப்துல்ரசூல் டோரி எஸ்ஃபஹானி -

(09ஆம் பக்கம் பார்க்க)


ஸியாமக் நஸாஸி


கம்ரன் ஃகடேரி


அஹ்மடஸ்ரெஸா ட்ஜாலலி


ஸியூ வாங்


நஸநின் ஸஃகாரி-ரட்க்ளிஃப்


அப்துல்ரசூல் டோரி எஸ்ஃபஹானி


மொராட் தபாஸ்


அரஸ் அமிரி


மைக்கல் வைட்


ஃபரிபா அடெல்க்கா


ர்க் ஃபர்க்கின் / ஜோலி கிங்


கமீல் அஹ்மாடி

## எவின் சிறைச்சாலை


எவின் சிறைச்சாலையில்தான் ஈரானின் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள் சட்டத்திற்குப் புறம்பான மரணதண்டனைகள் உட்பட பல்வேறு மனித உரிமை மீறல்கள் அங்கே நடப்பதாக குற்றச்சாட்டுகள் உள்ளன.

"வோஷிங்டன் போஸ்ட்" பத்திரிகையின் நிருபர் ஜேசன் ரஸாயன் எவின் சிறைச்சாலையில் பெற்ற அனுபவங்களை Prisoner: My 544 Days in an Iranian Prison என்ற தலைப்பில் ஒரு நூலாக எழுதி வெளியிட்டுள்ளார்.

2014 ஆம் ஆண்டு, அவர் ஈரானில் செய்தியாளராகப் பணிபுரிந்தபோது, அவர் உளவு பார்த்ததாக குற்றம் சாட்டப்பட்டார். சிறையில் அடைக்கப்பட்ட அவரிடம் விசாரணை நடந்தபோது அந்த நீதிமன்றத்தினுள் யாரும் அனுமதிக்கப்பட வில்லை. அமெரிக்க பொது மக்கள் அவருக்காகக் கொடுத்த குரல் தான் 2016 ஆம் ஆண்டு அவர் விடுதலையாக வழிவகுத்தது.

"நாள் செல்லச் செல்ல, இஸ்லாமிய குடியரசின் வெளிநாட்டுக்கைதிகள் பலரில் நான் ஒருவன் என்பதை உணர்ந்து கொண்டேன். அப்படித்தான் உங்கள் ஆஸ்திரேலியர்களும் உணர ஆரம்பித்திருப்பார்கள் என்று நான் நினைக்கிறேன்"-என்று, ஜேசன்ரஸாயன்ஆஸ்திரேலிய ஊடகங்களுக்கு அண்மையில் வழங்கிய நேர்காணலில் குறிப்பிட்டார்.

அமெரிக்க பொதுமக்களின் குரல் தான் ஜேசன் ரஸாயன் விடுதலையாகக் காரணமாக இருந்தது. ஈரானின் எவின்சிறைச்சாலையில்இருக்கும்ஆஸ்திரேலியர்கள் விடுதலையாகுவதற்கு, வெளிவிவகார அமைச்சினதோ முன்னாள் அமைச்சரினதோ குரல்கள் மட்டும்போதாது. ஆஸ்திரேலியர்கள்அனைவரும் குரல் கொடுக்க வேண்டும்.






# ஈரான் பொறியில் மாட்டியுள்ள (அப்பாவி) ஆஸ்திரேலிய எலிகள்

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

*2017 ஒக்டோபர் முதல் ஈரானிய பிரித்தானிய அமெரிக்க குடியுரிமைகள் உடைய தொழிலதிபர் மொராட் தபாஸ் -*

*2018 ஜனவரி முதல் பிரித்தானிய நிரந்தர வதிவிட வீசா பெற்ற ஈரானிய குடிமகள் அரஸ் அமிரி -*

*2018 மார்ச் முதல் முன்னாள் அமெரிக்க கடற்படை வீரர் மைக்கல் வைட் -*

*2018 ஜூலை முதல் ஈரானிய அமெரிக்க இரட்டைக்குடியுரிமை கொண்ட ஃபரிபா அடெல்க்கா -*

*2019 ஜூன் முதல் மற்றும் ஈரானிய பிரித்தானிய இரட்டைக் குடியுரிமை கொண்ட கமீல் அஹ்மாடி -*

*2019 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 11 ஆம் திகதி முதல், மார்க்பர்க்கின் - ஜோலிகிங் தம்பதியினர் போல் சிறை வைக்கப்பட்டுள்ளார்கள்.*

**வெளிநாட்டவர் ஈரானில் கைது செய்யப்பட காரணம் என்ன?**

அணு ஆயுத உற்பத்தியில் ஈரான் இறங்கியுள்ளது என்று இஸ்ரேல் சிணுசிணுக்க தொடங்க அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் ஐக்கிய நாடுகள் சபையின் முன்னெடுப்பில் ஒரு ஒப்பந்தத்தில் ஈரானிடமிருந்து கையெழுத்தை பெற்றுக்கொண்டன. அணு ஆயுத உற்பத்தியில் ஈரான் ஈடுபடாது என்றும் அதற்கு ஈடாக ஈரான்மேல் விதிக்கப்பட்டுள்ள தடைகள் அனைத்தும் தகர்க்கப்படும் என்றும் இந்த ஒப்பந்தத்தில் முடிவாகியிருந்தது. இது நடக்கும்போது, அமெரிக்காவில் பராக் ஒபாமா அதிபராக கடமையாற்றினார். ஆனால், டொனால்ட் ட்ரம்ப் அதிபரானதும் இஸ்ரேல் மீண்டும் சிணுசிணுக்க ஆரம்பித்துவிட்டது. ட்ரம்ப் - "ஈரானுடனான ஒப்பந்தம் வீணானது" என்று சொல்லி தன் பகுதியிலிருந்து விலகிக் கொண்டார்.

இதிலிருந்து ஈரானுக்கும் மேற்குலக நாடுகளுக்குமிடையில் ஒரு முறுகல் நிலை ஆரம்பமானது. அவர்கள் கப்பலை இவர்கள் பிடிப்பதும், இவர்கள் கப்பலை அவர்கள் பிடிப்பதும் என்று ஒரு சர்வதேச விளையாட்டு ஆரம்பித்துவிட்டது. வெளிநாட்டவர்கள் தம்மை புலனாய்வு செய்கிறார்கள் என்ற சந்தேகம் ஈரானுக்குள் அதிகமாகப் பரவியுள்ளது. இதன்காரணமாக, ஈரானுக்கு அருகில் பறக்கும் விமானங்கள், அருகில் பயணிக்கும் கப்பல்கள் ஆகியவற்றின்மீது ஈரான் அதிககவனத்துடனிருக்கிறது. அத்துடன், இரட்டைக்குடியுரிமை கொண்ட ஈரானியர்களையும் தனது நாட்டுக்கு வரும் வெளிநாட்டவரையும் சந்தேகத்துடனேயே பார்க்கிறது.

**உதவிக்கு வருகிறார் ஜூலி!**

இதற்கிடையில், ஈரான் சிறையிலிருக்கும் ஆஸ்திரேலியர்களுக்குத் தன்னால் உதவி வழங்க முடியும் என்று ஆஸ்திரேலியாவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜூலி பிஷப் கருத்து வெளியிட்டுள்ளார். தான் வெளிவிவகார அமைச்சராக இருந்தபோது ஈரானுடன் நல்லுறவைப் பேணியதாகவும், ஈரானின் அதிபர் ஹஸ்ஸான் ரௌஹானியை தான் சந்தித்துள்ளதாகவும் ஈரானிய வெளிவிவகார அமைச்சர் ஜாவட் ஸரிஃப் தனக்கு நன்கு அறிமுகமானவர் என்றும் அரசு எடுக்கும் முயற்சிகளுக்குத் தன்னால் உதவ முடியும் என்றும் அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

அரசியலில் இருந்து ஓய்வு பெற்றுள்ள ஜூலி பிஷப், எதிர்வரும் ஜனவரியிலிருந்து Australian National Universityயின் வேந்தர் பொறுப்பினை ஏற்கவுள்ளார். ஈரான் சிறையிலிருக்கும் ஆஸ்திரேலியர்களுக்கு ஆதரவாக அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஆஸ்திரேலியாவின் Labor கட்சியும் ஆதரவு வழங்கும் என்று அதன் தலைவர் அந்தோனி அல்பனீஸி உறுதியளித்துள்ளார்.



Free Dining

12 வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கு

விரையுங்கள் ! உங்கள் பிள்ளைகளுக்கு அரச போஜன பரிமாறலை பெற்றுக்கொடுங்கள்

Raja Bojun
රජ බොජුන්

உங்களுடைய அன்புக்குரிய செல்வங்களுக்கு ஆரோக்கியமான இலங்கை உணவுகள்

12 வயதுக்குட்பட்ட இரண்டு சிறுவர்கள் தமது பெற்றோருடன் இலவசமாக உணவருந்தி மகிழலாம்.

ஒவ்வொரு சிறுவர்க்கும் இலவசமான விளையாட்டு பொருள்.

லிபர்டி ஆர்கேட், 282,
ஆர்.ஏ.டி. மெல் மாவத்த,
கொழும்பு - 03.

தொ.பேசி : 4716171, 2577097/8

Web : www.rajabojun.lk

## அன்புக்குரியவர்களே!
## உங்களுடன் ஒரு நிமிடம்...




சர்வதேச கிருஷ்ண பக்திக்கழகத்தால் கொழும்பு கொட்டாஞ்சேனையில் பகவான் கிருஷ்ணருக்கு ஆலயம் அமைக்கப்படுவது பற்றி அறிந்திருப்பீர்கள். எத்தனையோ ஆலயங்கள் இருக்கும்போது புதிதாக இன்னொரு ஆலயம் எதற்கு என்னும் எண்ணம் உங்கள் மனதில் எழலாம். கிருஷ்ண பக்திக்கழகத்தின் ஸ்தாபகரும் எங்கள் ஆன்மீகக் குருவுமான பத்தி வேதாந்த சுவாமி பிரபுபாதாவின் நோக்கம் மக்கள் மத்தியில் வேத கலாசாரத்தை மீண்டும் தோற்றுவிப்பதும் அமைதி, சமாதானம், மகிழ்ச்சி, செல்வச்செழிப்பு என்பவற்றை ஏற்படுத்துவதும்தான். ஆலயம் அமைப்பதால் இந்நோக்கம் எவ்வாறு நிறைவேறும் என்று நினைக்கலாம். ஆலயங்கள்தான் மக்களின் நல்வாழ்வுக்கு வழிகாட்டிகளாக இருந்துள்ளன.

ஆன்மிகக் கல்வி, கலை, கலாசாரம் என்பன ஆலயங்கள் மூலமே வளர்க்கப்பட்டன. அந்த நிலைமையை மீண்டும் தோற்றுவிக்கும் வகையில்தான் கிருஷ்ண பக்திக்கழகத்தால் உலகெங்கும் ஆலயங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. அதே நோக்கத்தில்தான் பகவான் கிருஷ்ணருக்கான இந்த ஆலயம் பக்தி மயமாக அமைக்கப்பட்டு வருகிறது. இந்த ஆலயம் தற்போது பூரணத்துவ நிலையை அடைந்துகொண்டிருக்கிறது. இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள ஸ்தபதியும் கட்டடக் கலைஞர்களும் ஆலயத்தை விரைவாகக் கட்டி முடிக்கும் வகையில் மும்முரமாக செயற்பட்டுக்கொண்டிருக்கின்றனர். இந்த ஆலயம் அமைக்கும் திருப்பணிக்கு பங்களிப்பு நல்க விரும்புபவர்கள் விரைந்து செயற்பட்டு தம் பங்களிப்பை நல்குமாறு அன்பு வேண்டுகோள் விடுக்கிறோம். ஆலய வரலாற்றில் உங்கள் பெயர் பதிக்கப்படுவதோடு, அது என்றென்றும் உங்களுக்கும், உங்கள் அன்புக்குரியவர்களுக்கும், உங்கள் பரம்பரையினருக்கும் ஆசி வழங்கிக்கொண்டிருக்கும். ஆலயம் அமைப்பது, அமைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குவது என்பனவற்றுக்கு எண்ணற்ற பலன்கள் கிட்டும் இதுபற்றி ஸ்கந்தபுராணம், அக்கினிபுராணம் என்பவற்றில் காணக்கிடைக்கின்றன.

**ஆலயத் திருப்பணிக்கு ஒத்துழைப்பு நல்க விரைந்து முன்வாருங்கள்**

அருகிலுள்ள கூப்பனை நிரப்பி, கத்தரித்து பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள். அல்லது நிதியுடன் நேரில் கையளித்து ரசீது பெற்றுக்கொள்ளுங்கள். நிதியை காசோலையாக, போஸ்ரல், மணி ஓடராக Iskcon temple fund என்று குறிப்பிட்டு பின்வரும் முகவரிக்கு அனுப்பலாம்.

**ஸ்ரீஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயக் கட்டட நன்கொடை**

பெயர்..............................................
தொழில்..............................................
முகவரி..............................................
நிதி விவரம்..............................................
................ ..............................
திகதி கையொப்பம்

ஆலயத் தலைவர், ஸ்ரீஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயம், இல.188, புதுச்செட்டித்தெரு, கொழும்பு - 13
Phone : 077 228 8166, E-Mail: iskcon@slt.lk - www.iskcon.lk
The Temple President, Sri Sri Radha Krishna Temple
188, New Chetty Street, Colombo - 13 Tel : 0112433325

நிதியை வைப்பிலிட விரும்புபவர்கள்
பின்வரும் வங்கிக் கணக்கு ஒன்றில் வைப்பிலிடலாம்.

COMMERCIAL BANK, KOTAHENA BRANCH
A/C Name : ISKCON, Temple Fund, A/C No: 1120017042
HATTON NATIONAL BANK - JAMPETTAH BRANCH
A/C Name: ISKCON, A/C No: 207010000891

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI



# வரலாற்றின் மர்மங்களை அவிழ்த்து வேரடிகளை காண்பிக்கும் கீழடி!



Dr. கே. கணேசன்
மெல்பேர்ண்

சமீபத்தில் வெளியான கீழடி அகழ்வாராய்ச்சிமுடிவுகளும், சிந்துவெளி நாகரிககாலஎலும்புக்கூடொன்றில் மேற்கொள்ளப்பட்ட மரபணு ஆராய்ச்சிகளும் பல தேடுதல்களுக்கு அண்மையில் விடை கொடுத்திருக்கின்றன.

தமிழ்நாட்டில் மதுரை நகரின் வைகை ஆற்றங்கரையின் அருகே உள்ள கீழடி என்னுமிடத்தில்மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியின் முடிவில் அங்கு எழுத, வாசிக்கக்கூடிய மக்கள் ஒரு நகர நாகரிகத்தில் இற்றைக்கு *2600* ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தார்கள் என்று தெரியவந்துள்ளது. அதேசமயம் இற்றைக்கு *4000* ஆண்டுகளுக்கு முந்தைய சிந்து சமவெளி நாகரிகத்திலிருந்து எடுக்கப்பட்ட முதல் பண்டைய டி.என்.ஏ அதன் மக்களை நவீன தெற்காசியர்களுடன், குறிப்பாகதிராவிட இனக் குழுமத்துடன் தொடர்புபடுத்துகின்றது.

இற்றைக்கு *3500* ஆண்டுகளுக்கு முன்பாக சிந்துவெளி நாகரிகம் முடிவுக்கு வந்ததாக கூறும் ஆராய்ச்சியாளர்கள், ஏன் அது அழிந்தது என்றோ அல்லது அம்மக்கள் எங்கு சென்றார்கள் என்றோ இதுவரை முடிவாக கூறமுடியாமல் இருந்தனர். இதன் காரணமாக, தமிழர்கள் கடல்கோளினால் அழிந்த குமரிக்கண்டத்தில் இருந்து வடக்காக முன்னேறி தமிழ்நாட்டுக்கும் அதன் பின் சிந்து சமவெளிக்கும் பரவினார்கள் என்று ஒரு சாராரும் -

சிந்து சமவெளியின் அழிவின் பின்னர் தமிழர் தெற்கு நோக்கி இடம்பெயர்ந்து தமிழ்நாட்டை அடைந்தார்கள் என்று இன்னொரு சாராரும் வாதிட்டு வந்தனர்.

குமரிக்கண்டம் கற்கோளினால் அழிந்ததுஎன்பதற்குஆதாரமாகஎட்டாம்நூற்றாண்டளவில் இயற்றப்பட்டதாக கருதப்படும் சிலப்பதிகார பாடலான "பஃறுளி யாற்றுடன்பன்மலையடுக்கத்துக்குமரிக்கோடுங் கொடுங்கடல் கொள்ள" - என்ற பாடலை மேற்கோள்காட்டுகின்றனர்.

இலக்கியங்களை தவிர வேறெந்த அகழ்வாராய்ச்சி சான்றோ அல்லது வேறு விஞ்ஞான சான்றோ குமரிக்கண்டம் இருந்ததற்கான ஆதாரமாக இதுவரை காட்டப்படவில்லை.

சங்ககாலத்தில்வைகைக்கரையில்நகரப் பண்பாடு நிலவியது என்பதற்கான முதல் அகழாய்வுச் சான்றைக் கீழடி வழங்கியுள்ளது. சிந்துவெளி நாகரிகத்துக்கு பின்பாக ஏற்பட்ட இரண்டாவது நகரமயமாக்கல் கங்கைச்சமவெளியில் மாத்திரமே நடந்ததாக இதுவரை சொல்லிவந்த ஆராய்ச்சியாளர்கள், அதேகாலப்பகுதியில் இரண்டாம் நகரமயமாக்கல் மதுரையின் வைகை நதிக்கரையிலும் நடந்திருக்கின்றது என்று இன்று ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இந்த கழாய்வின் மூலம் தமிழர் எழுத்தறிவு தொடர்பான கால நிர்ணயம் கி.மு ஆறாம் நூற்றாண்டிற்கு நகர்ந்திருக்கிறது. சங்க இலக்கியம் வெறும்கற்பனையோ, புனைகதையோ அல்ல என்பதைக் கீழடி ஆய்வுகள் தெளிவாக்குகின்றன.

கீழடியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியில் கட்டிடங்கள், சுடுமண் குழாய், கழிவுநீர் தொகுதிகள், உறை கிணறுகள், செங்கற்சுவர்கள், மண்பாண்டங்கள், தமிழி எழுத்துக்கள், அணிகலன்கள் ஆகிய தொல்பொருட்கள்கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

எலும்புகளால்செய்யப்பட்ட எழுத்தாணி, தங்க அணிகலன்கள், மணிகள், தந்தத்தில் செய்யப்பட்ட சீப்பு, அரவைக்கல், பானை ஓடுகள், சதுரங்கக்காய்கள், பகடைக்காய், மண்குடுவை, சூதாட்டத்தில்பயன்படுத்தப்படும் பவளமணிகள், சுடுமண் வார்ப்பு, காளையின் தலை, மனித உடல் பாகம், மனித தலை உருவம் போன்றவைகளும் கண்டறியப்பட்டுள்ளன.

கீழடியில் கண்டெடுக்கப்பட்ட தமிழி அல்லது தமிழ் பிராமி எழுத்துருக்கள் இற்றைக்கு *2600* வருடங்கள் பழமையானவை என்று அமெரிக்காவில் இயங்கும் "பீற்றா அனாலிட்டிக்கா"நிறுவனம்கார்பன்காலக் கணிப்பீடு தொழில் நுட்டம் மூலம் கணித்துள்ளது. தற்போதுள்ளதரவுகளின்படி வட இந்திய தேவநாகரீக எழுத்துருக்களின்மூலம் என்று கருதப்படும் அசோகன் பிராமியை விட தமிழி பழமையானது என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

சிந்துவெளி நாகரிக மனிதர்களில் இருந்து முதன்முறையாக மரபணு ஆராய்ச்சி முடிவு இம் மாதம் (5th Sept 2019) Cell என்ற விஞ்ஞான ஆராய்ச்சி சஞ்சிகையில் ஹார்வர்ட் பல்கலைக்கழக மருத்துவ பீட விஞ்ஞானிகளால் வெளியிடப்பட்டுள்ளது. இச்சஞ்சிகையானது Nature, Science போன்ற மிகவும் நம்பிக்கையான விஞ்ஞான சஞ்சிகை ஆகும்.

இதன்படி, தற்போதைய பெரும்பாலான தெற்காசிய மனிதர்களின் - குறிப்பாகதிராவிடர்களின் - மரபணு சிந்துவெளி நாகரிக மனிதர்களின் மரபணுவுடன் ஒத்துப் போகின்றது. அவற்றில் கிழக்கு ஐரோப்பாவின் ஸ்டெப் பகுதியில் இருந்து வந்ததாக கருதப்படும் ஆரியர்களின் கலப்பு இதில் இல்லை என்பது ஒரு முக்கியமான முடிவாகும்.

சிந்து சமவெளி நாகரிகத்தில் ஒன்றான ஹரப்பா நாகரிகத்திலிருந்து ஒரு நபரின் முதல் மரபணுவை ஆராய்ச்சியாளர்கள் வெற்றிகரமாக வரிசைப்படுத்தியுள்ளனர். நான்கு முதல் ஐந்து ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த ஒரு நபருக்கு சொந்தமான இந்த மரபணுவை ஆராய்ந்ததன் மூலம் இந்தியாவின் தற்கால மக்கள் பெரும்பாலும் இந்த பண்டைய சிந்துவெளி கலாசாரத்தைச் சேர்ந்தவர்களிடமிருந்து வந்திருக்கலாம் என்று அந்த ஆராய்ச்சி கூறுகிறது.

தெற்காசியாவில் விவசாயம் எவ்வாறு தொடங்கியது என்பதற்கான ஆச்சரியமான தகவலையும் இது வழங்குகிறது. இதற்கு முந்தைய ஆராய்ச்சிகளின் மூலம் விவசாயம் மத்தியகிழக்கு பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்டதாக கண்டுபிடிக்கப்பட்டது. பலரும் அங்கிருந்தே சிந்துவெளி பிரதேசத்திற்கு விவசாயம் வந்திருக்கலாம் என்று கருத்தியிருந்தனர். ஆனால், விவசாயம் முதலில் எழுந்த மத்திய கிழக்கு பகுதியைச் சேர்ந்த மக்களால் இங்கு கொண்டு வரப்படவில்லை என்பதையும் இந்த ஆய்வு காட்டுகிறது. அதற்குப்பதிலாக, இப்பிரதேசத்தில்வேட்டையாடித்திரிந்துவாழ்ந்த சமூகம் மூலம் விவசாயம் தொடங்கியது என்றும் மேலும் விவரிக்கின்றது.

"ஹரப்பா நாகரிகம் பண்டைய உலகின் ஆரம்பகால நாகரிகங்களில் ஒன்றாகவும், இந்திய கலாச்சாரம் மற்றும் மரபுகளின் முக்கிய ஆதாரமாகவும் இருந்தது, ஆனால் இந்நாகரீகம் பிற்கால மக்களுக்கும் அவர்களின் சமகாலத்தவர்களுக்கும் எவ்வாறு தொடர்புபடுத்தியது என்பது ஒரு மர்மமாக இருந்து வந்திருக்கின்றது" - என்று இந்தியாவின் புனேவில் உள்ள டெக்கான் கல்லூரியில் தொல்பொருள் ஆராய்ச்சியாளரும் மற்றும் இந்த ஆய்வின் முதல் ஆசிரியருமான அகழ்வாராய்ச்சியாளரான வசந்த் ஷிண்டே கூறுகிறார். இவர் தற்போது அப்பல்கலைக்கழகத்தின் உபவேந்தராகவும் உள்ளார்.





கீழடியில் கண்டெடுக்கப்பட்ட தங்க அணிகலன்கள்

தெற்காசியாவின் ஒரு பெரிய பகுதியில் உலகின் முதல் பெரிய அளவிலான நகர்ப்புற சமூகங்களில் ஒன்றாக இருந்த சிந்துவெளி நாகரீகமானது கி.மு. *2600* முதல் *1900* வரை அதன் உச்சத்தை தொட்டது. பண்டைய எகிப்து மற்றும் சீனா மற்றும் மெசொப்பொத்தேமியாவின் பண்டைய நாகரிகங்களுக்கு ஏறக்குறைய சமகாலத்தவர்களாகவும் இருந்த இவர்கள், நீண்ட தூரங்களில் வர்த்தகம் செய்து முறையான நகர திட்டமிடல், விரிவான வடிகால் அமைப்புகள், களஞ்சியங்கள் மற்றும் எடைகள் மற்றும் நடவடிக்கைகளின் தரப்படுத்தல் ஆகியவற்றை உருவாக்கினார்கள்.

தெற்காசியாவின் தாழ்வான பல பகுதிகளில் காணப்படுவது போன்ற வெப்பமான, ஏற்ற இறக்கமான காலநிலைகள் காரணமாக அகழ்வாராய்ச்சிகளில் எடுக்கப்படும் டி.என்.ஏக்கள் பழுதடைந்தேயிருக்கும். அதனால் இப்பகுதியில் அமைந்துள்ள தொல்பொருள்தளங்களில்மீட்கப்பட்ட தனிநபர்களின் டி.என்.ஏவை வரிசைப்படுத்துவது இப்போதுவரை சாத்தியமில்லாமல் இருந்தது.

சிந்து சமவெளியின் பண்டைய மக்களைப் பற்றிய ஆராய்ச்சிகளுக்காக ஹார்வர்ட் பல்கலைக்கழக விஞ்ஞானியான ரீச் தனது சொந்த டி.என்.ஏ ஆய்வகத்தை *2013* இல் லக்னோவில் நிறுவினார். இந்த ஆய்வு கூடத்தில், ரீச் மற்றும் அவரின் இரண்டு உதவி விஞ்ஞானிகளான வாகீஷ் நரசிம்மன் மற்றும் நிராஜ் ராய் ஆகியோரும் *61* எலும்பு மாதிரிகளை ஆராய்ந்தனர். அவற்றில், மிகக்குறைந்த அளவு உண்மையான பண்டைய டி.என்.ஏ இருந்ததை கண்டுபிடித்தனர்.

**(11ஆம் பக்கம் பார்க்க)**







திராவிட இனக் குழுமங்களினதும் ஆரிய இனக் குழுமங்களினதும் தற்போதைய பிரதேசங்கள்

# வரலாற்றின் மர்மங்களை அவிழ்த்து வேரடிகளை காண்பிக்கும் கீழடி!

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களின் குழு இந்த டி.என்.ஏ மாதிரியை வரிசைப்படுத்த நூறுக்கும் மேற்பட்ட முயற்சிகளை மேற்கொண்டதாக ரீச் கூறுகிறார்:

இக்கண்டுபிடிப்புகளுக்கு முன்பாக சிந்து சமவெளி நாகரிக மக்களின் மரபணு தோற்றம் குறித்து பல கோட்பாடுகள் இருந்தன. அவர்கள் தென்கிழக்கு ஆசிய பிதேசத்தில் வேட்டையாடித் திரிந்து வாழ்ந்த சமூகம் போலவோ அல்லது அவர்கள் ஈரானியர்களைப் போலவோ அல்லது அவர்கள் ஸ்டெப் ஆயர்களை போலவோ இருக்கலாம் என்று பலரும் கருதினர். ஆனால், அது தென்னிந்தியாவில் வாழும் இனக்குழுமத்தையே ஒத்திருந்தது என்று மேலும் சொல்கின்றார்.

ரீச், ஷிண்டே மற்றும் அவர்களது குழுவைப் பொறுத்தவரை, இந்த கண்டுபிடிப்புகள் ஒரு ஆரம்பம் மட்டுமே. “ஹரப்பன்கள் ஒரு நகர நாகரிகத்தை கட்டியெழுப்பினர். ஆனால், அவர்களுள் பல இனக்குழுக்கள் இருந்திருக்கக்கூடும். இந்த வேறுபாடுகளை ஒருவரிலிருந்து எடுக்கப்பட்ட மரபணுவில் இருந்து மாத்திரம் சந்தேகத்திற்கு இடமின்றி நாம் கண்டுபிடிக்க முடியாது” - என்று ஷிண்டே கூறுகிறார்.

“இந்த ஒற்றை நபரிடமிருந்து எடுக்கப்பட்ட டி.என்.ஏயிவிலிருந்து வெளிவரும் நுண்ணறிவு தெற்காசியாவின் பண்டைய டி.என்.ஏ ஆய்வுகளின் மகத்தான எதிர்காலத்தை கட்டியம்கூறி நிற்கின்றது. பல அகழ்வாராய்ச்சிகளினூடாக பல மனிதர்களிலிருந்து எடுக்கப்பட்ட டி என்ஏக்களை ஆராய்வதன்மூலம் எதிர்காலத்தில் இந்திய துணைக்கண்டத்தின் ஆழமான வரலாற்றை தெளிவாக அறிந்து கொள்ளலாம்” - என்று முடிவாக சொல்கின்றார்.

இந்தியாவை பொறுத்தளவில் அகழ்வாராய்ச்சிகளில் அரசியல் கலப்பு இருந்து வருவதை அவதானிக்க முடிகின்றது. இந்த ஆய்வு உட்பட கடந்த சில ஆண்டுகளில் வெளியிடப்பட்ட பல ஆராய்ச்சிகள் ஆரியர்கள் கிழக்கைரோப்பிய ஸ்டெப் பகுதியில் இருந்து வந்தவர்கள் என்றும் அவர்களேசமஸ்கிருதத்தைகொண்டுவந்தவர்கள் என்னும் கருதுகோளுக்கு வலுச்சேர்த்து வருகிறன. ஆனால் துரதிஷ்டவசமாக இந்த ஹார்வர்ட் விஞ்ஞானிகளுடன் சேர்ந்து கட்டுரை வெளியிட்ட வசந்த் ஷிண்டே தற்பொழுது குத்துக்கரணம் அடித்து சிந்து வெளிநாகரிக மக்கள் சமஸ்கிருதம் பேசினார்கள் என்று பத்திரிகையாளர் சந்திப்பொன்றில் கூறியிருக்கின்றார். பாவம் அவரும் தனக்கு கிடைத்திருக்கும் உபவேந்தர் பதவியையும் எதிர்காலத்தில் கிடைக்கவிருக்கும் ஆராய்ச்சி நிதியையும் காப்பாற்ற வேண்டியிருந்திருக்கலாம்.





பானை ஓடுகளில் காணப்படும் கீறல்களும் தமிழி (தமிழ் பிராமி) எழுத்தில் எழுதப்பட்ட பெயர்களும்.

ஆனால் இந்த ஆராய்ச்சியில் முக்கிய பங்காற்றிய மற்ற விஞ்ஞானிகள் இதை மறுத்திருக்கின்றனர் என்பது ஆறுதலான ஒருவிடயம்.

கீழடியில் முதல் மூன்று கட்ட அகழ்வாராய்ச்சியில் முக்கிய பங்காற்றிய அமர்நாத் பாலகிருஷ்ணன் அதிரடியாக ஒரிஸாவுக்கு மாற்றப்பட்டது ஞாபகம் இருக்கலாம். கீழடியில் தெய்வ வழிபாடு சம்பந்தமான எந்த பொருட்களும் கண்டுபிடிக்கப்படவில்லை என்று அவர் அறிக்கை விட்டதே இதற்கு காரணம் என்று சொல்லப்படுகின்றது.

சங்ககாலத்தில் இயற்றப்பட்ட தொல்காப்பியம் என்னும் நூல் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் ஆகிய நானிலங்களில் வாழ்ந்த மக்கள் சேயோன் (திருமால்), மாயோன் (முருகன்), வேந்தன் (இந்திரன்), வருணன் (வருணபகவான்) ஆகிய தெய்வங்களை வழிபட்டனர் என்று கீழ்வரும் பாடல் மூலம் சொல்கின்றது.

மாயோன் மேய காடுறை உலகமும்,
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்,
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல்
எனச், சொல்லிய முறையான் சொல்லவும்
படுமே.

தொல்காப்பியர் சொல்வது உண்மையானால் நானிலங்களுக்கும் சொந்தமான கடவுள்கள் எங்கு போயினர்?

அடையாளப்படுத்தப்பட்ட 100 ஏக்கருக்கும் மேற்பட்ட கீழடி ஆகழ்வாராய்ச்சி பிரதேசத்தில் 5 ஏக்கர்தானும் அகழப்படாத நிலையில் யாரைக் குளிர்விக்க இதை அவர் சொன்னார்?

அரசியல் கலக்கப்படாத கீழடி, சிந்து வெளி நாகரிக அகழ்வாராய்ச்சிகளே இந்திய உபகண்டத்தினதும் தமிழர்களினதும் ஒரு தெளிவான வரலாற்றை எமக்குத்தரும்.





# கீழடியில் நடைபெறும் கிணற்றடிச்சண்டை



தமிழகத்திலிருந்து
டான் அசோக்

தமிழ் என்பது மொழி. திராவிடம் என்பது இனம். இந்த அடிப்படைப் புரிதல் இல்லாமல் நம்மில் பலர் கீழடியைப் பற்றி அடித்துக் கொண்டிருக்கும் நேரத்தில், மிகவும் சைலண்டாக ஒரு பல்லி கீழடி என்பது பாரத நாகரீகம் என சொல்லியிருக்கிறது.

காலம் காலமாக தமிழ்நாட்டு அரசியலின் அடிநாதம் இதுதான். நமக்குள் சண்டையிட்டுக் கொண்டிருப்போம். அந்த இடைவெளியில் கண்டதெல்லாம் அரியணை ஏறிவிடும். ஆனால் இதில் ஒரு கொடூர நகைச்சுவை என்னவென்றால் கீழடி நாகரீகம் பாரத நாகரீகம் எனச் சொல்லி இருப்பவர் தமிழ்நாட்டின் தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சர் மா.பா. பாண்டியராஜன். அதற்கு அவர் சொல்லும் காரணம்தான் இன்னும் வேடிக்கை. பாரத நாகரீகம் என சொன்னால்தான் மத்திய அரசு நிதி தருவார்களாம்.

"அடப்பாவிகளா. கீழடி நிரூபிப்பதே தமிழ் நாகரீகம். தனி நாகரீகம், இந்திய நாகரீகம் இல்லை என்பதைதான். அந்த அடிப்படையையே அடகு வைத்து நிதி வாங்கி என்ன பண்ணுவது"

நேற்று காலை நண்பர் ஒருவர் பாஜகவின் ஐடி விங்கைப் பற்றி அதிசயித்துப் பேசிக்கொண்டிருந்தார். முன்பெல்லாம் எதிரிகள் என இருந்தால் அவர்கள் எதிரிகளாக இருப்பார்கள். கண்முன் நிற்பார்கள். அவர்கள் சில செய்கைகளைச் செய்வார்கள், நாம் பதிலுக்குச் சிலவற்றைச் செய்வோம். தனிப்பட்ட வாழ்க்கை மட்டுமல்ல, அரசியலிலும் அப்படித்தான். ஆனால் இன்று பாஜக எனும் கட்சியும் அதைச் சேர்ந்த ஆட்களும், குறிப்பாக அவர்களின் ஐடி விங் செய்யும் வேலைகள் எல்லாம் நிஜமாகவே பீதியையும், ஆச்சரியத்தையும், இப்படியெல்லாம் கூட ஆட்கள் இருப்பார்களா என்கிற அருவெறுப்பையும் கொடுக்கிறது. ஒரு ஒட்டுமொத்த தலைமுறையே ஏன் மோடி வியாதி பீடித்து பைத்தியமாக அலைகிறார்கள் என்பதற்கான பதிலும் இதில்தான் உள்ளது.

என்னவோ ஏதோ என நினைக்காதீர்கள். கீழடி விஷயத்தில் பாஜகவினரின் செயல்திறனை நினைத்துதான் நண்பர் வாயைப் பிளந்தார். கீழடி அகழ்வாராய்ச்சியை பாஜக அரசு எப்படிக் கையாண்டது என்பது உலக மறிந்த விஷயம். தோண்ட முடியாது என்றார்கள், ஆர்வம் காட்டிய அதிகாரிகளை இடமாற்றம் என்கிற பெயரில் தூக்கி அடித்தார்கள், பொருட்களைத் தூக்கிக்கொண்டு ஓடி கிராம மக்களின் கைகளில் பிடிபட்டு உதைபட்டார்கள், அகழ்வாராய்ச்சியை ஒட்டுமொத்தமாக நிறுத்தி வைத்தார்கள். பின்னர் எதிர்க்கட்சிகள் எழுப்பிய தொடர்குரலினால் மாநில அகழ்வாராய்ச்சித்துறை பணியைத் தொடர்ந்து இன்று 2600 ஆண்டுகால தமிழ் வரலாறு வெளிப்பட்டிருக்கிறது.

அதுவும் எப்படி வெளிப்பட்டிருக்கிறது?

பண்டைய தமிழர்கள் கடவுள், மதம், சாதியின்றி வாழ்ந்தார்கள் என்பதை மெய்ப்பிக்கத்தக்க வகையில், சங்கிகளின் மத அரசியலில் ஒட்டுமொத்தமாக மண்ணைப் போடும் அளவுக்கு வெளிப்பட்டிருக்கிறது. ஆனால் பாஜக ஐடி விங் அசரவில்லையே! சோர்வடைய அவர்கள் என்ன நேர்மையாளர்களா, உண்மை விளம்பிகளா? பாஜகவினர்தானே! உடனே ஒரு நோட்டீஸை ரெடி பண்ணிவிட்டார்கள்.



"70 ஆண்டுகளாக தமிழரின் வரலாற்றை மூடி மறைத்த காங்கிரசின் துரோகம். அதை வெளிக்கொணர்ந்த மோடிக்கு நன்றி!" என்று அடித்துவிட்டார்கள்.

இதைப் பார்த்துதான் என் நண்பர் அதிர்ச்சியாகி விட்டார். ரத்தத்தில், மனதில், மூளையில் கொஞ்சம் கூட நேர்மையோ, வெட்கமோ, மானமோ, சுயமரியாதையோ இல்லாத ஒரு கும்பலால்மட்டும்தான் இப்படி பல்டி அடிக்க முடியும்!

இப்படி வெளிப்படையாக காவி உடை தரித்த பாஜக சங்கிகள் ஒரு ரூட்டில் போனால், நம் உள்ளூர் சங்கிகளான "நாம் தமிழர்" தம்பிகள் சும்மா இருப்பார்களா?

சமகாலத்தமிழர்களுக்குரத்தஃவிந்துப்பரிசோதனை செய்து தமிழர் - தமிழரல்லாதவர் என்று சர்டிபிகேட் கொடுப்பவர்கள் ஆயிற்றே. உடனே திராவிட இயக்கத்தின் மீது சேற்றை வாரி இறைக்கத் துவங்கிவிட்டார்கள்.

"கீழடியைப் பார்த்தீர்களா? தமிழர்கள் அப்போதே படித்திருக்கிறார்கள். ஆனால் திராவிட இயக்கம்தான் நம்மைப் படிக்க வைத்தது எனச் சொல்வது எவ்வளவு பெரிய மோசடி" - என்று நாம் தமிழர் கோஷ்டிகள் சீறியிருக்கிறார்கள்.

பண்டைய கால தமிழர்கள் படித்திருக்கலாம், எழுதியிருக்கலாம். ஆனால் நம் தாத்தா பாட்டியோ, அவர்களின் அப்பா அம்மாவோ படிக்கவில்லையே ஏன்? சட்டை போட, மாராப்பு போடக்கூட வழி இல்லாமல் அலைந்தார்களே, ஏன்? கொஞ்சம் கூடவா இந்த "நாம் தமிழர்" தம்பிகள் யோசிக்கமாட்டார்கள்?

தமிழர்கள் படித்து வாழ்ந்ததையும், பின்னாளில் சாத்திரம், மதம், சாதி எனப் பலவற்றை ஆரியர்கள் கொண்டுவந்து தமிழர்கள் அறிவில், கல்வியில், வாழ்வில், வளர்ச்சியில் கல்லைப் போட்டதை கீழடியைப் பார்த்தாவது உணர வேண்டாமா?

2600 ஆண்டுகளுக்கு முன்பே எழுதப்படிக்கத் தெரிந்த ஒரு இனத்துக்கு விதம் விதமாக கடவுள்களை அறிமுகம் செய்து, மதத்தை அறிமுகம் செய்து, வர்ணத்தை அறிமுகம் செய்து, மனுதர்மத்தை அறிமுகம் செய்து நம் மூளையை தரிசாக்கிய ஆரியர்களை எதிர்த்து 2500 ஆண்டுகளாக எவனும் கேள்வி கேட்கவில்லை. எவனுக்கும் சூடோ, சுரணையோ, வெட்கமோ, மானமோ வரவில்லை. ஒரே ஒரு இயக்கம் எதிர்த்துக் கேள்வி கேட்டது. ஒரே ஒரு இயக்கம் நமக்கெல்லாம் சுரணை ஊட்டியது. சுயமரியாதையை அறிமுகப்படுத்தியது.

"நாம் தமிழர்" தம்பிகள் இப்படி என்றால், அண்ணன் அவர் பங்குக்கு ஏதாவது சொல்லவேண்டாமா? சொல்லி இருக்கிறார். பண்டைய காலத்தில் இந்துக் கடவுள்கள் இல்லை என்பதை கீழடி நிரூபித்துள்ளதாம். பாஜகவுக்கு எச்சரிக்கை விடுக்கிறாராம்! பின், ஆண்டுதோறும் முப்பாட்டன் முருகனுக்கும், மாயோன் என்கிற பெயரில் கிருஷ்ணனுக்கும் விழா எடுக்கிறதே நாம் தமிழர் கட்சி, அவர்கள் எல்லாம் என்ன மதக் கடவுள்கள்? கீழடியில் முப்பாட்டன் முருகன் பொம்மையோ, மாயோன் பொம்மையோ கிடைத்துள்ளதா? நீங்கள்கூட நினைக்கலாம். கீழடியில் தமிழர்கள் மதமில்லாதவர்கள் என நிரூபணமானதால் சீமான் இப்படி முப்பாட்டன் பூஜை நடத்துவதையும், காவடி தூக்கி ஆடுவதையும் நிறுத்திவிடுவார் என்று. ஆனால் மாட்டார்! ஏனென்றால் அவர் சீமான்!

மா.பா. பாண்டியராஜனைப் பேட்டி எடுத்த இதே ஜீவசகாப்தனுக்கு சீமான் கொடுத்த பேட்டிகூட ஒன்று உண்டு. அதில் கிருஷ்ண பரமாத்மா சொன்ன கீதை நமக்கு வேதமாக உண்டு என்றும், மகாபாரதப் போருக்கு தமிழன் தான் சோறாக்கிப் போட்டான் என்றும் பேசி இருக்கிறார். சுகி.சிவம் போன்ற பழுத்த ஆன்மீகவாதிகளேமகாபாரதத்தையும், ராமாயணத்தையும் கதைகள் என பேசிவருகிறார்கள். ஆனால் நம் அண்ணனைப் பார்த்தீர்களா? அந்தந்த நேரத்துக்கு ஏற்றாற்போல மாறிக்கொள்வார். இன்று அண்ணா பல்கலைக்கழகத்தில் கீதை புகுத்தப்பட்டதை எதிர்த்து அவரும் கிளம்புவிட்டார் என்பதுதான் வேடிக்கை.

எனக்கு நிஜமாகவே ஒன்று புரியவில்லை. ஒரு படத்தில் தாமு பல படங்களில் இருந்து பல சீன்களை ஒன்றாகச் சேர்த்து தியேட்டரில் ஒரே படமாக ஓட்டுவார். ஒன்றுக்கொன்று தொடர்பில்லை என்றாலும் பார்க்கும் மக்கள் கைதட்டி ரசிப்பது போலக் காட்டுவார்கள். சீமானைப் பார்த்தால் தாமு போலவும், அவர் தம்பிகளைப் பார்த்தால் அந்த மக்களைப் போலவும்தான் எனக்குத் தெரிகிறார்கள். ஏனெனில் ஒரு நாளைக்கு ஒருமுறை முரண்பாடாக பேசினால் பரவாயில்லை. ஒருநாளை மூன்றுவேளை சாப்பாட்டைப் போல மூன்று வேளைக்கும் மூன்று தடவை முரணாகப் பேசினால் அதை எதில் சேர்ப்பது?

ஆனால் சில நேரங்களில், திராவிட இயக்கத்தை ஒன்றாகச் சேர்ந்து எதிர்க்கத் தேவையில்லாத நேரங்களில், ஒன்றாகச் சேர்ந்து பெரியாருக்கு எதிராக ட்வீட் செய்யத் தேவை இல்லாத நேரங்களில் "நாம் தமிழர்" தம்பிகள் பாஜக சங்கிகளோடு இணையத்தில் சண்டை போடுவதைப் பார்த்திருக்கிறேன். பார்க்கவே பாவமாக இருக்கும். ஏனெனில் இருவரும் ஒருவரே என்பதில் இரண்டுகூட்டத்திலும் பலருக்குத் தெரிவதே இல்லை.

எது எப்படியோ. கீழடி தமிழர்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொடுத்திருக்கிறது. கீழடி நாகரீகம் திராவிட இயக்கம் முன்வைத்த பகுத்தறிவு நாகரீகம். நாம் வரலாற்றுப் பெருமைகளைக் கண்டு பெருமிதப்படும் அதே சூழலில், இப்போது எங்கே நகர்ந்திருக்கிறோம் என்பதையும் பார்க்க வேண்டும். மதமற்ற, சாதியற்ற சமதர்மச் சமுதாயம் 2600 ஆண்டுகளுக்கு முன்பே இருந்திருக்கிறதென்றால் இப்போது நாம் எங்கே இருக்க வேண்டும்? ஆனால் நாம் எங்கிருக்கிறோம்? பல லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு குரங்காக இருந்தோம், இப்போது மனிதனாகிவிட்டோம் என்பதுதான் பரிணாமவளர்ச்சி. ஆனால் 2600 ஆண்டுகளுக்கு முன்பு தமிழர்களாக இருந்தோம் ஆனால் இன்று?


மதங்களாக, சாதிகளாகப் பிரிந்துவிட்டோம் பல கழிசடைகளை அரசியல் செய்ய அனுமதித்துவிட்டோம் என்றால் அது பரிணாம வீழ்ச்சியில்லையா?

வீர சத்திரியன்டா, வீர மல்லன்டா, என்னடா பார்வை நாங்கதான்டா சேர்வை என பல சாதிகளைச் சேர்ந்த இளைஞர்கள், மரத்தின் கீழே நிறுத்திவைத்த காரின் மீது காக்கைகள் அசிங்கம் செய்வதைப் போல, தமிழ் இணையத்தை அசிங்கம் செய்துவைத்திருக்கும் சூழலில், கீழடி ஆய்வு நம்மை நாமே மீட்டெடுத்துக் கொள்ள கிடைத்திருக்கும் வரலாற்று வாய்ப்பு. நாம் சங்கிகள் அல்ல. புஷ்பகவிமானம்தான் முதல் விமானம் என்று பொய் சொல்ல. நாம் சீமான் போன்ற போலித் தமிழ்த்தேசியவாதிகள் இல்லை. யானைக்கதைகள், ஆமைக் கதைகள் சொல்லி ஊரை ஏமாற்ற.

நாம் திராவிடத் தமிழர்கள். நமக்கு நிஜமாகவே வரலாறொன்றிருக்கிறது. நாம் பெருமையாகச் சொல்லலாம், "நாங்க தமிழன்டா. நாங்க மனுசங்கடா.." - என்று!


Lycamobile
4G LTE
THE UNLIMITED PLAN
BONUS DATA
OFFER
Unlimited Plan M
50GB
22GB + 28GB BONUS DATA
$40
Unlimited
Oz talk & text
Unlimited
Calls to 15 countries
Unlimited Plan S
36GB
12GB + 24GB BONUS DATA
$30
Oz talk & text
Calls to 12 countries
Unlimited Plan XL
40GB + 35GB BONUS DATA
$50
Oz talk & text
Calls to 54 countries
lycamobile.com.au
1300-854-607
coles
BIGW
TARGET
coles express
NewsLink
This offers applies to the new customers only. In order to get the Bonus data, the customers has to successfully Activate the sim with one of the following plans. The eligible free bonus data will be added automatically within 6 hours of successful Sim Activation. The offer is valid for 28 days. The plan will automatically renewed with a standard data at the end of the 28 days period using the main balance available in your Lycamobile number or through the payment card, depending on the initial activation method. If the customer do not want the plan to renew, dial *190# and follow the instructions to cancel the plans auto renewal. The Lycamobile service is only for personal use. If you use the service unreasonably (e.g. fraudulently or for business purposes), we may suspend or cancel your service. These rates and inclusions are current as of 20/05/2019. We may remove or amend this offer by giving 7 days' notice on our website at www.lycamobile.com.au. Any plans already activated at time of withdrawal will continue until expiry of 28 days from activation. For More Info, Please visit: www.lycamobile.com.au.

# ஓடவும் முடியாது ஒழியவும் முடியாது




தீபு ஹரி

மனிதர்களுடைய உளவியலை தொலைக்காட்சி வருவதற்கு முன் - வந்ததற்குப் பின் என இரண்டு வகையாகப் பிரிக்கலாம். திரைப் படங்கள் மக்களுடைய மனதில் ஏற்படுத்திய பாதிப்பைவிட, தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் ஏற்படுத்துகிற பாதிப்பும், அவை மக்கள் மீது கொண்டிருக்கிற செல்வாக்கும் மிக அதிகம். இதற்கு முக்கியமான காரணங்களாக இருப்பது, இதற்காக செலவிடப்படும் நேரமும், செலவும் திரையரங்குகளுக்குச் செல்வதைவிட ஒப்பீட்டளவில் குறைவு என்பதும், வேலைகளுக்கு எந்த பாதிப்பும் இல்லாமல், அவற்றைச் செய்துகொண்டே நிகழ்ச்சிகளையும் பார்த்துக்கொள்ளலாம் என்று இவை கொடுக்கிற வசதியும்தான்.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் வளர்ச்சி என்பது இன்றைக்கு அபரிமிதமானதாக இருக்கிறது. ஆரம்பகால தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் வரலாற்றை நினைத்துப் பார்த்தால் இவை நமக்கு நன்கு புலப்படும். இன்றைக்கு பல்வேறு விதமான ரசனைகள் கொண்ட மக்களை திருப்திப்படுத்தும் விதமாக, பல்வேறு வகையான நிகழ்ச்சிகள் வடிவைமைக்கப்பட்டு ஒளிபரப்பப்படுகின்றன. செய்திகள், பாட்டு, நடனம், நாடகம், திரைப்படம் என ஒவ்வொரு பிரிவுக்கும் பல சேனல்கள் இயக்கப்படுகின்றன. ஒரு பக்கம் லாபம் ஈட்டவும் மறுபக்கத்தில் பார்வையாளர்களுக்குச் சலிப்பு தட்டாத வண்ணம் - இதுவரை இல்லாத அளவில் - புதிதாக எதையாவது தந்தே ஆகவேண்டும் என்ற கட்டாயத்துடனும் இந்த நிகழ்ச்சிகள் படைக்கப்படுகின்றன.

இங்கேதான் "ரியாலிட்டி ஷோ" -என்ற காட்சிக்கான கதவுகள் திறக்கின்றன.

உலகின் முதல் "ரியாலிட்டி ஷோ" ஜனவரி 11, 1973 ஆம் ஆண்டு வெளிவந்த "யுெ யுஅநசளைஉயெ கயஅடைல" என்கிற நிகழ்ச்சியாகும். இந்த நிகழ்ச்சியைப்பற்றிப் பேசிய அதன் தயாரிப்பாளரான Craig Gilbert – "ஒரு அமெரிக்க நடுத்தரக் குடும்பத்தின் சிந்தனை முறையும், வாழ்க்கை முறையும் எப்படி இருக்கிறது என்பதை வெளிச்சமிட்டுக் காட்டுவதே இந்நிகழ்ச்சியின் நோக்கம்" - என்று கூறினார். இதற்காக Bill மற்றும் Pat Loud குடும்பத்தினர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஆனால்Craig கூறியபடி, நடுத்தர வர்க்க மனநிலையோ, அவர்களுடைய வாழ்க்கை முறையோ எதுவும் காட்டப்படாமல், அவர்களுக்குள்ளே இடம்பெற்ற உணர்ச்சிப் போராட்டங்களுக்கே முக்கியத்துவம் அளித்து அந்த நிகழ்ச்சி ஒளிபரப்பப்பட்டது. அங்கே நடக்கிற நாடகத்தனமான செயல்களே, பார்வையாளர்களைக் கவரும் வகையில் எடிட் செய்யப்பட்டு வழங்கப்பட்டது. இதனால் அக்குடும்பத்தினர் பொதுவாழ்வில் பல சங்கடங்களுக்கு உள்ளானார்கள். அவர்களுடைய மூத்த மகனான Lance ஒரு gay என்பது இந்த நிகழ்ச்சியின் ஊடாக வெளிப்பட்டதோடு அல்லாமல், Bill மற்றும் Pat Loud தம்பதியினரின் 21 வருடகால திருமண வாழ்க்கையும் இந்த நிகழ்ச்சியினால் முடிவுக்கு வந்தது.

இவை அந்நிகழ்ச்சி பற்றிய பல விதமான சர்ச்சைகளை மக்களிடையே கிளப்பின. அவற்றில் முக்கியமாக இந்த நிகழ்ச்சியின் நம்பகத்தன்மை சந்தேகிக்கப்பட்டது. இதில்பங்குபெறுகிறவர்கள்உண்மையிலேயே தங்களுடைய உண்மையான உணர்வுகளைத்தான் இந்நிகழ்ச்சியில் வெளிப்படுத்துகிறார்களா? என்பதும் தொடர் கமரா கண்காணிப்புக்கு நடுவில் அது எப்படி சாத்தியம் என்பதும் பிரதான கேள்விகளாக முன்வைக்கப்பட்டன. ஆனால் இந்நிகழ்ச்சி பொதுவெளியில் எத்தனை சர்ச்சைகளைக் கிளப்பியதோ அத்தனைக்கு அத்தனை பார்வையாளர்களையும் பெற்றது. அதுவே பத்து வருடங்களுக்குப் பிறகு "An American family revisited" என்று தொடங்கி Survivor, The bachelor, American Idol, Big Brother போன்ற பல நிகழ்ச்சிகளுக்கு வழிக்கோலியது.

சரி, இதைப்போன்ற ரியாலிட்டி ஷோக்கள் மக்கள் மத்தியில் இத்தனை பிரபலமாகவும், வெற்றி பெறவும் என்ன காரணம்?

இதற்கு உளவியல் ரீதியான நிறைய காரணங்கள் தெரிவிக்கப்படுகின்றன. அவற்றில் முக்கியமானவையாக நான் கருதிய சிலவற்றை இங்கே கொடுத்திருக்கிறேன்.

முதலாவதாக - இன்றைய தலைமுறையைச்சேர்ந்தவர்களால் - பொதுவாக - உணரபடக்கூடிய தனிமை ஒரு முக்கியமான காரணமாகச்சொல்லப்படுகிறது. முன்பு போல குடும்பங்களுக்கு மற்றும் உறவுகளுடனும் நட்புகளுடனும் இருந்த பிணைப்புகள் இப்போது குறைந்திருப்பதும், ஒவ்வொரு மனிதருடைய தனிப்பட்ட வாழ்வு முறையிலும் சக மனிதர்களுக்கான இடம் குறைந்துகொண்டே வருவதும்பொருட்படுத்தக்கூடிய காரணங்களாக இருக்கின்றன. அந்த வெற்றிடத்தை இதைப் போன்ற நிகழ்ச்சிகள் நிரப்புகின்றன. இது தவிர்க்க முடியாத காரணங்களுள் ஒன்றாகப் பார்க்கப்படுகின்றது.

இரண்டாவதாக - voyeurism எனப்படும் அடுத்தவர்களுடய தனிப்பட்ட வாழ்வின் மீது இயற்கையாகவே மனிதர்களுக்கு இருக்கும் அதீத ஆர்வம். அதாவது, புதினம் அறிவதிலுள்ள ஆர்வம். விடுப்பு அல்லது பூராயம் புடுங்குதல் என்று ஊர்வழக்கத்தில் அழைக்கப்படுவது.

பிறகு - celebrities களும்சாதாரண மனிதர்களுக்குள்ள பலம் மற்றும் பலகீனங்களை உடையவர்கள்தான் என்பதை அறிந்து கொள்வதில் இருக்கும் ஒரு ஆசுவாசம்.

இவையெல்லாம்இந்நிகழ்ச்சிகளின்வெற்றிக்குப் பின்னிருக்கும் முக்கியமான காரணிகள்.

பல நாடுகளில் இந்த Big Brother நிகழ்ச்சியைத் தழுவி எடுக்கப்படும் நிகழ்ச்சிகள் வெற்றிகரமாக தொடர்ந்து ஒளிபரப்பாகிக் கொண்டிருக்கின்றன. அதற்குப் பின்னால் ஒரு பெரிய குழுவின் பங்களிப்பு இருக்கின்றது. இதில் நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய விஷயம் இந்த நிகழ்ச்சிகளில் பங்கேற்பவர்களை மிகக் கவனமாக பல்வேறு வகையான சோதனைகளுக்குப் பிறகே (உளவியல் சோதனை உட்பட) நிகழ்ச்சிக்கு தேர்ந்தெடுக்கின்றனர். இவர்களுடைய பின்புலம் பற்றி ஓரளவு முழுமையாக தயாரிப்பாளர்கள் தெரிந்து கொள்கின்றனர். இவர்களுடைய behavioral pattern முதலியவற்றை ஆராய்கின்றனர். அதனடிப்படையில் அவர்களுடைய நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துகின்றனர்.

உதாரணமாக, விஜய் டி.வியில் ஒளிபரப்பாகும் "Big Boss" நிகழ்ச்சியின் லொஸ்லியாவிற்கு பிடித்த வண்ணம் நீலம் என்றும் கருப்பு சுத்தமாக பிடிக்காதது என்றும் வைத்துக்கொண்டால் லொஸ்லியாவை தேர்ந்தெடுக்க வேண்டும் என்று BigBoss குழு முடிவு செய்கிற ஒரு விஷயத்தை அவர்கள் நீல வண்ண கவரில் வைத்து விடுவார்கள். இதைப் போல பல நுணுக்கமான உளவியல் கூறுகள் இந்நிகழ்ச்சிகளில் இருக்கின்றன.




### விஜய் ரிவியின் "Big Boss"

இனி விஜய் ரிவியின் "Big Boss" நிகழ்ச்சிக்குள் வருவோம்.

Big Boss நிகழ்ச்சியை கமலஹாசன் வெற்றிகரமாக தொகுத்து வழங்குவது பற்றி நிறைய பேருக்கு கடுமையான விமர்சனங்கள் இருந்தாலும், அவரைத் தவிர வேறு ஒரு தகுதியான ஆள் இம்மாதிரியான ஒரு நிகழ்ச்சியை கையாளும் அளவிற்கு இங்கே இருக்கிறார்களா என்பது சந்தேகமே.

தற்போது ஒளிபரப்பாகிக்கொண்டிருக்கும் "Big Boss 3" முந்தைய முதலாம் மற்றும்இரண்டாம்சீசன்களைப்போலஇல்லாமல் - பார்வையாளர்களை பீதிக்கும் பதற்றத்திற்கு ஆளாக்காமால் - ஓரளவு சுமூகமாகவே போய்க்கொண்டிருக்கிறது. அதற்குக் காரணம் இந்தமுறை தெரிந்தோ தெரியாமலோBigBoss தெரிவுசெய்த போட்டியாளர்களே என்று கூறலாம். ஒவ்வொருவரும் ஓரளவிற்கு தங்களுடைய உணர்ச்சிகளின் மீது கட்டுப்பாடு உடையவர்களாக இருப்பதும், பெரும்பாலானோர் நடுத்தரப் பின்னணியுடைய குடும்பங்களில் இருந்து வந்ததும் பொருட்படுத்தக்கூடியதொரு காரணம்.

முக்கியமாக, இந்த தடவை வெளிநாட்டு - தமிழகத்திற்கு வெளியிலுள்ள - தமிழர்களையும் மனதில் வைத்து லொஸ்லியா, தர்ஷன், முகேன் போன்ற இலங்கை மற்றும் மலேசியா தமிழர்களுக்கும் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்க ஒரு வாய்ப்பை உருவாக்கியிருப்பது குறிடத்தகுந்த அம்சம்.

இவை அனைத்தும் சேர்ந்து சீசன் 3 நிகழ்ச்சியை பார்வையாளர்களுடைய விருப்பத்திற்குரியதாக மட்டும் இல்லாமல் Big Boss இன்விருப்பதுக்குரியதாகவும்மாற்றியிருக்கிறது. இதுவரை நாம் எந்த சீசனிலும் பார்க்காத ஒரு ஜாலியான Big Boss இந்தத் தடவை கிடைத்திருக்கிறார் என்பது அடுத்த அம்ஸம்.

இந்த சீசனில் ஐம்பதாவது நாளுக்குப் பிறகுதான் உண்மையாகவே விளையாட்டுத் தொடங்கியது. அதுவரை பின்வரிசையில் - ராமன் ஆண்டாலும், ராவணன் ஆண்டாலும் எனக்கொரு கவலையில்லை என்கிற மாதிரி - முகத்தை வைத்துக் கொண்டு வீட்டைச் சுத்தித் திரிந்த - முகேன், லொஸ்லியா, ஷெரின் போன்றவர்கள் எல்லாம் அதன் பிறகே உறக்கத்திலிருந்து உலுக்கப்பட்டவர்கள் போல உருப்பெற்று வந்தனர். கும்பல் குறைய ஆரம்பிக்க ஆரம்பிக்க ஒவ்வொருவருடைய தனித்தன்மைகளும், குணநலன்களும் வெளிப்பட ஆரம்பித்தன.

இவர்களில் எட்டுப்பேரை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். தீவிரமாக ஜெயிக்க வேண்டும் என்று விரும்பி அதற்கான முயற்சிகளை முதலில் இருந்தே மேற்கொண்டவர்கள். இரண்டாவது வகையினர் விளையாட்டு இறுதிக் கட்டத்தை எட்டிய பிறகு விளையாடி ஜெயிக்க விருப்பம் கொண்டவர்கள். இரண்டாவது பட்டியலில் இருக்கும் ஷெரின், லொஸ்லியா, கவின் போன்றவர்களுக்கு விளையாடி ஜெயிக்க வேண்டும் என்ற விருப்பம் முதலில் உள்ளூர இருந்ததோ என்னவோ உண்மைதான். ஆனால் அது விளையாட்டில் வெளிப்படவே இல்லை. முக்கியமாக ஷெரின், லொஸ்லியா இருவரும். லொஸ்லியா முதலில் காண்பித்த competitive spirit இடையில் அவருக்கும் கவினுக்கும் இடையே நிகழ்ந்த தீவிர நட்பால் தடைபட்டது. ஷெரின் முதலில் இருந்தே பெரிதாக வெற்றி பெற வேண்டும் என்கிற எண்ணம் இல்லாமலேயே விளையாடி வந்தார். கவின் என்னனெனவோ திட்டம் எல்லாம் போட்டு விளையாட வந்திருந்தாலும், அவர் யுக்திகள் என நினைத்தவை எல்லாம் அவருக்கு எதிராகவே திரும்பி அவரைக் கைவிட்டன. ஆனாலும் இந்த 3 சீசனிலும்அவரைப்போலநிதானமாககாய் நகர்த்தியவர்கள் வேறு யாரும் இல்லை. நிறைய பேர் சாதுரியமாக விளையாடுகிறோம் என்று நினைத்து சறுக்கி விழுந்து கொண்டிருக்க, இவர் சறுக்கி விழுந்ததை தன் சாதுரியத்தினால் சுதாரித்துக்கொண்டு விட்டார். அதை பின்னால் பார்க்கலாம்.

### சேரன்

இந்த சீசனிலேயே மிகுந்த மனோதிடம் வாய்ந்தவராக நான் கருதுவது சேரனைத்தான். அவரைப்பற்றி நன்கு அறிந்த பலரும் அவர் வெளியில் இருந்தபோது காட்டும் கோபத்திற்கும், big boss வீட்டிற்குள் காட்டிய அமைதிக்கும் சம்பந்தமே இல்லை என்று வியந்தார்கள். அவ்வளவு "கேமரா கான்சியஸ்" உடன் தன்னைப் பற்றிய பிம்பம் வெளியில் எப்படிப் பதிவாக வேண்டும் என்பதில் மிகத் தெளிவாக இருந்தார். மீரா விஷயத்தின் போது மட்டுமே அவர் பதறினாரே ஒழிய, மற்ற எல்லா விஷயங்களையும் மிகுந்த நிதானத்தோடேயே கையாண்டார். இதற்கு அவருடைய விளையாட்டுத் திட்டமிடல்களையும் தாண்டி, இயற்கையாகவே அவருக்குள் இருக்கும் சில நெகிழ்வான குணங்கள் கைகொடுத்தன. அவருடைய சம வயதினார்களான மோகன் வைத்யா, சரவணன்போன்றவர்கள்தடுமாறியஇடங்களை எல்லாம் அவர் மிக அழகாகவும், பொறுமையாகவும்கையாண்டது அவரைத் தமிழ் சமூகத்தின் முன் ஒரு உதாரணத்துக்குரிய தந்தையை முன்நிறுத்தியது. அத்தோடு நின்றுவிடாமல் ஒரு இயக்குனராக அவருக்குள் இருந்த தேடலும், கற்றுக் கொள்ள வேண்டும் என்கிற ஆர்வமும், போட்டி மற்றும் வெற்றி பெறவேண்டும் என்கிற மனப்பான்மையும் அவரை நல்ல போட்டியாளரராக மக்கள் முன் நிறுத்தியது. தமிழகத்தின்பாரம்பரியகலைகளைப் பயிற்றுவித்த வாரத்தில் அவருடைய தனித்தன்மைபளிச்சிட்டது அனைவருக்கும்நினைவிருக்கலாம். மொத்தத்தில் இந்த சீசனில் தலைமுறை இடைவெளியைப் பற்றி நன்கு புரிந்து கொண்டு - பிரச்சினைகள் வரும்போது ஓரளவு அதை சரியாகக் கையாண்டவர் சேரன் என்றே நினைக்கிறேன்.

### வனிதா

அடுத்து வனிதா. அவர்தான் இந்த சீசனின் "காயத்திரி" என்றெல்லாம் ஆரம்பத்தில் விமர்சிக்கப்பட்டார். ஆனால் காயத்திரியிடமிருந்த வெற்று அலட்டல்களோ, மேட்டிமைத்தனமோ சிறிதும் இல்லாதவராகவே வனிதா இருந்தார். Hardcore practical என்கிற வார்த்தை வனிதாவுக்குத்தான் பொருந்தும். ஆரம்பத்திலிருந்தேதனக்குமனதில்தோன்றியதைஎந்தத் தயக்கமும் இன்றிப் பேசியவர். தெளிவாக யோசிக்காமல் தான் நினைத்தைத் தயக்கமின்றிப் பேசியதே அவருடைய வீழ்ச்சிக்குக் காரணம். அவருடைய bossy யான குணமும், கணீரென்றகுரலும், தான்நினைத்தது சரி என்கிற பிடிவாதமுமே அவருடைய நல்ல குணங்களை மறைத்து ஒரு எதிர்மறையானஎண்ணத்தைமக்களிடையே உருவாகக்காரணமாகி விட்டது. Re entryக்குப் பிறகு சில நாட்கள் "பத்த வெச்சுட்டியே பரட்ட" என்கிற மாதிரியே வீட்டிற்குள்சுற்றித்திரிந்தபோதும், அதைத்தாண்டி அவருக்கு வாழ்கையைப் பற்றிய ஒரு புரிதலும், தெளிவும் இருந்தது. விளையாட்டை விளையாட்டாகப்பார்க்கவேண்டும் என்பதை எல்லோரையும்விட எப்போதும் சற்று அழுத்திச் சொன்னவர் வனிதா தான். எல்லாவற்றிற்கும் மேலாக, big boss voting குறித்து - எடிட் செய்வது குறித்து - எல்லாம் கமலிடம் அதிரடியாகப் பேசியதும், போட்டியாளர்களை எல்லாம் வைத்துச் செய்து கொண்டிருந்த big boss இடம் "என்ன நான்சென்ஸ் big boss இது?" என்றெல்லாம் கேட்டு வைத்து செய்த பெருமையெல்லாம் வனிதாவையே சாரும்.

### சாண்டி

சாண்டி ஒருகலைஞனாக அவர்தன்னை வெளிப்படுத்திக் கொண்ட விதமே அவரை பல்லாயிரக்கணக்கான மக்களுக்குப் பிடிக்கச் செய்தது. அதே போல சரியோ தவறோ தன்னுடன் இருப்பவர்களுக்காக அவர் கடைசி வரை நின்றார். அவருடையது குறுகிய வட்டம். ஆனாலும் அதற்கு உண்மையாக இருந்தார். கவின் போனபோது அவர் அழுததற்கும், தர்ஷன் போனபோது அவர் அழுததற்கும் இடையில் இருந்த வித்தியாசத்தை கூர்ந்து கவனித்தால் அது புலப்படும்.

ஆனால் நட்பு, விட்டுக்கொடுத்து வாழ்தல் போன்றவை பற்றியெல்லாம் பக்கம் பக்கமாக பேசிய கவின், கடைசிவரை யாருக்காகவும் எதுவும் செய்யாதபோதும், மிளகாய்சாப்பிட்டதாகட்டும், கவின்வெளியேறிய போது அழுததாகட்டும் அதுவே சாண்டி யாரென்பதை பார்வையாளர்களுக்கு உணர்த்தியது. ஒரு வகையில் சாண்டி அப்பாவி தான் என்றாலும், தனக்கும்தன்னைச்சார்ந்தவர்களுக்கும் என்ன தேவை என்பதைத் தெளிவாக உணர்ந்த அப்பாவி.

### தர்ஷன்

ஆரம்பத்தில் இருந்தே பார்வையாளர்களாலும், போட்டியாளர்களாலும் வெற்றியாளராகவே பார்க்கப்பட்டவர் தர்ஷன். எல்லா டாஸ்க்களிலும் திறமையாக விளையாடி ஜெயித்தார். மிகச் சரியாக எல்லா இடங்களிலும் நடந்து கொண்டார். உணர்ச்சியின் வேகத்தில் அடித்துச் செல்லப்படுகிறவராக அவர் ஒரு போதும் இருந்ததில்லை. மிக நிதானமாக அவர் விஷயங்களை அணுகினார்.

(16ஆம் பக்கம் பார்க்க)



# ஓடவும் முடியாது ஒழியவும் முடியாது

(15ஆம் பக்கத் தொடர்ச்சி)

அப்போது எதில் தான் பிரச்சினை? எங்கே அவர் சறுக்கினார் என்று கேட்டால் அவருடைய இந்த நிதானமான அணுகுமுறையையே நாம் குறை சொல்ல வேண்டி இருக்கிறது. உணர்ச்சிகளை வெளிப்படுத்த வேண்டிய இடத்தில், நேரத்தில் அதை வெளிப்படுத்துவதே ஒரு நல்ல தலைவனுக்கு அழகு. ஒரு தவறு செய்தால் தட்டிக் கேட்கிற மாதிரி, ஒரு நல்லது செய்தால் அதை பாராட்டுகிற குணமும் இருக்க வேண்டும். வெற்றியை நோக்கிச் செல்கிறவர்கள் மற்றவர்களுடைய மனதைப் புரிந்து கொள்வது மிக அவசியம். தர்ஷனுக்கு அந்த நுண்ணுணர்வுகள் சாண்டியை போல சிறிது குறைவாகவே இருந்தது என்பதுதான் உண்மை. தான் சரியாக இருந்து விட்டால் போதும், எல்லாம் சரியாக நடந்துவிடும் என்கிற நம்பிக்கை அவருக்கு இருந்தது. சரியாக இருப்பது மட்டுமே வெற்றி பெற விரும்புகிறவர்களுக்குப் போதாது. அதற்கான வழிமுறைகளை தேடுவதும், கண்டடைவதும் முக்கியம். தர்ஷன் சறுக்கிய இடமாக நான் அதைப் பார்க்கிறேன்.

**ஷெரின்**

ஷெரினுக்கு சாக்ஷியும், அபியும் வெளியேறுகிறவரை அவர்களுடைய துக்கங்களுக்குத் தோள்கொடுப்பதும், ஆறுதல்படுத்துவதுமே முழு நேர வேலையாக இருந்தது. அவர்கள் வெளியேற்றத்திற்குப் பிறகுதான் மேக மூட்டத்திலிருந்து சூரியன் வெளிப்படுவதுமாதிரி வெளிப்பட்டார். அவருக்கு மனிதர்களைப் பற்றிய நல்ல புரிதல் இருந்தது. தன்னுடைய தனிமையான குழந்தைப் பருவத்தைக் கடக்க புத்தகங்கள் நிறைய உதவின என்று அவர் ஒருமுறை குறிப்பிட்டிருந்தார். இந்த புரிதலையும் அவர் புத்தகங்களில் இருந்தே பெற்றிருக்கக் கூடும். தன்னுடன் இருப்பவர்கள் மீது அவர் காட்டும் அன்பு, சுலபமாக மன்னிக்கும் குணம், ஒரு விஷயத்தை பல கோணங்களில் இருந்து ஆராய்வது, பலருடைய பார்வையில் நின்று பார்க்க முயல்வது என உண்மையாகவே அவர் ஒரு தேவதைத் தான். ஆனால் பிறருக்கு ஏஞ்சலாக இருப்பவர்கள், தங்களுக்கு என்னவாக இருக்கிறார்கள் என்பது முக்கியமான ஒரு கேள்வி. அடுத்தவர்களைக் காயப்படுத்திவிடக் கூடாது என்று யோசிப்பவர்கள் தாங்கள் காயப்பட்டுவிடக்கூடாது என்பது பற்றி பல நேரங்களில் யோசிக்க மறந்துவிடுவார்கள். எனவே ஷெரின் பிறருக்கு ஏஞ்சலாய் இருப்பது போலவே சில நேரங்களில் தனக்கு தான் ஏஞ்சலாய் இருப்பதும் முக்கியம் என்பதைப் புரிந்து கொள்வது மிக அவசியம்.

**லொஸ்லியா**

இந்த சீசனுடைய victim என்று சொல்கிற அளவிற்கு லொஸ்லியாவிற்கு பல சோதனைகள் இருந்தன. வீடு நிறைய மனிதர்கள் இருந்துகொண்டு, ஒருவருக்கொருவர் அடிதடி, வெட்டுக்குத்து என்று பிஸியாக இருந்தபோது எதிலும் பட்டும்படாமல் தானுண்டு தன் வேலையுண்டு என்று இருந்த லொஸ்லியாவிற்கு மனிதர்கள் குறையக் குறைய மிச்சமிருப்பவர்களுடன் உரையாடியே தீர வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அப்போது அவருடைய பதற்றம் அதிகமாக வெளிப்பட்டது. நேரடியாக மனிதர்களுடன் டீல் செய்வது என்பது அவருடைய insecurityயை அதிகப்படுத்துவதாக இருந்தது. இதற்கு அவருடைய வளர்ப்புச் சூழலும் ஒரு காரணம். ஒரு சாதாரணக் குடும்பப் பின்னணியில் இருந்து வருபவர்களுக்கு, அதுவும் பெண்களுக்கு, big boss போன்ற நிகழ்ச்சிகள் பெற்றுத் தரும் வெளிச்சம், எத்தகைய இக்கட்டுகளைக் கொண்டுவரும் என்பது அவருடைய குடும்பம் நிகழ்ச்சிக்கு வந்தபோது வெளிப்பட்டது. மனிதர்கள் மீதும் அவர்கள் காட்டுகிற அன்பின் மீதும் அவருக்கு இருக்கிற சந்தேகங்களையும் நாம் இந்த இடத்திலிருந்தே புரிந்து கொள்ள முற்படவேண்டும். இவற்றை எல்லாம் மீறி கவினுடனான அவரது நட்பும் அவரது விளையாட்டிற்குத் தடையாக இருக்கிறது. இத்தனை விஷயங்களையும் மீறி அவரிடம் இருக்கும் ஒரு குழந்தைத்தனமும், துறுதுறுப்பும் அவரை நமக்கு நெருக்கமானவராக உணர வைக்கின்றன.

**கவின்**

இந்த சீசனில் மட்டும் அல்ல. வேறு எந்த சீசனிலுமே கவினைப் போல ஒருவர் வரவில்லை. எத்தனை தவறுகள் செய்தாலும் அவற்றை எல்லாம் தன்னுடைய நிதானம் தவறாத விளக்கவுரைகளாலேயே சரிகட்டி மற்றவர்களுடைய பொறுமையை சோதித்தார். யாரை எங்கே அடித்தால் எப்படி வலிக்கும் என்று திட்டம் போட்டு விளையாடினார். எந்த ஒரு அசாதாரண சூழ்நிலையிலும் “புரிஞ்சுக்கோப்பா, பாத்துக் கலாம்ப்பா” - என்று பேசிப்பேசியே மற்றவர்களை சளைக்கப்பண்ணி தலையைப் பிய்த்துக்கொள்ளவைத்தார். ஆனானப்பட்ட வனிதாவே “இவன்கிட்ட சிக்கினா சின்னா பின்னமாகிடுவோம்” - என்று பயந்து “ஒரே வார்த்தைதான் கவின், நீ ஒர்த் இல்லப்பா” - என்று பஞ்சாயத்தை முடித்துக் கொண்டார். யார் வந்தாலும் இடது கையால் டீல் செய்தபடி கிட்டத்தட்ட “அமைதிப்படை” அமாவாசையாகவே வாழ்க்கை நடத்திவந்த கவின், லொஸ்லியாவின் அப்பா வீட்டிற்கு வருகை தந்த பின்னர்தான் சிறிது அடி சறுக்கினார். அந்த சறுக்கலையும் Big Boss வீட்டை விட்டு வெளியேறும்போது, லொஸ்லியாவின் அப்பா புகைப்படத்தை எடுத்து அவளிடமே கொடுத்து “குடும்பத்தைப் பாருப்பா. அவங்களுக்காக விளையாடுப்பா” - என்ற அறிவுரை மூலம் சரியாக்கிவிட்டு “வானத்தைப் போல” விஜயகாந்த் மாதிரி வீட்டை விட்டு வெளியேறினார். அவருக்கு - தனக்கு எதிரான எல்லா சூழ்நிலைகளையும், வேறு யார் மீதாவது தள்ளிவிடவும், அல்லது அதைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளவும் நன்றாகத் தெரிந்திருந்தது. அதனால்தான், அத்தனை அவப் பெயர்களையும் மீறி அவர் voting இல் முன்னணியில் இருந்து கொண்டே இருந்தார்.

**முகேன்**

Saving the best for last என்று கஸ்தூரி முகேனுக்கு சொன்னது சாலப் பொருத்தம். Sportsmanship என்பதன் முழு அர்த்தம் முகேன்தான். விளையாடுவது மட்டுமல்ல, அதன் விதிகளை மதிப்பதும், சக வீரரைப் பற்றிய அக்கறையோடும், கரிசனத்தோடும் இருப்பதும் தான் ஒரு விளையாட்டு வீரனுக்கு அழகு. அதற்கு நூறு சதவிகிதம் பொருத்தமானவர் முகேன்தான். அதே போல வெற்றிபெறவேண்டும் என்கிற துடிப்பும், அதற்கான உழைப்பையும் அவர் தொடர்ந்து கொடுத்துக் கொண்டேயிருக்கிறார். இருப்பதிலேயே இளவயது போட்டியாளர் இவர்தான். ஆனால் அவர் அடைந்த உயரம் அதிகமானது. தன்னுடைய முன்கோபம் தவறென உணர்ந்தபோது அதை சரிசெய்து கொள்ள மெனக்கெடுவதிலாகட்டும், யாரையும் புண்படுத்திவிடக்கூடாது என்கிற எச்சரிக்கை உணர்வாகட்டும், எல்லோரிடமும் அவர் பாராட்டும் எதிர்பார்ப்பில்லா அன்பாகட்டும், குழந்தைகள் மீதான பிரியமாகட்டும் அவர் ஷெரினைப் போலவே அந்த வீட்டின் மற்றொரு ஏஞ்சல். அதுதான் அவரை பார்வையாளர்களின் டார்லிங் ஆக மட்டும் இல்லாமல் சக போட்டியாளர்களின் டார்லிங்காகவும் மாற்றி இருக்கிறது.

இதன் விளைவு முகேனை இந்த சீசனின் வெற்றியாளராக்கியிருக்கிறது.




# கன்பராவிலிருந்து கிளிநொச்சிவரை

## மண்சுமந்த மேனியனின் கதை





கருணாகரன்

உடல் முழுவதும் காயப்பட்டு நடமாடவே முடியாத ஒரு போராளியின் நிலைமையைப் பற்றி, மூன்று ஆண்டுகளுக்குமுன்பு தேனீ (Thenee.com) இணையத்தில்ஒருகட்டுரையைஎழுதியிருந்தேன். அவர்விடுதலைப்புலிகள்இயக்கத்தில் போராளியாக இருந்தவர். வன்னிப் பிராந்தியத்தில் புலிகளின் பிரதித் தலைவரான மாத்தயாவின் பொறுப்பிலிருந்த படையணியில் முன்பும் பிறகு, யாழ்ப்பாணப் படையணியிலும். இயக்கத்தில் சேர்ந்த காலம் தொடக்கம் அநேகமாகச் சண்டைக் களங்களிலேயே அவருடைய இயக்க வாழ்க்கை கழிந்தது. அதன்பேறே அவ்வளவு உடற்காயங்களும். ஒரு கட்டத்தில் இனிப்போதும் இந்த இயக்க வாழ்க்கை என்று விட்டு வந்து திருமணம் செய்து தனிக்குடித்தனமாக வாழ்ந்தார். அப்பொழுது உடற்காயங்கள் ஆறி, (வீர)தழும்புகள் மட்டுமிருந்தன. கிடைத்த தொழில்களை எல்லாம் செய்து எப்படியோ வாழ்க்கையை ஓட்டினார். சிறிய அளவில் விவசாயமும். மனைவியும் மூன்று பிள்ளைகளுமாக நாட்கள் ஓடிக் கொண்டிருந்தன.

*2008* இல் கிளிநொச்சியைக் கைப்பற்றியபடையினரைக்கண்டுவட்டக்கச்சியிலிருந்தவர்களும் முதற்தடவையாக இடம் பெயர்ந்து முள்ளிவாய்க்காலை நோக்கி ஓடினார்கள். இந்தப் போராளியின் குடும்பமும் ஓடியது. அப்பொழுது விழுந்து வெடித்த எறிகணையினால் மறுபடியும் பெருங்காயங்களுக்குள்ளானார் இந்தப் போராளி. பட்டகாலிலே படும் என்பார்களே அதைப்போல. விழுந்தவரை மாடு ஏறி மிதித்ததைப்போல. அதோடு அவர் நடக்கவே முடியாத நிலைக்குள்ளானார். ஆனாலும் குடும்பத்தைப் பார்க்கவும் பராமரிக்கவும் வேண்டுமே.

ஏதோதன்னால்ஆனதைச்செய்யவேண்டும் என்ற முனைப்போடிருந்தவரை எதிர்பாராத விதமாக ஒருநாள் சந்தித்தேன். அப்பொழுதுதான் அவருடைய கதையைக் கேட்டு, அவர்களுடைய நிலையைப்பற்றி எழுதினேன்.

இதைப் படித்த கன்பரா யோகன், ஒரு மின்னஞ்சலை எழுதியிருந்தார்.

வணக்கம்.

என் பெயர் யோகன் (யோகானந்தம்). தங்கள் பதிவுகளை (தேனீ இணையத்தில்) தொடர்ந்து வாசித்து வருகிறேன். அண்மையில் எழுதிய கால்களை இழந்த ஒரு போராளியின் வாழ்வுப்போராட்டம் பற்றிய பதிவினைப் பார்த்தேன். என்னால் முடியுமான சிறு தொகை அவர் ஜீவனத்துக்கு மேலதிக மாடுகளை வாங்குவதற்கு உதவுமாயின் மகிழ்ச்சியடைவேன். இதற்கான விவரங்களை அனுப்புங்கள். தங்கள் பணி தொடர வாழ்த்துக்கள் .

இப்படிக்கு,
யோகன்
அவுஸ்திரேலியா (கான்பரா)

இந்தக் கடிதத்துக்குப் பதிலளிக்கும் போது, குறித்த அந்தப் போராளியின் தொலைபேசி இலக்கத்தைக் கொடுத்து, நீங்களே நேரடியாகத்தொடர்புகொண்டு நிலைமையைப் பேசி அறிவது நல்லது என்று குறிப்பிட்டிருந்தேன்.

அதன்படி யோகன், அந்தப் போராளியோடு தொடர்பு கொண்டு பேசி அவர்களுடைய வாழ்வாதாரத்துக்காக மாடுகள் வாங்குவதற்கான பணத்தை அனுப்பியிருந்தார். அதைச் சரியாகக் கண்காணித்து வழிப்படுத்தும் பொறுப்பை நான் ஏற்றேன். அவர்களுடையவீட்டில்இரண்டு மாடுகள் வந்து சேர்ந்தன. இதேவேளை ஏற்கனவே இன்னொரு வழியில் அவர்களுக்காக மேற்கொண்டிருந்த முயற்சியும் கைகூடி வந்தது. அதையும் சேர்த்து அந்தப் போராளியின்வீட்டில்மூன்று மாடுகளாகின. இப்பொழுது அந்தக் குடும்பத்துக்குத் தேவையான வருமானத்தைப் பெறக்கூடிய நிலை உருவாகிவிட்டது. மூன்று மாடுகளையும் சரியாகப் பராமரித்தால் மிகக் குறுகிய காலத்திலேயே அவர்களால் ஒரு சிறிய மாட்டுப் பண்ணையை நிர்மாணித்து விட முடியும். இதற்கு வசதியாக கால்நடை அபிவிருத்தி மற்றும் கால்நடை மருத்துவத்துறையினரையும் இணைத்து விட்டேன். இடையில் ஒரு தடவை நான் அவர்களிடம் சென்று பார்த்தபோது பட்டியில் கன்றுகளோடு சேர்த்து ஆறு உருப்படிகள் நின்றன. மிகச் சந்தோசமாகவும் நிறைவாகவும் இருந்தது.

மாடுகளுக்குப் புல்லை எடுப்பதுதான் பிரச்சினையாக இருக்கு. புல்லை வளர்ப்பதற்குரிய இடமில்லை. போதிய தண்ணீரும் இல்லை என்றார். வைக்கோல் மற்றும் மாட்டுத்தீவனத்தை எடுத்து வந்து சேகரித்து வைக்கக்கூடிய வசதியும் இல்லை என்று சொல்லிக் கவலைப்பட்டார். எல்லாவற்றுக்கும் மேலாக அவருடைய வீட்டுக்கும் வீதிக்குமிடையில் வாய்க்கால் ஒன்று இருப்பதால்அவர்கள்வீட்டிலிருந்துவெளியே வந்து போவதற்குப் பெரிய பிரச்சினையாக இருந்தது. அதனால் மாடுகளுக்கான தீவனத்தை எடுத்துச் சேகரிப்பதற்கும் சிரமப்படவேண்டியிருந்தது. பிள்ளைகள் பள்ளிக்குச் செல்வதாக இருந்தாலும் சரி, அவர் மாதாந்தக் கிளினிக்கிற்கு சக்கர நாற்காலியில் செல்வதற்கும் சரி, அந்த வாய்க்கால் பெரிய இடைஞ்சலாகவே இருந்தது. அதற்காக வாய்க்காலை இடம் மாற்ற முடியுமா? பாலத்தைத்தான் நிர்மாணிக்க முடியும். இதற்கு ஏதாவது செய்யலாம் என்று முயற்சித்தேன். ஆனாலது கைகூடவில்லை.

இதைப்பற்றி ஒருநாள் எழுத்தாளர் சயந்தனிடமும் பேசினேன். அவர் இலங்கைக்கு வந்திருந்தபோது நேரடியாகவே அவர்களின் வீட்டுக்குப்போய் நிலைமைகளைச் சயந்தனும் நானுமாகப் பார்த்தோம். சயந்தனும் அவர்களுக்கு உதவினார். ஆனால், பாலத்தை நிர்மாணிப்பது சற்றுப் பெரிய வேலையாக இருந்தது. அதை ஏதாவது அமைப்புகள் செய்ய வேணும். அல்லது அரசாங்க உதவியின் மூலமாகவே செய்யலாம் என்பதால் அந்த வழியில் முயற்சிக்கலாம் என்று விட்டு விட்டோம். பிறகு,

அவர்களுடைய வீட்டுக்கு அண்மையாக இருந்த மாகாணசபை உறுப்பினர் வை. தவநாதன் பாலத்துக்காக முயற்சி எடுத்ததாக அறிந்தேன். வட மாகாண போக்குவரத்து, வீதிஅபிவிருத்திஅமைச்சர் பா.டெனீஸ்வரன் அங்கே வந்து பார்த்துச் சென்றிருந்தார்.

பாதிக்கப்பட்ட நிலையிலிருந்த ஒரு போராளி குடும்பத்தின் வாழ்க்கைக்கு இப்படியெல்லாம் பலரும் உதவிக் கொண்டிருந்த போது, இந்த உதவிகளின் மூலமாக அவர்களுடைய வாழ்க்கையில் சற்று முன்னேற்றம் ஏற்பட்டுக்கொண்டிருந்தபோது, அவரைச் சூழ்ந்தது மறுபடியும் ஒரு சூதாடியைப்போல அரசியல்.

ஒரு காலம் போர்க்களத்திலே சமராடிய அவர், அரசியற் களத்தில் சமராடுவதற்காக அழைக்கப்பட்டார். இதற்காக கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் சைக்கிள் சின்னத்தில் களமிறக்கப்பட்டார். அதில் அவருக்கோ அவரைக் களமிறக்கிய கட்சிக்கோ வெற்றிகளேதும் கிடைக்கவில்லை. ஆனால், அதற்குப் பிறகு அந்தப் போராளி வேறு சிலரிடம் உதவிகளைக் கேட்பதாக அறிந்தேன். என்ன செய்வது காலம் மனிதர்களைஇப்படியேஅலைக்கழித்துக்கொண்டிருக்கிறது. நான் என்னுடைய தலையில் அடித்துக் கொண்டேன்.

இந்தக் கதைகளையெல்லாம் சயந்தனிடம் ஒருநாள் சொன்னபோது, "அண்ணை இதைப்பற்றிக் கவலைப்பட்டு ஆகப்போவதொன்றுமில்லை. இதெல்லாம் எதிர்பார்க்கக் கூடியதுதான். எங்களுக்குச் சரியெனப்பட்டதை உரிய நேரத்தில் செய்தோம். அவ்வளவுதான்" - என்று தன்னுடைய வழமையான சிரிப்போடு சமாதானப்படுத்தினார். ஆனாலும் என்னுள்ளே அலைகள் அடங்கவில்லை.

அந்தப்போராளியின்அரசியல்விருப்பு, அவருடையதெரிவு, அதன்சரிபிழைகளைக் குறித்தெல்லாம்நான்எதையும்பேசவிரும்பவில்லை. அது அவருடைய உரிமையும் சுதந்திரமும். ஆனால், அவர் சிரமப்பட்ட காலங்களில் எங்கேயோ இருந்தவர்கள், தேர்தல் காலங்கள் என்று வரும்போது இப்படி ஆள்தேடிப் பிடிக்க முயலும் போது அதற்குள் சிக்குவதைப் பற்றியே நாம் பேசவேண்டியுள்ளது.

இவ்வளவுக்கும்அவர்களுக்கானபாலம் நிர்மாணிக்கப்படவேயில்லை. வட மாகாண சபையின் ஆட்சிக்காலமும் முடிந்து விட்டது. தேர்தலில்அவரைக்களமிறக்கியவர்களும் அதைச் செய்யவில்லை. இதைப்பற்றியெல்லாம் யாருடன் பேசுவது?

இதையெல்லாம் இங்கே எழுதுவதற்கு இரண்டு காரணங்கள் ஏற்பட்டுள்ளன. ஒன்று, இன்னொரு தேர்தல் அடுத்த நவம்பரில்இலங்கையில்வரப்போகிறது. ஜனாதிபதித் தேர்தல். அதையொட்டி இதே மாதிரியான ஆள்பிடி அரசியலும் ஆட்களைப் பயன்படுத்தும் போக்கும் தொடங்கி விட்டன. இரண்டு நாட்களுக்கு முன்பு (29.09.2019)கிளிநொச்சியில்ஜனாதிபதிவேட்பாளராகப் போட்டியிடவுள்ள கோத்தபாய ராஜபக்ஸவுக்கு ஆதரவு திரட்டுவதற்கான அலுவலகம்திறக்கப்பட்டது. அதற்காக அயலூர்களிலிருந்தெல்லாம் இதே போன்ற ஆட்கள் பேருந்துகளில் கொண்டு வந்து இறக்கப்பட்டனர். அப்படி வந்திறங்கியவர்களில் அதிகமானோர் வாழ்க்கையில் மிகச் சிரமப்படுவோர். பெண்கள், முதியோர், வேலை தேடும் இளவயதினர், முன்பு போராளிகளாகச் செயற்பட்டோரில் ஒரு தொகுதியினர். அவர்களுடைய வாழ்க்கை நிலையை - பொருளாதார நிலையை - சாதமாக்கி, இப்படி அரசியலுக்குப் பயன்படுத்தப்படுகிறார்கள்.

இரண்டாவது காரணம், இந்தப்போராளிக்கு உதவிய கான்பரா யோகன் யார் என்று முதலில் அவர் என்னுடன் தொடர்பு கொண்டு பேசும்போது சரியாக என்னால் அடையாளம் காணமுடியவில்லை. அவரும் அதைக் காட்டிக் கொள்ளவில்லை. பிறகு தான் அவர் ஒரு நல்ல வாசகர் என்று அறிய முடிந்தது. அதற்குப் பிறகு அவர் சிறுகதைகளை எழுதுகிறார் என்று அறிந்தேன். சில கதைகளை அனுப்பியுமிருந்தார். வித்தியாசமான கோணங்களில்எழுதுவதில்அவருடைய கவனம் உள்ளதை அந்தக் கதைகளில் கவனிக்கக் கூடியதாக இருந்தது. ஒருநாள் யோகனுடைய கதைகளைப் பற்றிதெய்வீகனோடுபேசிக்கொண்டிருந்த போது, அடுத்தவாரம் தான் கான்பராவுக்கு யோகனிடம் செல்லவுள்ளதாக தெய்வீகன் சொன்னார். உலகம் மிகச் சிறியதாகச் சுருங்கி வருகிறதா? அல்லது நம்முடைய உறவு வட்டம் பெருத்து எல்லா இடத்திலும் பரவியுள்ளதா? என்றறிய முடியவில்லை. கான்பராவுக்குச் சென்ற தெய்வீகன், யோகன் வீட்டிலிருந்து தொலைபேசினார். கூடவே யோகனும் பேசினார்.

அந்தப் பயணம் ஆச்சரியமளிக்கும் பல சேதிகளைப் புதிதாக்கியது. அதில் ஒன்று, *1980* களின் நடுப்பகுதியில் வடக்கிலே மிகப் பரவலாகப் பார்க்கப்பட்ட - பேசப்பட்ட - "மண்சுமந்த மேனியர்" - என்ற நாடகத்தில்யோகனும்பங்கேற்றார்என்பது. அந்த நாடக அனுபவத்தை தெய்வீகனிடம் யோகன் சொல்லியிருக்கிறார். அதைத் தனியே தெய்வீகனிடம் சொல்வதையும்விட, பொது வெளியில்எழுதிப்பகிரலாமேஎன்றபோது, அதற்குச் சம்மதித்து யோகன் அதைப்பற்றி எழுதியிருந்தார் யோகன், கடந்த (செப்ரெம்பர், *2019*) எதிரொலியில் அந்தக்கட்டுரை வெளியாகியிருந்தது.

யோகனுடைய அந்தக் கட்டுரையைப் படித்தபோது என்னுடைய நினைவுகள் பல வழிகளில் குறுக்கும் மறுக்குமாக ஓடின.

*1980* களில் பல்கலைக்கழகத்தில் படிக்கும்காலத்தில்சமூகஉணர்வோடு, போராட்டத்தை மக்கள் மயப்படுத்துவதற்கான அரங்களிக்கை.

*2017* இல் போராட்டத்திலும் போரிலும் பாதிக்கப்பட்ட போராளிக்கான வாழ்வாதார உதவி.

இடம், காலம் எல்லாம் மாறி விட்டன. ஆனால் யோகனுடைய மனம் மாறவில்லை. குணம் மாறவில்லை. நோக்கு மாறவில்லை. இயல்பு மாறவில்லை. யாரோ ஒரு முகம் தெரியாதவராக, பாதிக்கப்பட்டு - ஆதரவற்ற - நிலையிலிருக்கும் ஒரு குடும்பத்துக்கு உதவுவதற்காக என்னை இணைய வழியில் தேடிய யோகனையும் இப்பொழுது மிக நன்றாக அறிந்த "மண் சுமந்த மேனியரில்" ஒருவராகிய யோகனையும் நினைத்துப் பார்க்கிறேன்.

ஆமாம், நிச்சயமாக இந்த மனிதர்கள் மண் சுமந்த மேனியரேதான். நமது வாய்ச் சவாடல் அரசியல்வாதிகளுக்கும் இந்த மனிதர்களுக்குமிடையிலான வெளி மிக மிக அதிகம். ஆமாம், மிகப் பெரிய தூரமே.



## ஊழிக்காலம்-2

### 04

# புயலுக்குப்பின்...

அவன்முக்கிய படையணியொன்றின்கட்டளைப்பிரிவில்இருந்தவன். இப்போது கொழும்பு ஸ்டைலில் தலைத்தொப்பியை திருப்பியணிந்து ரீசேட்டும், இறுக்கமான காற்சட்டையும் அணிந்திருந்தான்.

"அன்ரியத் தெரியாமையா? எங்களைத் தெரியுதா அன்ரி"

பரமசிவன்கழுத்திலிருந்துபாம்புகேட்டது என வாய் வரை வந்துவிட்டது அதை அடக்கிக் கொண்டாள்.

"எங்க பதிய வேணும்" - என்று கேட்டாள்.

அவளுடன் இன்னும் சில பிள்ளைகளைச் சேர்த்தவன் அவர்களைத் தன்னைத் தொடரும்படி கூறி முன்னே நடந்தான். பிள்ளைகளை ஒரு கொட்டகையில் உட்கார வைத்துவிட்டு அவளை மட்டும் தனியாக பதிவு நடக்குமிடத்துக்கு கூட்டிச்சென்றான்.

அங்கே முக்கியமானவனாகத் தோற்றமளித்த ஒருவனிடம் அவளை அறிமுகம் செய்தான்.

அது ஒரு பெரிய மண்டபம். சுமார் எண்பதடி நீளம் இருக்கும். இருபதடி நிலத்தில் ஆறு மேசைகளும் அதன்பின் அதிகாரிகளும் இருந்தனர். மேசைக்கு முன்புறம் கதிரைகள் போடப்பட்டிருந்தன. முன்னுள்ள கதிரையில் போராளியை இருக்கவைத்து எதிரில் இருந்தவர் விவரங்களைப் பதிந்தார்'. கேள்விக் கொத்துகள் தயாராக வைத்திருந்தனர். பேட்டி முடிந்ததும் ஒரு இலக்கத் தகட்டை கையில் கொடுத்து படமும் எடுத்துக்கொண்டனர்.

குழந்தைகளுடன் வந்த போராளிக் குடும்பத்தினர் பிரிக்கப்பட்டனர். மனைவி பிள்ளைகளுடன் வேறிடம் அனுப்பப்பட்டாள். கணவன் இங்கே அமர்த்தப்பட்டான்.

அந்த மண்டபத்தின் எதிரே இன்னும் இரண்டு கட்டடங்கள் இருந்தன. அவற்றிலும் போராளிகளே நிரம்பியிருந்தனர். இந்தக் கட்டடத்தின் எஞ்சிய பகுதியில் ஆண்கள் ஒருபுறமும் பெண்கள் ஒருபுறமுமாக அமர்ந்திருந்தனர். இவர்களில் காயங்களுடன் வந்திருந்தவர்கள் அதிகம்.

பேருந்திலிருந்து இறங்கியபோதே நோயாளர்கள் மற்றும் காயமடைந்தோர் சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டன. அங்கேயே ஒருவைத்தியசாலை உருவாக்கப்பட்டிருந்தது. அந்த வகையில் மருந்து கட்டிவிட்டு வந்தமர்ந்தவர்கள் முன்னுரிமை கொடுத்து பதியப்பட்டனர்.

பார்வதியை அழைத்துவந்தவன் அவளை உடனடியாக பதிவு செய்வதற்கு முயன்ற போதிலும் காயமடைந்தவர்கள் இருப்பதால் அவளை சற்றுக் காத்திருக்கும்படி கூறினான் பதிவு செய்பவன். அவள் ஒரு பக்கமாக அமர்ந்தாள்.

பதிவு செய்வதற்கு பெருந்தொகையினர் வந்த அதுவேளை பதிவு செய்பவர்கள் மிகவும் குறைவானவர்களாக இருப்பதால் அவர்கள் களைத்திருப்பது தெரிந்தது. பார்வதி வந்ததுமே பதியப்படாதது மிக நல்லதாயிற்று. முதலில் பதியப்பட்டு ஏற்றப்பட்ட பெண்கள் பின்னாளில் சொன்ன சோகக்கதைகள் அவளை அப்படி நினைக்க வைத்தது.

நேரம்ஒன்பது மணியாகிவ்ட்டது. அவர்கள் வந்திறங்கி பிரிக்கப்பட்ட இடமோ, முன்னே செல்பவர்கள் நிற்குமிடமோ, இவர்களிடமிருந்து பிரிக்கப்பட்ட ஏனையவர்களின் தலைகளோ தெரியவில்லை. பிள்ளைகள் என்ன ஆனார்கள் எங்கு போவார்கள் என்பதும் தெரியவில்லை.

சரணடைந்ததாகச்சொல்லப்பட்ட பெண்களை பதிவாளர்கள் கூர்ந்து பார்த்தனர். அவர்களில் பலர் பலவந்தமாக படையில் இணைக்கப்பட்டவர்கள்என்பதாலும்அவர்களின்வாக்குமூலங்களில்அறியாமைதெரிவதாகவும் அவர்கள் தமக்குள் பேசிக் கொண்டார்கள்.

நேரம் செல்லச்செல்ல பார்வதியின் மனம் அந்தரித்தது பிள்ளைகளை எங்கு கொண்டு செல்வார்களோ என்னை எப்போது பதிவு செய்வார்களோ, அவர்கள் வேறிடம் சென்றுவிட்டால் எப்படி தொடர்பு கொள்வது.

இவளைப்போலவே இன்னும்பலர் குடும்பத்துடன் வந்தவர்கள் பிரித்து அழைத்து வரப்பட்டிருந்தனர். ஒவ்வொருவரும் தமது குடும்பத்தினரையோ பிள்ளைகளையோ நினைத்துக் கலங்கினர். அவர்களோடு ஒரு வார்த்தை பேசிவிடத் துடித்தன.

நாற்பது வயது மதிக்கத்தக்க ஒருவர் தன்னுடன் உப்பிய உரப்பை ஒன்றை வைத்திருந்தார். அங்குமிங்கும் மிரண்டவாறே புலம்பினார். அப்போது அந்தப் பக்கமாக இவர்களை அழைத்து வந்த அந்த தமிழ் இளைஞன் வந்தான். அந்தமனிதர் இவனிடம் -

"அண்ணை முழு உடுப்பும் இதுக்கதான் கிடக்கு. மனிசி பிள்ளையள் அந்தரிக்குங்கள் இதை அவையிட்டக் குடுத்திட்டு வாறன்"

"அங்க இரு, பிறகு போகலாம்" - என்றான் அவன். இவன் அழுதான். அவன் கண்ணிலிருந்து கண்ணீர் வழிந்தது. பார்வதி மெதுவாக,

"நீர் ஏன் சொல்லிக்கொண்டு நிக்கிறீர் மெதுவா உந்த இடைக்கால இறங்கி ஓடு" - என்றாள்.

அவன் அவளைப் பரிதாபமாகப் பார்த்தான். "பிடிச்சாங்களெண்டா அடிப்பாங்கள்"



இன்னும் சற்று நேரம் கழித்து அந்தப் பழைய போராளி (ஒற்றனாக நின்றவன்) அவ்விடத்தால் வந்தபோது, அந்த மனிதன் அவனிடமும் கெஞ்சினான்.

"உடுப்புகளைக்குடுத்திட்டு நான்வந்து நிக்கிறன். முழுச்சாமானும் இதுக்குள்ள, குழந்தைப்பிள்ளைமாற்றுத்துணிகூட இல்லாம நிக்கினம்"

அவரவர் கைச்சுமையோடு எதிர்பாராமல் பிரிக்கப்பட்ட கொடுமை எல்லாக் குடும்பத்துடனும் ஒட்டியிருந்தது.

சின்னக்குழந்தையுடன் தம்பதியாக வந்து தந்தைப்போராளியின் மடியை விட்டு இறங்க மறுத்த குழந்தையை அழுது கொண்டே வலிந்து தூக்கினாள் தாய். அவளும் போராளி. அவளைப் போன்றோர் பிரித்து விடப்பட்டனர். தந்தை தன் கண்ணீரை மறைக்க தலையை வேறுபுறம் திருப்பிக்கொண்டான்.

"பதிஞ்சுபோட்டு போ" என்ற சொல்லை நம்பி களத்தில் தன் கணவனைப் பறி கொடுத்துவிட்டு தன் சின்னஞ்சிறு மழலைகளுடன் வந்த இளம் பெண் போராளி தன் தாயின் மடியில் குழந்தைகளை கொடுத்து ஒரு மரத்தடியில் உட்கார வைத்துவிட்டு, எட்டு வயது மூத்தமகனிடம் "அம்மா பதிஞ்சிட்டு வாறன். அம்மம்மாவோட இருங்கய்யா" - என்று கூறிவிட்டு வந்து பார்வதிக்குச் சற்றுத் தள்ளி உட்கார்ந்திருந்தாள்.

நேராக அவளுக்குப் பின்னால் இருந்தவளும் அமைதியாகவிருந்தாள். காலங்கடந்த திருமணமானாலும் அவளுக்கும் குழந்தை இருந்தது.

அந்த துணி மூடையுடன் நின்றவர் மேலும் புலம்பவே அந்த மாஜிப் போராளி அவனைக் கடித்துக் குதறுவது போலப் பார்த்துவிட்டு,

"எங்கையப்பா நிக்கினம்" - என்றான்.

"அண்ணை பஸ்ஸ்ராண்டில நிப்பினம்"என்றான்

"அவை போயிருப்பினம்"

"இல்லையண்ணை பிள்ளையின்ர சாமான்களே இஞ்சயிருக்கு போமாட்டினம்."

"சரி சரி" என்றவன் ரகசியமாக -

"கொண்டுபோய் விடுறன் அப்பிடியே போயிரு" - என்றபின், கோபமாக "சரி வா, ஒருத்தரும் இல்லையெண்டா துலைஞ்சாய் தூக்கு பைய" - என்று அதட்டியவாறு முன்னேநடந்தான்.

உரப்பையை தூக்கியவாறே புறங்கையால் கண்ணீரைத் துடைத்தபடி அவன் பின்னே ஓடியவன் மீண்டும் அங்கு தென்படவில்லை. அவன் குடும்பத்தினருடன் வண்டியேறியிருக்கலாம்.

நேரம் ஒருமணியைக் கடந்திருக்கும். கட்டடத்தின் கூரைநிழல் இடம்மாறியிருந்தது. இப்போதுதான் பார்வதி தனக்கு எதிரேயிருந்த மேசையின் பின்னாக விவரங்களைப் பதிய அமர்ந்திருந்த உருவத்தைக் கவனித்தாள்.

அது தமிழினி. சிவகாமி என்ற இயற்பெயரைக்கொண்டு1991ன்நடுப்பகுதியில் இயக்கத்தில் இணைந்தவள். பின்னர் பயிற்சிக்கு முன்பே சாதாரணப் போராளியாக கடமையாற்றினாள். பாலமோட்டைப் பகுதியில் அரசியல்வேலைகளைச் செய்தவள், அதன்பிறகு, திரும்பவும் பயிற்சிக்குப் போய் வந்தபின், மாவீரரான தன் தோழியின் நினைவாக தன்பெயரை சாம்பவி என மாற்றிக்கொண்டாள். தனித்தமிழ் சீர்திருத்தம் வந்தபோது தமிழினி என மாறிக்கொண்டாள். நல்ல பேச்சாளர். மற்றவர்களை அனுசரித்துப் போகத் தெரிந்தவள். விரைவில் பொறுப்பான பதவிகளுக்கு மாற்றப்பட்டாள். பின்நாளில் இவளது நம்பிக்கை நட்சத்திரங்களாக இருந்தவர்கள் இவளது காலை வாரி விட்டார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

அவள் எழுந்து கிணற்றடிப்பக்கமாகப் போனாள். அழகான பெறுமதியான உடை அணிந்திருந்தாள். எல்லோரும் அவளையே திரும்பிப் பார்த்தனர். மேசையோடு அமர்ந்திருந்தவன் திரும்பிப் பார்த்துவிட்டு,

"பிள்ளையள், யார் சரி ரெண்டு பேர் அவங்க பின்னுக்குப் போங்க" - என்றான்.

"அக்கறையா, ஓடிவிடுவாள் என்ற பயமா" - ஒரு சின்னப்பெண் தன் பக்கத்தில் இருந்தவளிடம் முணுமுணுத்தாள்.

"ம்...பயமில்லை, அவ ஒங்கட லீடர் தானே, அதுதான் மரியாதை" - என்றான் அவன்.

இதற்குள் முன்னரே பதிவு முடித்தவர்கள் பேருந்துகளில் ஏற்றி அனுப்பப்பட்டனர். இருந்தவர்களுக்கு ஒரு உணவுப் பொதியும் தண்ணீர்ப்போத்தலும் தந்தனட. பார்வதி பொதியைப் பிரித்தாள். சம்பா அரிசிச் சோறும், பருப்பு - கத்தரிக்காய் - பூசணிக்காய் கறியும் இருந்தது. அவள் இப்போது சாண்டில்யனின் கதாநாயகர்களின் மனநிலையில் இருந்தாள் 'நடப்பது நடக்கத்தான் போகிறது அதற்காக நான் ஏன் பட்டினி கிடக்க வேண்டும்' முழுதும் சாப்பிட முடிந்தது. அவள் முழுவதையும் சாப்பிட்டாள்.

சாப்பிட்டானதும் கைகழுவவும் கழிப்பறைக்குப் போவதற்குமாக பார்சல் பேப்பர்களையும் எடுத்துக்கொண்டு கழிப்பறைக்குப் போனாள். கழிப்பறைகளில் ஆண்பெண் சமத்துவம் நிலவியது. எனவே அவளுடன் கூட வந்த பெண்ணை காவல் வைத்துவிட்டு உள்ளே போனாள். அதேபோல மற்றவளுக்கும் தான் காவல் நின்று அவளையும் கூட்டிக்கொண்டு இருந்த இடத்துக்கு வந்தாள்.

மறுபடி அவர்கள் தம் இடத்துக்கு வந்தபோது அங்கே வேறு பிள்ளைகள் இருந்தனர். எனவே அவர்கள் பின் வரிசையில் உட்கார்ந்தனர்.

ஒவ்வொருவரையும் மூன்று இடங்களில் பதிவு செய்தனர். செய்தபின் அதே போல இன்னொருவரிடம் இலக்கம் போட்டாக வேண்டும். அந்த இலக்கமிட்டபின் இன்னொருவரிடம் நகர அதே இலக்கத்தை எழுதிய ஒரு மட்டையை கையில் பிடித்தபடி நிற்கவைத்து ஒரு படம் எடுத்தார்கள். அதன் பின சற்றுத்தள்ளி இருந்த இன்னொருமண்டபத்துக்குஅனுப்பப்பட்டனர்.

விசாரணை பதிவுகள் முடித்தவர்களை அப்படியேபுனர்வாழ்வுமுகாமுக்குஅனுப்புவதாக பேசிக் கொண்டார்கள். பார்வதிக்கு முன்னாக தமிழினியின் பதிவுகளை முடித்து படமும் எடுத்தனர். அதன் பின்பும் அவள் இருந்த இடத்தில் போய் இருந்தாள். படம் எடுத்தபோது பார்வதியைப் பார்த்தாள்.

ஒருசிறுகண்ணசைப்புமட்டுமேபரிமாறிக்கொண்டனர்.

'கடவுளே எங்கட பிள்ளையள என்ன செய்வாங்களோ, எங்க கொண்டே விடுறாங்களோ!.'-எனசிலர்பரிதவித்தனர். இப்படியே பார்வதியின் முறை வந்தபோது மாலை நான்கு மணிக்கு மேலாகிவிட்டது.

நான்கு மணிக்கு ஆரம்பித்த விசாரணையில் பெரிதாக ஒன்றுமில்லை.

"பெயர்"

"பார்வதி"

"கொட்டி நம"

"தமிழ் பா"

"எப்பிடி கொட்டி நல்லமா"

"......"

"ம் எத்தினை வருடம்..சேவிஸ்ஸ்"

"பதினான்கு வருடம்" (ஆறுவருடங்களை குறைத்தாள்.)

"லீடர்...என்ன ராங்க்"

"வீர வேங்கை"

"அது என்ன"

"புலியில செத்த பிறகுதான் ராங்க்"

"என்ன வேலை செய்தது"

உண்மையைக் கூறினாள்.

"வேற என்ன"

"வேற ஒன்றுமில்லை"

"சனங்களுக்கு புலி நல்லமாதிரி சொல்லி அரசாங்கம் எதிரா பேசினா சரியா"

அவள் பதில் பேசவில்லை

"சரியா தவறா"

இன்னுமொருவன் குறுக்கிட்டுக் கேட்டான்.

அவள் இருவருக்குமே பதிலளிக்கவில்லை.

"நீங்க ரீவில நிக்கிறது நான் பாத்தது"

"அதுதான் முதலே சொன்னனே நான் ஊடகத்துறைதான்."

"அரசியல் பேசினது"

"இருக்கலாம் சமூக முன்னேற்றம், பெண்ணியம், கலை, கலாசாரம் எல்லாத்திலும். எங்கட கருப்பொருள் அதுதான்."

அவனுக்குப் புரிந்ததோ இல்லையோ விசாரணையை முடித்தான். பதிவுகள் முடிந்து படம் எடுத்துவிட்டு திரும்ப, சூரியன் காணாமற் போனான்.

(இன்னும் வரும்)


Lyca TV
ONE OF THE WORLD'S LARGEST
ETHNIC CHANNEL PLATFORM
3 MONTHS FREE
ANNUAL SUBSCRIPTION
$159
15 MONTHS
RENEWAL
$129
15 MONTHS
SET TOP BOX INCLUDED
MORE THAN 60 TAMIL CHANNELS
MORE THAN 5000 TAMIL & HINDI MOVIES
TENT KOTTA
MORE THAN 1000 TAMIL MOVIES
NEW MOVIE RELEASES EVERY WEEK
MOVIES AVAILABLE ON 4K / HD / 5.1 DOLBY
MOVIES WITH ENGLISH SUBTITLES
EROS NOW
MORE THAN 4000 TAMIL & HINDI MOVIES
NEW MOVIE RELEASES EVERY WEEK
MOVIES AVAILABLE ON HD QUALITY
COMMERCIAL FREE
JUDE - MELBOURNE
0470 030 300
ALACAN – SYDNEY
0470 216 619
SUBSCRIBING TO LYCATV IS EASY!
CALL OUR 24/7 CUSTOMER SERVICE ON
03 8652 1960
www.lycatv.tv

எதிரொலி
ஆஸ்திரேலியா ETHIROLI



சிட்னியில் ஆண்டுதோறும் யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர்கள் சங்கம் நடத்துகின்ற "கீதவாணி" இசைநிகழ்ச்சி இவ்வருடம் பாடசாலையின் அடையாளத்தையே அடகு வைத்து நடத்தப்பட்ட துயர நிகழ்வென்று அந்த நிகழ்வுக்கு சென்று பார்த்த "எதிரொலி" வாசகர் ஒருவர் ஆசிரியர் பீடத்துக்கு எழுதி அனுப்பியிருக்கிறார். அதற்குரிய காரணங்களையும் அவர் கூறியிருக்கிறார். புலம்பெயர்ந்த நாடுகளில் பாடசாலை பழைய மாணவர் நிகழ்வுகள் எனப்படுகின்றவை மிகப்பிரபலமாகியுள்ளதன் பின்னணியில், இதுபோன்ற நிகழ்வுகளை எதிர்காலத்தில் நேர்த்தியாக நடத்துவதற்கு இந்த பதிவு உதவிபுரியும் என்ற நம்பிக்கையுடன் இங்கு பிரசுரிக்கிறோம்.

**எதிரொலி – ஆசிரியர்**



# கீதவாணி 2019

# அடையாளத்தை அடகுவைத்து நடத்திய பழைய மாணவர் சங்கத்தின் "பஜனை"

யாழ்ப்பாணத்திலுள்ள மிகப் பழமையான பாடசாலைகளில் ஒன்றுதான் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி. சுமார் 130 வருடகால வரலாற்றைதன்னகத்தே கொண்டது. இந்த உயரிய கல்வி நிறுவனம் பல்துறைவல்லுனர்களை உலகளாவிய ரீதியில் உருவாக்கி ஆலமரம்போல் தழைத்து நிற்கிறது.

இந்தப்பாடசாலையின் பெயரில் பல நாடுகளில்பழையமாணவர்சங்கங்கள்இயங்கி வருகின்றன. அவற்றில் சில சங்கங்கள் பாடசாலைக்கு நிபந்தனையற்ற உதவிகளை அள்ளி வழங்கிவருகின்றன. அதேவேளை, சில பழைய மாணவர் சங்கங்கள் பாடசாலையின் பெயரால் சுயபிரபலம் தேடும் பிழைப்புவாத காரியங்களையும் செய்தும் வருகின்றன.

இவ்வாறானதொரு நிகழ்வாகத்தான், கடந்த அக்டோபர் 5 ஆம் சிட்னியில் "கீதவாணி" நிகழ்ச்சியும் நடைபெற்று முடிந்திருக்கிறதா என்று எண்ணத் தோன்றுகிறது.

கடந்தமாதம்யாழ்ப்பாணம்இந்துக்கல்லூரி அதிபர்விடயத்தில்ஏற்பட்ட வெட்கக்கேட்டையும்அதைத்தொடர்ந்து பாடசாலைக்கு ஏற்பட்ட களங்கத்தையும் இங்கு மீண்டும் யாழ். இந்துக்கல்லூரியின் பழையமாணவர் சங்கத்தின் சிட்னி செயற்குழுவினால் தன்னிச்சையாக மாற்றப்பட்டு, சிட்னியின் இசைக் கலஞனும் கீதாவணியில் முதன்முறையாக மேடையேற்றியதிரு.சாரங்கனுக்கு துதிபாடும் விழாவாகவும் நடந்துமுடிந்திருக்கிறது. இது பெரும் கவலைக்கு உள்ளாக்கியிருந்தது.

சாரங்கன் பற்றி தெரியாதவர்கள் யாரும் இல்லை. அவர் சிறந்த இசையமைப்பாளர். திறமையானவர். அதில் எந்த சந்தேகமுமில்லை. அவரைகுறைகூறவுமில்லை. அவர் மாத்திரமல்லாமல், அவரது குடும்பமே ஒரு இசைக்குடும்பம். சாரங்கனின் இசைகலைஞர்களுடன்மாத்திரம்உள்ளடக்கியவாத்திய அணியாக மேடையேறியிருந்தது. இது கவலையும் அதிர்ச்சியையும் அளித்தது. இந்த நிகழ்வில் பங்கெடுப்பதற்காக ஆஸ்திரேலியாவின் பல பாடகர்கள் சாராங்கனை அணுகியபோதும் "உங்களுக்கு பாடகராக இன்னும் காலமிருக்கிறது" - என்றுகூறி அவர்களை சாரங்கன் திருப்பியனுப்பியதாக சம்பந்தப்பட்ட தரப்புக்களிடமிருந்து அறியவருகிறது.

அத்துடன், வழமையாக "கீதவாணி" நிகழ்வில் நடைபெறும் ஆஸ்திரேலியாவின் திறமைகளை வெளிக்கொண்டுவரும் பாடல் போட்டியும் இந்த ஆண்டு நிறுத்தப்பட்டிருக்கிறது. இது "கீதவாணி" நிகழ்வின் நோக்கத்திற்கு மாறாக சங்கம் செயற்படுகின்றதோ என்ற எண்ணத்தை வலுப்படுத்தியிருக்கிறது.

மேலும், இந்த நிகழ்வுக்கு இலங்கையிலிருந்து பாடகர்களை தெரிவுசெய்யும் பொழுது எந்தவித செயற்பாட்டுவழிமுறைகளையும் பின்பற்றாது, பல இசைக்கலைஞர்களை அணுகி, பின்னர் அவர்களும்கூட வெட்டி ஒதுக்கப்பட்டிருப்பதாக தெரியவருகிறது. குறிப்பாக, கிளிநொச்சியைச் சார்ந்த செல்வி.தர்சினி எனும் பாடகியை அணுகி பின்னர் அவர் செப்ரெம்பர் 7 ஆம் திகதிசிட்னிஅருணோதயாக்கல்லூரிபழைய மாணவர்சங்கத்தினால்நடத்தப்படும்நிகழ்வில்கலந்துகொள்வதற்குசிட்னிக்குவருகை தரவுள்ளதால்அவரை"கீதவாணி"நிகழ்வில் எடுத்துக்கொள்ளமுடியாது என்ற சப்பைக் காரணத்துடன் தட்டிக்கழிக்கப்பட்டுள்ளார் என்று கூறப்படுகிறது. விழா மற்றும் சங்க முடிவு என்று பார்க்கையில் இது நியாயமொருதடவை"பெருமையுடன்"கூறிவிளக்க வேண்டியதில்லை. எத்தனை முறை கண்ணீர் விட்டு கதறி அழுதாலும் தீராத துயர் நிறைந்த சம்பவம் அது. பாடசாலையுடன் தொடர்புடையதரப்புக்கள்மாத்திரமல்லாமல் கல்விச்சமூகமே வெட்கித் தலைகுனிய வேண்டிய காரியமாக அது நடந்துமுடிந்தது.



அந்தக்களங்களத்திலிருந்து இனி அந்த பாடசாலையின் பெயரை கழுவிக்கொள்வது அந்தப்பாடசாலையுடன் தொடர்பிலுள்ள ஒவ்வொரு அமைப்பினதும் கடமையாகும். பாடசாலையை ஆத்மார்த்தமாக நேசிக்கும் எவரும் அந்தப்பொறுப்பிலிருந்து தவறிவிடமாட்டார்கள்.

ஆனால், இந்த எண்ணத்துடன் கடந்த ஒக்டோபர் ஐந்தாம் திகதி சிட்னியில் நடைபெற்ற"கீதவாணி"நிகழ்வுக்கு சென்றபோது அங்கு கண்ட காட்சி மனசை சுக்குநூறாக நொருக்கிவிட்டது.

2006 ஆண்டு - இந்தியாவின் இந்தியாவின் "சூப்பர் சிங்கர்" விழாவுடன் - தொடங்கிய "கீதாவணி" விருதுகள், சிட்னியின் - ஏன் ஆஸ்திரேலிய தமிழர்களின் பெருமைக்குரிய - அடையாளமாக இவ்வளவு காலமும் நடைபெற்றுவந்திருக்கிறது.

ஆனால், இந்த நிகழ்ச்சி இவ்வாண்டு ஆஸ்திரேலியாவின் தமிழ்தரப்பினரோடு மாத்திரம் ஊடாடிவிடாமல், தமிழர்கள் அல்லாதவர்களோடும்நெருக்கமான உறவைக் கொண்டது. அவர் தென்னிந்திய இசைக் கலைஞர்களோடு சேர்ந்து பணியாற்றிய புலமை பெற்றவர். சில ஆணடுகளுக்கு முன்னர், அவரை முன்னிறுத்தி சிட்னியிலும் மெல்பேர்னிலும் நடைபெற்ற "சாரங்கன் - ஹரிஹரன் இசைச்சங்கமம்" நிகழ்வு தமிழ் ரசிகர்கள் அனைரையும் வாய் பிளக்கவைத்திருந்தது. அவ்வளவுக்கு நேர்த்தியுடன் நடைபெற்ற தரமான நிகழ்வென்று கூறலாம்.

அப்படிப்பட்ட சாரங்கன் என்ற இசைக் கலைஞனது இசைக்குழுவை கொண்டு வந்து இவ்விழாவினை மேடையேற்றிய சங்கத்தினர் என்ற வகையில், யாழ் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் சிட்னி கிளையினர்தான் இம்முறை "கீதவாணி" நிகழ்வு தொடர்பில் எழுந்துள்ள கேள்விகளுக்கு விடை கூறவேண்டும்.

"உள்ளூர் இசைக் கலைஞர்களை ஊக்குவிப்பதற்காக" என்று காரணத்துடன் ஆண்டுதோறும் நடைபெறுகின்ற "கீதவாணி" இசைநிகழ்வில் இம்முறை - தமிழர்கள் அல்லாத - ஆஸ்திரேலிய இசைக்கலைஞர்களுடன் இலங்கையை சேர்ந்த இரண்டு மாகத்தான் இருந்தாலும், வளர்ந்துவரும் ஒரு ஈழத்துப்பாடகர் என்றவகையில் அவரை ஊக்குவித்திருக்கலாமோ என்று எண்ணத் தோன்றுகிறது.

இதிலுள்ள முரண் என்ன என்று கேட்டால், குறிப்பிட்ட கால இடைவெளிக்குள் இரண்டு நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்கு தர்சினியை அனுமதிக்கமுடியாது என்று "நீதி" சொன்னசாரங்கனும்அவரது சகாரட்ணம் மாஸ்டரும் கடந்த 2 ஆம் திகதி சிட்னியில் மகாத்மா காந்தியின் 150 ஆவது பிறந்ததின விழா இசை நிகழ்ச்சியில் ஆஸ்தான இசைமழை பொழிந்துவிட்டு வந்திருக்கிறார்கள்.

"தியாகதீபம்" திலீபன் கல்விகற்ற பாட-சாலை விழாவில் கலந்துகொள்வதற்காக இலங்கையிலிருந்து வரவழைக்கப்பட்ட ரட்ணம்மாஸ்டரும்மற்றும்இங்குள்ளஇசை மேதையான - கீதாவணிக்கு தலைமை தாங்கும்-சாரங்கனும்காந்தீயத்தினைமுன்னிலைப்படுத்திய விதமும் - அதற்குள் சென்று தமது கலையை பத்திரப்படுத்திய விதமும் - இந்த பிரச்சினைகளின் பின்னணியில கடந்துசெல்லக்கூடியஒன்றாகபார்க்கமுடியவில்லை.

**(21ஆம் பக்கம் பார்க்க)**

எஸ்.எஸ். ஜோதிட நிலையம்
பண்டித்: தேஜா ஜி
PANDIT: TEJA JI

உலகப் பிரசித்தி பெற்ற இந்தியாவின் பரம்பரை கைரேகை ஜோதிடரைச் சந்தியுங்கள்.







100% சரியான கணிப்பு

- ❒ திருமண பாக்கியம்
- ❒ நீதிமன்ற வழக்குகள்
- ❒ குழந்தைகள் பிரச்சினை
- ❒ அதிர்ஷ்ட எண்கள்
- ❒ கல்வி விஷயங்கள்
- ❒ லக்ஷ்மி பூஜா
- ❒ வேலைப் பிரச்சினைகள்
- ❒ வஸ்தூ பூஜா
- ❒ வணிக சிக்கல்கள்
- ❒ அதிர்ஷ்ட கல்

என் தொழிலை எவராலும் உடைக்கவும் முடியாது. எனக்கு முன் எவராலும் வேலை செய்யவும் முடியாது. இது எனது சவால்.

எந்தவொரு சிக்கலையும் சரிசெய்யவும், உடைக்க முடியாத பாதுகாப்பை வழங்கவும் அவர் சக்திவாய்ந்த இந்திய பிரார்த்தனைகளை செய்கிறார்.

உலகப் பிரசித்தி பெற்ற இந்திய ஜோதிடர் பண்டித் தேஜா ஜீயைச் சந்தியுங்கள்.
உங்கள் தனிப்பட்டதோ, பொதுவானதோ அனைத்து வகையான பிரச்சினைகளையும் சில நாட்களிலேயே தீர்த்து வைப்பார்.

தீர்க்க முடியாத பிரச்சினைகளைத் தீர்த்து 100 வீதம் நம்பிக்கையை அவர் கொடுப்பார்.

சிறப்பான எதிர்காலத்துக்காக இன்றே வாருங்கள்

முற்பதிவுகளுக்கு அழையுங்கள்
0420 832 444
53, Hampshire Road,
Sunshine, VIC 3020.

# கீதவாணி 2019
# அடையாளத்தை அடகுவைத்து நடத்திய பழைய மாணவர் சங்கத்தின் "பஜனை"

(20ஆம் பக்கத் தொடர்ச்சி)

மறுபுறத்தில், கீதவாணிக்கு ஆண்டாண்டு காலமாக ஒளி - ஒலி சேவையை வழங்கும் பழைய மாணவர்களை புறக்கணித்துவிட்டு தென்னிலங்கையின் பெரும்பான்மை இனத்தவர் ஒருவர் இம்முறை நிகழ்வுக்கு வரவழைக்கப்பட்டிருந்தார். அதன் விளைவு, ஈழத்து இளம் பாடகர்களின் குரலினை ரசிக்க வந்த ரசிகர்களை வெறும் இடியுடன் கூடிய மழையே நனைத்தது. தன் இசைக்கருவிகளின் சத்தத்தினை முன்னிலைப்படுத்துவதற்கு சாரங்கன் அவர்கள் இதைச்செய்தாரோ அல்லது உண்மையிலே இடம்பெற்ற ஒலித்தவறோ தெரியவில்லை. ஆனால், இசையை ரசிக்க கொடுத்துவைக்கவில்லை. அவ்வளவுதான்.

முன்வரிசையில் இருந்த பல வயது முதியவர்கள் சாப்பாட்டுக்கு கொடுக்கப்பட்ட இலகு காகிதத்தால் இரண்டு காதுகளையும் மூடிக்கொள்ளுமளவுக்கு ஒலியமைப்பு ஒப்பாரியாக இருந்தது. "நூற்றியிருபது டொலர்களை கொடுத்து நிகழ்ச்சிக்கு வந்து காதை பொத்திக்கொண்டா இருக்கவேணும்" - என்று மண்டபத்திலிருந்த கணவன் மனைவியிடையே புடுங்குப்பாடுகள்வேறு. காசா காதா பலர் இரண்டு காதுகளிலும் டைப்படித்துக்கொண்டார்கள்.

மற்றையது இம்முறை நிகழ்ச்சிக்கான டிக்கெட் விலை.



இம்முறை "கீதவாணி" நிகழ்ச்சிக்கான டிக்கெட்டுக்கள் இளையராஜா மற்றும் ஏ.ஆர். ரகுமான் நிகழ்ச்சி ரேஞ்சில் மிகைப்படுத்தப்பட்டு தனிநபருக்கு 60 டொலர்கள் மற்றும் குடும்பமாக என்றால் 150 டொலர்கள் என்று அறவிடப்பட்டது.

அதில், சிங்கிள் டிக்கட் 60 டொலர்கள் என்றாலும் அதற்கு கதிரையில் பெயர் போட மேலதிக 30 டொலர்கள் என பணம் புடுங்கும் நோக்கமாகவே இருந்தார்கள் சங்கத்தினர். என்ன செய்வது, தங்கள் பாடசாலை என்று பலரும் பாடசாலை நண்பர்களென சிலரும் யாழ் இந்து என்றால் பிரமாண்டம் தான் என்று முட்டாள்தனமாக ஒருசிலரும் முந்தியடித்துக்கொண்டு டிக்கெட்டை வாங்கியும் மண்டபம் நிறையவில்லை.

இப்படி 150 டொலர்களை கொடுத்து, குடும்பமாக சென்று, சாப்பாட்டுக்கு 42 டொலர்கள் (4 ரீ உட்பட), கார் பார்க்குக்கு 22 டொலர்கள் எனக்கொட்டிக்கொடுத்து, எல்லாம் பாடசாலைக்குத்தானே என்றுவிட்டு, உள்ளே போய் இருந்தால், அங்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் விழா என்பதற்கான எந்த அடையாளமும் இல்லை. பாடசாலை கொடியில்லை, பெயர் இல்லை. ஏதோ வேற்றின விழாவில் வந்திருப்பது போல் வியப்பாக இருந்தது. "இடம்மாறி வந்திட்டிடமோ" என்று மண்டபத்திற்கு வெளியே போய் மண்டபப்பெயரினை சரி பார்த்தவர்கள் பலர். நிகழ்ச்சி தொடங்கினால், ஒலிபெருக்கியில் போடப்பட்ட கல்லூரி கீதமும் இல்லை. தமிழ்த்தாய் வாழ்த்தும் இல்லை, ஆஸ்திரேலிய கீதமுமில்லை இந்து கல்லூரியின் தனித்துவமான அடையாளத்தினை மண்டபத்தின் எந்த மூலையிலும் காணமுடியவில்லை. மலசல கூடம் ஒன்றுதான் இலவசமாக அனுமதிக்கபட்டது.

ஒரு கல்லூரி பழைய மாணவனாக துயர் நிறைந்த நிகழ்வுக்குள் நுழைக்கப்பட்டவனாக சென்று திரும்பவேண்டியிருந்தது.

இம்முறை நிகழ்வு இசைப்பிரியர்களுக்கு கொடுத்த பணத்திற்கு பயனுடையதாக அமைந்ததா என்றால், ஒட்டுமொத்தத்தில் முற்றிலும் வீண் என்பதே பலரின் வாதம்.

நிகழ்வின் நல்ல விடயம் என்ன என்று கேட்டால், இலங்கையிலிருந்து இரண்டு இசைக்கலைஞர்கள் மற்றும் மூன்று பாடகர்கள் வரவழைக்கப்பட்டிருந்தார்கள். ஆனால் அவர்கள் எந்த வகையில் தெரிவுசெய்யப்பட்டார்கள் என்று யாருக்கும் தெரியாது. அறிந்தவர் நண்பர்களை சங்கத்தின் பெயரால் அழைத்தார்களா அல்லது உண்மையில் திறமானவர்களைத்தான் அழைத்தார்களா என்று பார்ப்பதற்கோ கேட்பதற்கோ அதிரும் ஒலிபெருக்கிகள் இடமளிக்கவில்லை.

ஒட்டுமொத்தத்தில், இம்முறை நடைபெற்ற "கீதவாணி" நிகழ்ச்சி பல காத்திரமான செய்திகளை ஆஸ்திரேலிய மக்களுக்கு சொல்லிச்சென்றிருக்கிறது.

அதாவது, சங்கங்கள் மாறி மாறி இசை நிகழ்ச்சிகள் என்ற பெயரில் தங்கள் விருப்பங்களுக்கு அமைய - தங்கள் எண்ணப்படி - தனிச்சையாக ஆட, பொதுமக்களினதும் அனுசரணையாளர்களினதும் பணம்தான் துணைநிற்கிறது.

பாடசாலை என்ற பெயரில் - பாடசாலையின் நிறமே இல்லாமல் - தனிமனித புகழ்பாடும் இசை நிகழ்வுகள் பாடசாலைகளின் அடையாளத்தினையே அழித்து தனிமனிதர்களை வளர்த்துவிடுகின்றன.

கல்லூரிக்கான நிகழ்ச்சி என்று நடத்தப்படுகின்ற இவ்வாறான படோபாகார ஆடம்பரங்களால் சேகரிக்கப்பட்ட பணத்தில் எவ்வளவு தொகை பாடசாலைக்கு போகிறது? எவ்வளவு பணம் வெளியே போகிறது என்பதை இவர்களை கொஞ்சமாவது உணர்ந்தார்களா?

இது "கீதாவணி" நிகழ்வுக்கு மட்டுமல்ல பொதுவாக எல்லா அமைப்புக்களுக்கும் பொருந்தும். ■

## சிட்னி தமிழ் மன்றத்தின் 'தில்லானா' கலை நிகழ்ச்சியிலிருந்து...









CEYLON EXPRESS
MONEY TRANSFER
❖ Best Rates Guarantee
❖ Same Day Bank Transfer
❖ Responsible Customer Support
❖ Easy, Quick Internet Money Transfer
127, Walker st, Dandenong
CONTACT : OSMAN 0402 396 052


Blinds Screens Security Doors
Factory Direct
Free Measure & Quotes - Delivery and Install - Servicing all Suburbans
OUR SERVICES : ● PLANTATION SHUTTERS ● TIMBER BLINDS ● SCREEN BLINDS ● VERTICAL BLINDS
● ROLLER BLINDS ● ROMAN BLINDS ● SECURITY DOORS ( All Types) ● FLY SCREENS
● WARDROBE DOORS ● CANVAS AWNINGS ● SPLASH BACKS ● MIRRORS
Contact - Raja (Roger) Mob: 0411 734 484 Tel: 93 330 770
Email: galalxyoz@bigpond.com
GalaxyOZ (PVT) Ltd. Factory 31/283 Rex Road Campbellfield Victoria 3061

# வலைஞர் பதிகம்













பல் மருத்துவர்: உங்க பல் எப்படி உடைஞ்சுது?

கணவர்: என் பொண்டாட்டி செஞ்ச சப்பாத்தி கல்லு மாதிரி இருந்தது டாக்டர்

பல் மருத்துவர்: கல்லு மாதிரி இருக்குதுனு தெரியுதுல. அப்புறம் ஏன் சாப்பிட்டாய்..?

கணவர்: அத சாப்பிடாததாலதான் டாக்டர் பல்லு உடைஞ்சது!







**ஆண்டவா...**
பாம் போடுபவர்களை
நானே பார்த்துக்
கொள்கிறேன்.
மீம்
போடுபவர்களிடமிருந்து
என்னைக் காப்பாற்று.




மனைவி : என்னங்க.. அதோ அங்க உக்காந்து தண்ணியடிக்கிறாரே.. அவரு ஒரு தடவை என்னை பொண்ணு பார்க்க வந்திருந்தாரு.

கணவன்: சரி அதுக்கு என்ன இப்போ?


மனைவி: நான் அவரை கல்யாணம் பண்ணமாட்டேன்னு சொன்னதினால அதை நினைச்சே இத்தனை வருஷமா தண்ணியடிக்கிறாராம்.

கணவன் : அடப்பாவி...! அந்த சந்தோஷத்தை இத்தனை வருஷமாவா கொண்டாடிக்கிட்டிருக்கான்..?




எழுத்துக்களைப் படித்துவிட்டு "உங்களைப்போல் காதலிக்கவேண்டும்", "உங்களைப்போல் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்", "உங்களைப்போல் வாழ்க்கையை அனுபவிக்க வேண்டும்" எனப் பிதற்றாதீர்கள். கற்பனைவளம் கைகூடியவர்களுக்கு, வாசிப்பவர்களை வசியம் செய்வது கைவந்த கலை.

# மாத ராசிபலன்



## மேடம்

எதையும் உடனடியாக நம்பாமல் ஆராய்ந்து செய்யும் காரியங்கள் சாதகமான பலன் தரும். மருத்துவம் சார்ந்த செலவுகள் நேரலாம். சுப நிகழ்ச்சிகளில் இருந்த தடைகள் அனைத்தும் அகலும். மற்றவர்களுக்காக நீங்கள் எடுக்க கூடிய முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும்.

குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் நீங்கும். கணவன், மனைவிக்கிடையே கருத்து வேற்றுமை அகலும். பிள்ளைகள் உங்கள் ஆலோசனையை செவி மடுத்து கேட்பார்கள். அவர்களுக்காக நீங்கள் எடுக்கக் கூடிய முயற்சிகள் பலிதமாகும். உறவினர்கள், நண்பர்களிடம் கவனமாக பழகுவது நல்லது.

தொழில் வியாபாரம் தொடர்பான சில முக்கிய முடிவுகள் எடுக்க நேரிடும். பணவரத்து தாமதப்படும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் சக ஊழியர்களுடன் கவனமாக பழகுவது நல்லது. அடுத்தவரின் உதவி கிடைக்கும். புதிய பொறுப்புகள் ஏற்க வேண்டி இருக்கும். செயல் திறன் அதிகரிக்கும்.

மாணவர்களுக்கு கல்வியில் அதிக கவனம் செலுத்துவது நன்மை தரும். கவனமாக அடுத்தவர்களிடம் பழகுவது நல்லது.

## இடபம்

இந்த மாதம் சிற்றின்ப செலவு அதிகரிக்கும். மனதில் இருந்து வந்த கலக்கம் நீங்கும். காரணமே இல்லாமல் வீண் பழி சுமக்க நேரிடும். ஒதுங்கி சென்றாலும் வலிய வந்து சிலர் சண்டை போடலாம் கவனமாக இருப்பது நல்லது. கண் சம்பந்தமான கோளாறுகள் ஏற்படலாம். வேளை தவறி உணவு உண்ணும்படி நேரலாம்.

குடும்பத்தில் சுபகாரியம் நடக்கும். கணவன் மனைவி ஒருவரது பேச்சை மற்றவர் கேட்பதன் மூலம் நன்மை உண்டாகும். பிள்ளைகளின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. நட்பு ரீதியில் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நன்மையைத் தரும்.

தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் பார்ட்னருடன் அனுசரித்து செல்வது நல்லது. வியாபார போட்டிகள் குறையும். எல்லா துறைகளிலும் லாபம் கிடைக்கும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் மிகவும் கவனமுடன் பணியாற்றுவது நல்லது.

மாணவர்களுக்கு தன்னம்பிக்கையுடன் செயல்பட்டு கல்வியில் முன்னேற்றம் காண்பீர்கள். எதிர்ப்புகள் விலகும்.

## மிதுனம்

பணம் சம்பாதிக்கும் திறமை அதிகமாகும். தடை பட்டு வந்த காரியங்கள் சாதகமாக நடந்து முடியும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். ஆன்மீகத்தில் நாட்டம் அதிகரிக்கும்.

குடும்பத்தில் இதமான சூழ்நிலை காணப்படும். வாழ்க்கை துணையின் உடல் நலத்தில் கவனம் தேவை. அடுத்தவர் செயல்கள் உங்கள் கோபத்தை தூண்டுவதாக இருக்கலாம். அனுசரித்து செல்வது நல்லது. பிள்ளைகளிடம் கனிவாக நடந்து கொள்வது நல்லது.

தொழிலில் மரியாதையும், அந்தஸ்தும் அதிகரிக்கும். கடினமான முயற்சிகள் கூட எளிமையாக செய்ய முடியும். தொழில் வியாபாரத்தில் இருந்த பண தட்டுப்பாடு நீங்கும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் நேர்மையாக சிறப்பாக பணிகளை செய்து மேல் அதிகாரிகளிடம் பாராட்டுக்கள் கிடைக்க பெறுவார்கள்.

மாணவர்களுக்கு கல்வியில் வெற்றி பெற முழுமூச்சாக பாடுபடுவீர்கள். புதிய நட்பு கிடைப்பதுடன் அவர்களது ஆலோசனையும் வெற்றிக்கு உதவும். ஆனால் எதிலும் எச்சரிக்கையுடன் செயல்படுவது நல்லது.

## கடகம்

காரியதடை தாமதம் நீங்கும். எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் பலிதமாகும். வழக்கு விவகாரங்கள் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும். எதிர்ப்புகள் விலகும். பொருளாதாரம் உயரும். நினைத்த காரியத்தை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். தாமதமான காரியங்கள் வேகம் பிடிக்கும். வீண்கவலை விலகும். அடுத்தவர் விஷயங்களில் தலையிடுவதை தவிர்க்கவும்.

குடும்பத்தில் இருப்பவர்களின் செயல்கள் உங்களுக்கு மனவருத்தத்தை தருவதாக இருக்கலாம். கவனமாக கையாள்வது நல்லது.

தொழில் வியாபாரத்தில் வேகமான போக்கு காணப்படும். சரக்குகளை அனுப்பும் போதும் பாதுகாத்து வைக்கும் போதும் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. கிடப்பில் இருந்த கடன்கள் பைசலாகும்.

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு புதிய பதவி புதிய பொறுப்புகள் ஏற்படலாம். மேல் அதிகாரிகள் கொடுத்த வேலையை செய்து முடித்து அவர்களின் நன்மதிப்புக்கு ஆளாவீர்கள்.

மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றமடைய தேவையான உதவிகள் கிடைக்கும். பொறுப்புகள் அதிகரிக்கும்.

## சிம்மம்

இந்த மாதம் பலவகைகளிலும் நன்மை உண்டாகும். இழுபறியாக இருந்த சில வேலைகள் சாதகமாக நடந்து முடியும். பணவரத்து அதிகரிக்கும்.

குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். கணவன் மனைவி இருந்த மந்த நிலை மாறும். பிள்ளைகள் விஷயத்தில் எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் பலிதமாகும். உறவினர்கள் வருகை இருக்கும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டாகும். உங்கள் சொல்லுக்கு மதிப்பு மரியாதை அதிகரிக்கும்.

தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த முன்னேற்றம் கிடைக்கும்.

உத்தியோகத்தில் இருப்பவர்களின் செயல்திறமை வெளிப்படும். சுதந்திரமாக செயல்படும் வாய்ப்பு கிடைக்கும். வரவேண்டிய பணம் வந்து சேரும். மேலிடத்தில் இருந்து வந்த கருத்து மோதல்கள் அகலும்.

மாணவர்களுக்கு புதிய நண்பர்கள் கிடைப்பார்கள். அவர்கள் மூலம் கல்வியில் முன்னேற்றம் காண உதவி கிடைக்கும்.

## கன்னி

எதிர்பார்த்த பணவரத்து இருக்கும். உடல் ஆரோக்கியம் பெறும். உழைப்பு வீணாகும். வீட்டை விட்டு வெளியில் தங்க நேரலாம். திடீர் செலவு உண்டாகும். அடுத்தவருக்கு எவ்வளவு நல்லது செய்தாலும் அது எடுபடாமல் போகலாம். அதே நேரத்தில் பொருள் வரத்து அதிகரிக்கும். வாகனம், பூமி மூலம் லாபம் கிடைக்கும்.

குடும்பத்தில் இருந்த பிரச்சனை குறையும். கணவன், மனைவி இருவரும் பேசி எடுக்கும் முடிவுகள் நன்மை தரும்.

தொழில், வியாபாரத்தில் எதிர்பாராத தடங்கல்கள் வரலாம். பணவரத்து இருந்தாலும் தேவை அதிகரிக்கும். புதிய வாடிக்கையாளர்கள் கிடைக்க பெறுவீர்கள். அவர்களால் நன்மையும் உண்டாகும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் அதிகம் பணியாற்றுவதால் உடல் சோர்வடைய நேரலாம். வேலை செய்யும் இடத்திலும் மேல் அதிகாரிகளிடமும் வீண் பேச்சுக்களை தவிர்ப்பது நல்லது. எதிர்பார்த்த பணி உயர்வு கிட்டும்.

மாணவர்களுக்கு கல்வியில் இருந்த தடைகள் நீங்கி முன்னேற்றம் காண்பீர்கள். பெற்றோர், ஆசிரியர் பாராட்டும் கிடைக்கும்.

## துலாம்

இழுபறியாக இருந்த சில வேலைகள் சாதகமாக நடந்து முடியும். பணவரத்து அதிகரிக்கும்.

குடும்பத்தில் மகிழ்ச்சியான சுபகாரியங்கள் கொண்டாட்டங்கள் இருக்கும். கணவன் மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும். குழந்தைகள் மூலம் மகிழ்ச்சி கிடைக்க பெறுவீர்கள்.

தொழில் வியாபாரத்தில் இருந்து வந்த பின்தங்கிய நிலை மாறும். எதிர்பார்த்த ஆர்டர்கள் வந்து சேரும். வியாபார போட்டிகள் தடை தாமதங்கள் நீங்கும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் நினைத்ததை சாதிக்க வேண்டும் என்ற வேகத்தில் பணிபுரிவார்கள். சிலருக்கு புதிய பதவி அல்லது புதிய பொறுப்புகள் கிடைக்க பெறுவார்கள்.

மாணவர்களுக்கு கல்வி தொடர்பான விஷயங்களில் முடிவு எடுக்கும் போது தீர ஆலோசித்து செயல்படுவது நல்லது. புதிய முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம்.

## விருச்சிகம்

முயற்சிகள் வெற்றி பெறும். எதையும் ஆராய்ந்து முடிவுகளை எடுப்பது நல்லது. வேகத்தை குறைத்து விவேகமுடன் செயல்படுவது நன்மை தரும். எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியையும் கவனத்துடன் வைப்பது நல்லது. பணவரத்து அதிகமாகும். பெரியோர்களிடம் பகைமை பாராட்டுவதை தவிர்ப்பது நல்லது.

குடும்பத்தை விட்டு வெளியே சென்று தங்க நேரிடலாம். கணவன், மனைவிக்கிடையே மகிழ்ச்சி நீடிக்கும்.

தொழில் வியாபாரத்தில் திடீர் போட்டி இருக்கும். வீண் வார்த்தைகளை பேசுவதை தவிர்ப்பது நல்லது.

உத்தியோகத்தில் கூடுதல் பணிச்சுமையை ஏற்க வேண்டி இருக்கும். மேலதிகாரிகளிடம் உங்களது கருத்துக்களை தெரிவிக்கும்போது கவனமாக பேசுவது நல்லது. பணி நிமித்தமாக பயணங்கள் ஏற்படலாம்.

மாணவர்களுக்கு கல்வியில் இருந்த தடைகள் விலகி முன்னேற்றம் காண்பீர்கள். மற்றவர்களுடன் இருந்த கருத்து வேற்றுமை நீங்கும்.

## தனுசு

திடீரென்று கோபம் வரும். ஏதாவது ஒரு வகையில் அடுத்தவரிடம் வீண் பேச்சு கேட்க நேரலாம் கவனம் தேவை.

குடும்பத்தில் ஏதாவது வேண்டாத பிரச்சனை தலை தூக்கலாம். உறவினர்கள் நண்பர்கள் பிள்ளைகள் என்று யாரிடமும் வீண் சண்டையை தவிர்ப்பது நல்லது. கணவன், மனைவிக்கிடையே திடீர் கருத்து வேற்றுமை ஏற்படலாம்.

தொழில் வியாபாரம் லாபகரமாக நடக்கும். வாக்கு வன்மையால் புதிய வாடிக்கையாளர்கள் கிடைக்க பெறுவீர்கள். தடைபட்ட ஆர்டர்கள் வந்து சேரும். அரசாங்க ரீதியில் இருந்து வந்த தேக்க நிலை மாறும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேல் அதிகாரிகளிடம் அனுசரித்து செல்வது நல்லது. செய்யும் வேலை பற்றி மனதில் திருப்தியற்ற எண்ணம் உண்டாகும்.

மாணவர்களுக்கு கல்வி பற்றிய கவலை விலகும். விளையாட்டு போட்டிகளில் சாதகமான பலன் கிடைக்கும்.

## மகரம்

இந்த மாதம் எடுத்து கொண்ட காரியங்களில் தாமதமான போக்கு காணப்படும். உங்கள் வார்த்தைக்கு வெளிவட்டாரத்தில் மதிப்பு அதிகரிக்கும்.

குடும்பத்தில் கணவன், மனைவிக்கிடையே இருந்த பிரச்சனைகள் குறையும். குழந்தைகளின் எதிர்கால நலனில் அக்கறை காட்டுவீர்கள். விருந்தினர் வருகை இருக்கும்.

தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் நீங்கும். பணவரத்து திருப்திகரமாக இருக்கும். வாடிக்கையாளர்களின் கருத்துக்களுக்கு மதிப்பு கொடுப்பது நன்மை தரும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் சாமர்த்தியமாக செயல்பட்டு மேல் அதிகாரிகளின் பாராட்டுகளை பெறுவார்கள். பிடித்தமான இடத்திற்கு வேலை மாற்றம் உண்டாகும். சக ஊழியர்கள் நட்புடன் பழகுவார்கள்.

மாணவர்களுக்கு உடல் சோர்வு உண்டாகலாம். வீண் அலைச்சலை தவிர்த்து படிப்பில் கவனம் செலுத்துவது நல்லது.

## கும்பம்

இந்த மாதம் எதிர்பார்த்த காரிய வெற்றி உண்டாகும். புத்திசாதுரியத்தால் எதையும் செய்து முடிக்க முடியும். அனுபவபூர்வமான அறிவுத்திறன் கை கொடுக்கும். பணவரத்து தாமதப்படும்.

குடும்பத்தில் அமைதி குறைவது போல் தோன்றும் சகோதரர்கள் வழியில் ஏதாவது பிரச்சனை தலைதூக்கலாம் கவனம் தேவை.

தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். பல தடைகளை தாண்டி செயல்படுவீர்கள். வேகம் அதிகரிக்கும். நீண்ட நாட்களாக கிடப்பில் போட்டிருந்த காரியங்களை செவ்வனே செய்வீர்கள். எதிர்பார்த்த லாபம் வரும். நீண்ட நாட்களாக எதிர்பார்த்த ஆர்டர்கள் கைக்கு வந்து சேரும்.

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு சக ஊழியர்களுடன் இருந்த கருத்து வேற்றுமை குறையும். வர வேண்டிய பணம் வந்து சேரும்.

மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் காண கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. வாகனங்களில் செல்லும்போது எச்சரிக்கையாக செல்வது நல்லது.

## மீனம்

வீண் வாக்கு வாதங்களை அறவே விரும்பாத மீன ராசியினரே இந்த மாதம் விரும்பிய இடமாற்றம் கிடைக்கும். பயணங்கள் பல இருந்தாலும் அதன் மூலம் நன்மைகளைப் பெறுவீர்கள்.

குடும்பத்தில் திருமணம் போன்ற சுபகாரியங்கள் நடக்கும். எல்லா வகையிலும் நன்மை ஏற்படும். கணவன், மனைவிக்கிடையே இருந்த மனவருத்தம் நீங்கி மகிழ்ச்சியுடன் காணப்படுவார்கள்.

தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் குறையும். பழைய பாக்கிகள் வசூலாகும். பணியாட்கள் மூலம் நன்மை ஏற்படும். சாமர்த்தியமான பேச்சின் மூலம் வாடிக்கையாளர்களிடம் நன் மதிப்பை பெறுவீர்கள்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் எதை பற்றியும் கவலைப்படாமல் செயலாற்றுவார்கள். வேலை பார்க்கும் இடத்தில் இருந்த பிரச்சனைகள் தீரும். மேலதிகாரிகளுடன் இணக்கமான சூழ்நிலை நிலவும்.

மாணவர்களுக்கு கல்வியில் வெற்றிபெற தடைகளை தாண்டி படிக்க வேண்டி இருக்கும். பெரியோரின் ஆலோசனைபடி செயல்படுவது நல்லது.



உங்கள் அதிநவீன பாதுகாப்புத் தேவைகளுக்காக இன்றே தொடர்புகொள்ளுங்கள்!
NS Systems
SECURITY
0447 533 555
www.nssystems.com.au
NS
We are registered and licensed by Victoria Police.
* Standard Installation, 3 Year parts (Manufacturer Defects) & 3 Year Labor Warranty !!
+ 0.75c Per day, 6 Months Up Front Payment
UTECH
SOLUTIONS
Corporate Group
info@nssystems.com.au
PO BOX 633, Noble Park, VIC 3174
Private security Business License: 910-932-10S
Protect your
Home & Family,
Secure your
Premises & Business.

# ஜோகி மஹார்ஷி ஜோதிட நிலையம்



## பண்டித் ஓம் சாய்






குருஜி அவர்கள் உங்களுடைய கடந்த காலம், நிகழ்காலம்,
எதிர்காலம் மற்றும் கைரேகை, முக லக்ணம்,
ஜாதகம், புகைப்படம் பார்த்து நிரந்தரத் தீர்வு கூறுவார்

- தொழில்
- கல்வி
- வியாபாரம்
- திருமணம்
- உடல்நலம்
- வசியம் செய்தல்
- வாஸ்து சாஸ்திரம்
- காதல் விவகாரம்
- குழந்தை பாக்கியம்
- நாம நட்சத்திரம்
- வழக்கு மன்ற விவகாரம்
- கண்திருஷ்டி கழித்தல்
- லக்ஷ்மி வசீகரம்
- தாம்பத்தியக் கோளாறு
- கணவன் மனைவி ஒற்றுமையின்மை

எல்லா காரியங்களுக்கும் பரிகாரம் செய்து தரப்படும்



உங்கள் வாழ்க்கை சந்தோஷமாக அமைய
மூல மந்திரம், ஓம் கார மந்திரம், துர் அதிஷ்டம்
மற்றும், வசியம், மந்தர செய்வினைகள்,
பில்லி சூனியம் ஆகியவற்றிலிருந்து நிவாரணம்
செய்து கொடுக்கப்படும்

**எந்தப் பிரச்சனை ஆனாலும்**
**100% உத்தரவாதம்**

30, ARCHER STREET,
UPPER MOUNT GRAVATT QLD 4122

astroyogimaharshi@gmail.com

+61451542442

www.astroyogimaharshi.com.au

AVAILABLE IN SYDNEY / MELBOURNE / CANBERRA


நத்தார் பண்டிகை
உங்களை நெருங்குவதை
நீங்கள்
அறிவீர்களா?
Transco™
CARGO
Send Something Special to your Loved Ones
CHRISTMAS SHIPPING SCHEDULE
MONTH | FINAL CUT OFF DATE | EST ARRIVAL IN SL
August 2019-08-03 2019-09-10
August 2019-08-10 2019-09-17 *
August 2019-08-17 2019-09-24
August 2019-08-24 2019-10-01 *
August 2019-08-31 2019-10-08 *
September 2019-09-07 2019-10-15
September 2019-09-14 2019-10-22 *
September 2019-09-21 2019-10-29
September 2019-09-28 2019-11-05 *
October 2019-10-05 2019-11-13
October 2019-10-12 2019-11-19 *
October 2019-10-19 2019-11-26
October 2019-10-26 2019-12-03 *
November 2019-11-02 2019-12-10
November 2019-11-09 2019-12-17 *
November 2019-11-16 2019-12-24
November 2019-11-23 2019-12-31 *
November 2019-11-30 2020-01-07 *
December 2019-12-07 2020-01-14
December 2019-12-14 2020-01-21 *
December 2019-12-21 2020-01-28
December 2019-12-28 2020-02-04
Box Type
Tea Chest Box X
Number of Boxes
2
Free Boxes 1
ORDER
TRANSCO CARGO
மாத்திரமே வாராந்தம்
உங்கள் பொருட்களை
கப்பல் ஊடாக
இலங்கைக்கு
இலகுவில்
அனுப்புகிறது
* Only at Campbellfield, & Dandenong South Transco offices.
45 Adrian Rd, CAMPBELLFIELD - (03) 9357 7228
206-208 Discovery Road, DANDENONG SOUTH - (03) 9703 2255
follow us on
We love to deliver
SYDNEY - 02 9897 0004 | BRISBANE - 07 3219 0203 | ADELAIDE - 08 8322 8825 | PERTH - 08 9452 7707 | CANBERRA - 02 62821905 | DARWIN - 08 79790002 | TASMANIA - 03 90174167
1300 1 TRA
M.AU